26

32°c
கூடிய வெப்பநிலை 39 c
குறைந்த வெப்பநிலை 26 c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/= | சுடர்: 29 | கதிர்: 144 | வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 06, சனி 19.04.2014

19 APR

# சுயாட்சியைக் கொடுங்கள்

## தேசிய சமாதானப் பேரவை அரசுக்கு அவசர வேண்டுகோள்

கொழும்பு, ஏப்ரல் 19
தமிழர்களுக்குச் சுயாட்சி அளவுக்கான அதிகாரத்தைக் கொடுக்கக்கூடியதான அமைப்பு ஒன்றை உருவாக்குங்கள் என்று இலங்கை அரசிடமும் ஏனைய அரசியல் கட்சிகளிடமும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது தேசிய சமாதானப் பேரவை. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்கும் படியும் அது கோரியுள்ளது.

“ போர் முடிவுற்று ஐந்து ஆண்டுகள் முடிவுறும் நிலையில் இப்போது விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் உருவாகின்றது என்று அரசு கூற ஆரம்பித்துள்ளது. பொலிஸார் ஒருவரின் காலில் சுட்டார்கள் என்று தெரிவித்து சந்தேகநபர்களான மூன்று பேரை படையினர் சுட்டுக் கொன்றிருப்பதை அடுத்து நிலைமை மோசமடைய ஆரம்பித்துள்ளது. ”

நாட்டில் அண்மையில் மூன்று பேர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னணியில் உருவாகியிருக்கும் நிலைமையை அடுத்து தேசிய சமாதானப் பேரவை அவசரமாக இந்தக் கோரிக்கைகளை விடுத்துள்ளது. இது தொடர்பாக அது நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளின் பின்னர் இப்போது, விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் உருவாகிறது என்று இலங்கை அரசு சொல்ல ஆரம்பித்திருக்கிறது.

பொலிஸ் ஒருவரைக் காலில் சுட்டார்கள் என்று கூறப்பட்ட சந்தேகநபர்களான மூன்று பேரை படையினர் சுட்டுக் கொன்றிருப்பதை அடுத்து நிலைமை மோசமடைய ஆரம்பித்திருக்கிறது.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர்தான் இத்தகைய வன்முறைகள் வடக்கில் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் படையினர் அங்கு சோதனைகளையும் தேடுதல்களையும் தீவிரப்படுத்தியிருக்கின்றனர் என்பதையும் தேசிய சமாதானப் பேரவை கவனத்தில் கொண்டிருக்கிறது. வடக்கில் இருந்து வரும் செய்திகள், சிவில் சமூகச் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் தலையீடுகள் மீண்டும் அதிகரித்திருக்கின்றன என்று சொல்கின்றன.

இரு தரப்புகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று காணப்படாத வரையில் புலம்பெயர் தமிழர்கள் தமது செயற்பாடுகளை நிறுத்தப்போவதில்லை. இதனாலேயே சர்வதேச சமூகமும் அவர்கள் பால் கழிவிரக்கம் கொண்டுள்ளது. அதனாலேயே தேசிய சமாதானப் பேரவை, தமிழர்களுக்குச் சுயாட்சிக்கு நிகரான அதிகாரங்களைக் கையளிப்பதற்கான அமைப்பை உருவாக்க அரசும் ஏனைய கட்சிகளும் இணைந்து நடவடிக்கை

23 ஆம் பக்கம் பார்க்க

## மூவர் விடுதலையில் விரைவில் தீர்ப்பு

சென்னை.ஏப்.19
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் உள்ளிட்ட 7 பேரை விடுவிப்பது என்ற தமிழக அரசின் முடிவுக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மனு மீதான தீர்ப்பு இன்னும் ஒரு வார காலத்தினுள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார் இந்திய உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பி.சதாசிவம்.

— 23 ஆம் பக்கம் பார்க்க

## டிராக்டரில் இருந்து விழுந்து குடும்பஸ்தர் சாவு

மாங்குளம்.ஏப்.19
நெல் மூடைகள் ஏற்றி வந்த டிரக்டரின் மேல் அமர்ந்து பயணம் செய்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் அதிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.
நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் துணுக்காய் கொக்காவில் வீதியைச் சேர்ந்த எஸ். வரதகுமார் (வயது -40) என்ற


— 23 ஆம் பக்கம் பார்க்க

## வெடிக்காத நிலையில் ஆர்.பி.ஜி. ஷெல் மீட்பு

மாங்குளம்,ஏப்.19
மாங்குளம் நீதிபுரம் பகுதியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து வெடிக்காத நிலையில் ஆர்.பி.ஜி ஷெல் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.
இப் பகுதியைச் சேர்ந்த ஒரு வீட்டில் கிணற்றைத் துப்புரவு செய்யும்போதே இச் ஷெல் வீட்டு உரிமையாளரால் கண்டு

— 23 ஆம் பக்கம் பார்க்க

## திடீரெனக் கரையொதுங்கும் மீன்கள்



செல்வச்சந்நிதி கோயிலுக்கு பின்புறமுள்ள தொண்டமானாறு கடல்நீரேரியில் இருந்து ஆயிரக்கணக்கான கிலோ எடை கொண்ட திரளி மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கிய வண்ணமுள்ளன.
(மேலதிக தகவல்கள் 3 ஆம் பக்கத்தில்)

## சிவப்பு அறிவிப்பில் தொடர்ந்தும் கே.பி.

கொழும்பு, ஏப்.19
தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆயுத விநியோக வலையமைப்பின் முக்கிஸ்தரான கே.பி. என்ற குமரன் பத்மநாதன் தொடர்ந்தும் சர்வதேச பொலிஸ் (இன்ரபோலின்) சிவப்பு அபாய அறிவிப்பில் உள்ளார் என்று தெரியவந்துள்ளது.
இன்ரபோலின் சிவப்பு பிடிவிறாந்து பட்டியலில் கே.பியின் பெயர் நீக்கப்பட்டுள்ளது என்று இலங்கையின் பொலிஸ்

23 ஆம் பக்கம் பார்க்க

எம்மைப் பின்தொடருங்கள்...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint

## இந்தியா உதவி செய்யாது இனி ஆயுதமேந்த முடியாது

### புலிக் கதை அரசின் நாடகமே புட்டுவைக்கின்றார் விக்கிரமபாகு

கொழும்பு, ஏப்.19
இந்தியாவின் உதவி இல்லாமல், தமிழர் தரப்பால் இலங்கையில் ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு செல்ல முடியாது. இது அவர்களுக்கும் நன்கு தெரியும். எனவே, மீண்டும் புலி உருவாக்கம் என்று அரசு அச்சம் கொள்வதானது அரசியல் நோக்கங்களுக்காக அரங்கேற்றப்படும் நாடகமாகும் - என்று கூறுகின்றார் நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண.
புலிகள் அமைப்புக்கு புத்துயிர் கொடுக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக

23 ஆம் பக்கம் பார்க்க

## குற்றச் செயல்களில் ஈடுபட்ட 191 பேர் கடந்த வாரம் கைது

யாழ்ப்பாணம்.ஏப்.19
யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 191 பேர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர்கள் சந்திப்பின் போதே பொலிஸார் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.
இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியதாவது:-
"யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 126 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமைக்காக ஒருவரும், மது போதையில் வாகனம் செலுத்திய 21பேரும், அடிதடியில் ஈடுபட்ட 41 பேரும், பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 9 பேரும், சந்தேகத்

23 ஆம் பக்கம் பார்க்க

## ‘தமிழீழம் மலரும்’ துண்டுப்பிரசுரம் ஒட்டினர் எனக் கூறி இருவர் கைது

### மேலும் ஒருவருக்கு வலை வீச்சு

யாழ்ப்பாணம், ஏப்.19
'தமிழீழம் மலரும்' என்ற துண்டுப் பிரசுரம் ஒட்டிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் அதனோடு தொடர்புடைய ஒருவரைப் பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தேடி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

“ கடந்த மாதம் இவ்வாறானதொரு துண்டுப் பிரசுரம் வைத்திருந்தனர் என்று தெரிவித்து பளையில் கைது செய்யப்பட்டனர். அதையடுத்தே வடக்கில் புலிகளைத் தேடும் படலம் ஆரம்பமாகியது. ”

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகே 'தமிழீழம் மலரும்' என்ற துண்டுப் பிரசுரத்தை ஒருவர் கடந்த புதன்கிழமை ஒட்டியதை பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் அவதானித்தனர்

23 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரூ.22 லட்சம் பெறுமதியான நகைகள் கடந்த வாரம் மட்டும் கொள்ளை

## யாழ்.பொலிஸார் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப்.19

குடா நாட்டில் கடந்த வாரம் 22 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் உட்பட ஒரு இலட்சம் ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள யாழ். பொலிஸார், அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே பொலிஸார் இந்தத் தகவலை வெளியிட்டனர். இதுகுறித்து அவர்கள் மேலும் கூறும்போது:-

"இராஜசிங்க வீதி 3ஆம் ஒழுங்கை கல்வியங்காட்டு பகுதியில் உள்ள வீட்டில் கடந்த 12 ஆம் திகதி 98 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும், கடந்த 13ஆம் திகதி கொடிகாமம் மீசாலை வடக்கு பகுதியில் உள்ள வீட்டில் 15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் மற்றும் கைத்தொலைபேசியும், கடந்த 13 ஆம் திகதி மிருசுவில் கொடிகாமம் பகுதியில் உள்ள வீட்டில் 7 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் ஒரு இலட்சம் ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பான அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன - என்று தெரிவித்தனர்.

அதேவேளை, கடந்த 12 ஆம் திகதி அரசடி வீதி வடலியடைப்பு பகுதியில் இரண்டரை பவுண் தங்க நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் கோப்பாய் பால்பண்ணைப் பகுதியைச் சேர்ந்த மூவர் கடந்த 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-14)

# கடந்த வாரத்தில் மட்டும் திருடப்பட்ட பொருள்களின் பெறுமதி ரூ.7 லட்சம்

யாழ்ப்பாணம், ஏப்.19

குடா நாட்டில் கடந்த வாரத்தில் மட்டும் 7 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே பொலிஸார் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

யாழ்.நகரில் கடந்த 12 ஆம் திகதி வீடொன்றில் 4 இலட்சத்து 39 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கொழும்பு - 6 ஐச் சேர்ந்த வீட்டின் உரிமையாளர் முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார். கடந்த 12 ஆம் திகதி நாவந்துறை பகுதியில் உள்ள வீட்டில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த நபர் ஒருவர் முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார். கடந்த 15 ஆம் திகதி சுன்னாகம் பகுதியில் உள்ள வீடொன்றில் 22 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

அத்துடன் சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள வீட்டில் கடந்த 16 ஆம் திகதி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப்பெட்டியும், ஜின்னா வீதியில் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினியும், கொட்டடியில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரமும் களவாடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-14)

## வெள்ளைப் பூரான் கடித்து ஒருவர் மருத்துவமனையில்

வெள்ளைப்பூரான் கடிக்கு இலக்கான ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பருத்தித்துறையை சேர்ந்த 36 வயதான எஸ்.ஈழவளவன் என்பவரே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவராவார்.

நேற்று இரவு வெள்ளை பூரான் ஈழவளவனின் கையில் பலமாக கடித்ததை அடுத்து ஈழவளவன் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ற-2)

# பஸ் உரிமையாளரைத் தாக்கிய இராணுவச் சிப்பாய்க்குப் பிணை

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்.நகர பண்ணை தனியார் பஸ் நிலையத்தில் பஸ் உரிமையாளர் மீது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்திய இராணுவச் சிப்பாய் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த புத்தாண்டுக்கு முதல் நாள் பண்ணை பஸ் நிலையத்துக்கு வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் ஏழாலை மத்தியைச் சேர்ந்த துரைராஜா மகேந்திரராஜா (வயது - 36) என்ற பஸ் உரிமையாளரைக் கண்மூடித்தனமாகத் தாக்கியிருந்தார். இராணுவச் சிப்பாயின் தாக்குதல் காரணமாக மூக்கு மற்றும் வாய் வழியாக இரத்தம் கொட்டிய நிலையில் மகேந்திரராஜா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அதையடுத்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-14)



கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்தில் பெரிய வெள்ளி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (ற-10)

# மருத்துவ அறிக்கையின் பின்னரே சாவு குறித்து முடிவெடுக்க முடியும்

## குருநகர் பெண் உயிரிழப்பு தொடர்பில் யாழ்.பொலிஸார் கருத்து

யாழ்ப்பாணம், ஏப்.19

குருநகர் பெண்ணின் சாவு தற்கொலையா? கொலையா? என்பது தெரியாது. உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே அது குறித்து முடிவு செய்ய முடியும்- என்று தெரிவித்துள்ளார் யாழ். பிராந்திய பிரதான பொலிஸ் பரிசோதகர் பாலசூரிய.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போது குருநகர் பெண்ணின் மரணம் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது:

"பெண்ணின் மரணம் தொடர்பாகப் பெற்றோரிடமும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாதிரியர்களிடமும் வாய்மொழி மூலமுறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன. ஆனால் இதனை வைத்துக் கொண்டு பொலிஸாரால் எதுவும் கூற முடியாது.

சட்ட வைத்திய அதிகாரியினால் எதிர்வரும் 23 ஆம் திகதி உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அந்த அறிக்கையின் பிரகாரமே அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். குறித்த பெண்ணின் மரணம் தற்கொலையா?. கொலையா? என்பது தெரியாது. எவ்வாறு மரணமானார் என்பதை மருத்துவர்களின் அறிக்கை தான் கூற வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாதிரியார்கள் மறைக்கல்வி தொடர்பில் குறித்த பெண்ணிடம் தாம் அடிக்கடி தொடர்பில் இருந்ததாகவும் படிப்பு தொடர்பாகவே தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தி வந்ததாகவும் சம்பவத்துக்கு 2 வாரங்களுக்கு முன்னரே குறித்த பெண் மறைக்கல்வி நிலையத்துக்கு வருகை தரவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர் பெண்ணின் சாவில் தமக்கு சந்தேகம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். எனினும் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே கொலையா? தற்கொலையா? என்பது தெரிய வரும்" - என்று தெரிவித்தார். (ற-14)



யாழ். மாநகர சபை ஊழியர்களால் நிரந்தர நியமனம் வேண்டி மேற்கொள்ளப்படுகின்ற தொடர் பணிப்புறக் கணிப்பால் யாழ். மாநகர சபையின் வீதிகளின் முன்னாலும் வீடுகளின் முன்னாலும், ஆலயங்கள், பாடசாலைகள் முன்னாலும் கொட்டப்பட்ட குப்பைகள் அள்ளுவதற்கு ஆள்கள் இல்லாமல் துர்நாற்றம் வீசுவதாக உள்ளன. (ற-21)

# கோயிலுக்குச் சென்றவன் மீதே கோபுரம் விழுந்த கதையாகிவிட்டது

## ஐ.தே.கட்சியினர் மீதான தாக்குல் குறித்து அம்பாந்தோட்டை நகர சபைத் தலைவர்

கொழும்பு,ஏப்.19

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையின் போது தான் கையில் வைத்திருந்தது விளையாட்டுத் துப்பாக்கிதான் என்று கூறியுள்ளார் அம்பாந்தோட்டை நகர சபைத் தலைவர் எராஜ்காவிந்த பெர்ணாண்டோ. ஐ.தே.க கட்சி பிரதிநிதிகளை ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் குழு தாக்குவதற்கு தயாராக இருந்ததாகவும் அதன் காரணமாகவே தான் அந்த இடத்துக்குச் சென்றிருந்தேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள சர்வதேச விமானநிலையம் மற்றும் சர்வதேச துறைமுகம் என்பவற்றைப் பார்வையிடுவதற்காக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேர் சென்றனர். இவர்களை அங்கு நகரசபைத் தலைவர் தலைமையிலான குழு முட்டை வீசித் தாக்குதல் நடத்தியது. அத்துடன் அம்பாந்தோட்டை நகரசபைத் தலைவர் கைத் துப்பாக்கியுடன் தங்களை விரட்டியதாக அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே தன் மீதான குற்றச்சாட்டுக்களை நகரசபைத் தலைவர் முற்றாக மறுத்துள்ளார்.

"நான் கடலில் குளித்துக் கொண்டிருந்த போது மத்தல சென்ற ஐ.தே.க பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தல் என்று தகவல் கிடைத்ததை அடுத்து அங்கு சென்றேன். அப்போது ஒரு குழு கூடியிருந்தது அதில் ஐ.தே.க உறுப்பினர்களும் இருந்தனர். கொழும்பில் இருந்து வந்த ஐ.தே.க பிரதிநிதிகளுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என நான் கூறினேன். ஐ.தே.க. பிரதிநிதிகளுக்கு எதிரான குழுவினரை பயமுறுத்தவே நான் கையில் விளையாட்டுத் துப்பாக்கி எடுத்துச் சென்றேன். எனினும் கோயிலுக்குச் சென்றவன் மீது கோபுரம் இடிந்து விழுந்த கதையாக என் நிலை மாறிவிட்டது - என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

மீ ஒலி (Supersonic) வேகத்தில்
புத்தம் புதிய
விசா ஆலோசனை வரவுகள்

★ஆஸ்திரேலியா குடும்ப விசா
எண்ணி 180 நாள்களில் விரையலாம்.
★கனடாவில் படிக்க உழைக்க 90 நாள்கள் போதும்.
★இத்தாலி 2 வாரங்களில் நாட்டை விட்டுப் பறக்கலாம்.

இச்சலுகை இன்னும் சில தினங்களுக்கு மாத்திரமே!


திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
www.thisaivisa.com
021 221 9016/021 499 3502



# பெரும் தொகையான இறந்த மீன்கள் தொண்டமானாறில் கரை ஒதுங்கின

## விற்பனைக்கு வரலாம் கவனம் ; அவை நச்சுத்தன்மை கொண்டவை

வடமராட்சி. ஏப்.19
செல்வச்சந்நிதி கோயிலுக்கு பின்புறமுள்ள தொண்டமானாறு கடல்நீரேரியில் இருந்து ஆயிரக்கணக்கான கிலோ எடை கொண்ட திரளி மீன்கள் இறந்த நிலையில் நேற்றும் (வெள்ளி). நேற்று முன் (வியாழன்) தினமும் கரை ஒதுங்கியுள்ளன.


கரையோதுங்கிய மீன்கள்

கரை ஒதுங்கிய மீன்களை கரவெட்டிபிரதேசசெயலர் க.சிவஸ்ரீ. வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ். மற்றும் படை அதிகாரிகள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் பார்வையிட்டதுடன் அவற்றை அப்புறப்படுத்தி. அழிப்பதற்கான நடவடிக்கைகளும் உடனடியாகவே மேற்கொள்ளப்பட்டன.

வல்வெட்டித்துறை நகர சபையின் ஏற்பாட்டில் ஏரியின் இரு மருங்கிலும் ஒதுங்கி இறந்த மீன்கள் வல்வெட்டித்துறை நகர சபை, வலி.கிழக்குப் பிரதேச சபைத் தொழிலாளர்களால் டிராக்டர்களில் ஏற்றப்பட்டு ஏரிக்கு அண்மித்ததாக உள்ள இடம் ஒன்றில் படையினரால் வெட்டப்பட்ட பெரிய குழிக்குள் போடப்பட்டு புதைக்கப்பட்டன.

கடும் வெப்பத்தினால் கடல் ஏரி நீர் வற்றியுள்ளதால் இப்படி நேரகாலத்துடன் சில மீன் வியாபாரிகள் இவ்விதம் கரையொதுங்கிய மீன்களை எடுத்துச் சென்றுள்ளதால் அவை குளிரூட்டப்பட்டு சந்தைக்கு விடப்படலாம் என அஞ்சப்படுவதால் மீன் வாங்கும்போது நுகர்வோர் மிக எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்குமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏனெனில் கரை ஒதுங்கிய மீன்களில் நச்சுத் தன்மை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதால் நுகர்வோர் மீன் வாங்கும்போது அவதானமாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை. சம்பவ இடத்தை யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பணிப்பாளர் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், தற்போது நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக மீன்கள் இறந்திருக்கக் கூடும் அல்லது நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் நீரில் உப்பின் செறிவு அதிகரித்து மீன்கள் இறந்திருக்கக் கூடும் என்று தெரிவித்தார். (ஓ-14-5-173)

# கசிப்பு உற்பத்தி பொருள்கள் வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.19
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் புதுக்குடியிருப்பு பகுதியில் 18 ஆயிரத்து 750 மில்லிகிராம் கோடாவையும், கசிப்பு உற்பத்திக்கான பொருள்களையும் வைத்திருந்த நபரொருவர் கடந்த 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு குற்றப்புலனாய்வு பொலிஸ் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் முல்லைத் தீவு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த 8 ஆம் திகதி குமுழமுனை 7 ஆம் வட்டாரம் பகுதியில் பெறுமதி வாய்ந்த 10 பலகைத்துண்டுகளை தன்வசம் வைத்திருந்த நபரொருவரும் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-14)

# பறிபோனது மோ.சைக்கிள்

தென்மராட்சி,ஏப்.19
சாவகச்சேரி. நவீன சந்தை கடைத்தொகுதிக்கு முன்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'சுப்பர் கப்' மோட்டார் சைக்கிள் நேற்று இனந் தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த ஒருவர் சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு மேல்மாடியில் உள்ள வானொலிக் கடையொன்றுக்குச் சென்றுவிட்டு திரும்புவதற்கு முன்னர் மாற்றுச் சாவியைப் பயன்படுத்தி அதனைத் திருடிச் சென்றுவிட்டனர். இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ)

# போரால் பாதிக்கப்பட்டோருக்கு வாழ்வாதார உதவிகள்

வலி.தென்மேற்கு. ஏப்.19
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் 2008ஆம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்ட கணவனை இழந்தோருக்கும் அங்கவீனவர்களுக்கும் வாழ்வாதார உதவிகளை வழங்க முன்வந்துள்ள ஐ.சி.ஆர்.சி.நிறுவனம் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காகப் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைத் திரட்டுவதில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராயும் கூட்டம் கொல்லவிளாங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் கிராம உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்ட குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் பாதித்தோரின் விவரங்களைத் திரட்டுவதற்காக விண்ணப்பப் படிவங்களையும் வழங்கியுள்ளனர். அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் போரால் பாதிக்கப்பட்ட 32 விதவைகளும்360அங்கவீனமானவர்களும் வசிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-115)

# கிளாலி மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க நீர்த்தாங்கிகள்

வலி.தென்மேற்கு. ஏப். 19
கிளாலிப் பகுதியில் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட நான்கு நீர்த்தாங்கிகளை கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளாலிப் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட சுமார் 300 குடும்பங்களின் பாவனைக்காக 13 பொதுக் கிணறுகள் பொது நிறுவனங்களால் துப்புரவு செய்யப்பட்டதையடுத்து அந்தக் கிணறுகளை அவர்கள் பயன்படுத்தி வந்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வெப்பம் காரணமாகவும், கடந்த வருடம் போதிய பருவமழை பெய்யாததாலும் குறிப்பிட்ட அக் கிணறுகளின் நீர்மட்டம் நாளுக்கு நாள் வற்றிக் கொண்டு செல்கின்றது. இதனால் மக்கள் குடி தண்ணீரைத் தேடி அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மக்களின் தற்போதைய நிலை குறித்தும் குடிதண்ணீர்த் தேவையின் அவசியம் குறித்தும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலருக்குச் சுட்டிக்காட்டியுள்ள கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.தயாபரன் குடிதண்ணீர் வழங்குவதற்கான ஒழுங்குகளை விரைவாக மேற்கொள்ளுமாறு செயலரைக் கோரியிருந்தார்.

தலைவரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரதேச செயலர் முதற்கட்டமாக ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட நான்கு நீர்த்தாங்கிகளை மேற்படி சங்கத்திடம் வழங்கியுள்ளார்.

அடுத்த கட்டமாக குடி தண்ணீர் வழங்குவதற்கான ஒழுங்குகளை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. (வ-115)

# நல்லூரில் 4 கடைகள் உடைத்து திருட்டு

## நேற்றைய பொலிஸ் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம். ஏப்.19*
*ஒரே நாளில் நல்லூர் பிரதேசத்தில் 4 கடைகள் உடைக்கப்பட்டு மொத்தம் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*நேற்று நடைபெற்ற வாராந்தச் செய்தியாளர் சந்திப்பில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.*

*இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-*

*கடந்த 10 ஆம் திகதி நல்லூர் பிரதேசத்தில் உள்ள 4 கடைகளில் இரவு நேரம் இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நல்லூர்ப் பகுதியில் இரண்டு கடைகளில் 10 ஆயிரம் மற்றும் 40 ஆயிரம் பெறுமதியான பொருள்களும், கோயில் வீதியில் உள்ள கடையொன்றில் 7 ஆயிரம் பெறுமதியான பொருள்களும், கந்தர்மடம், அம்மன் வீதியில் உள்ள கடையொன்றில் 3 ஆயிரம் பெறுமதியான பொருள்களும் திருடப்பட்டுள்ளன. இந்த திருட்டுக்கள் தொடர்பான அறிக்கைகள் யாழ்ப்பாணம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-14)*

# வடமாகாண திணைக்கள அலுவலர்களின் வெளிநாட்டு சுற்றுலாப் பயணங்கள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப்.19
வடமாகாண திணைக்கள உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுக் கற்கை, சுற்றுப் பயணங்கள் மேற்கொள்வது மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் இந்த அறிவிப்பை மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

**மாகாண சபையால் ஏற்பாடு செய்யப் பட்ட வெளிநாட்டு கற்கைச் சுற்றுப் பயணங்கள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட் டுள்ளதாக அறிவித்துள்ளது.**

பல்வேறு நாடுகளிலும் சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகள், உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், வேலைத்தள மேற்பார்வை மற்றும் தளக் கோலங்களைப் பார்வையிடல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக மாகாண சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டு கற்கைச் சுற்றுப் பயணங்கள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

மாகாண சபைகளின் நிதியங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்படும் சுற்றுப் பயணங்கள், வெளி நாட்டுக் கடனுதவிகளின் கீழான கருத்திட்ட நிதியங்களைப் பயன் படுத்தி ஏற்பாடு செய்யப்படும் சுற்றுப் பயணங்கள், வெளிநாட்டு நிறுவனமொன்றின் அழைப்பின் பேரில் அல்லது நிதி செலவிடப்படாது உள்நாட்டு நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்யப்படும் சுற்றுப் பயணங்கள் போன்றவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய மூவர் கைது

யாழ்ப்பாணம்.ஏப்.19
கோப்பாய் பகுதியில் அனுமதி இல்லாமல் மணல் ஏற்றிச் சென்ற மூவர் கடந்த 12 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். புத்தூர், அச்சுவேலி, அநுராதபுரம் பகுதிகளைச் சேர்ந்த குறித்த மூவரும் அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றபோது கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (வ-14)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

**யாழ்ப்பாணம்.ஏப்.19**
**கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு** உட்பட்ட மானிப்பாய் வீதி உரும்பிராய் பகுதியில் உள்ள கராஜ் ஒன்றின் முன்பாக இரவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான பல்ஸர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று கடந்த 16 ஆம் திகதி திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இது தொடர்பான அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ-14)

# அறுபது பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கினால் புறக்கணிப்பை கைவிடுவோம்

## தற்போது பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுவரும் மாநகரசபை சுகாதாரத் தொழிலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19
யாழ்.மாநகரசபையின் தற்காலிக சுகாதாரத் தொழிலாளர்கள் 60 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டாலே ஒழியப் பணிப்புறக்கணிப்பைக் கைவிடமாட்டோம் என்று தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் சுகாதாரத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் யாழ்.பிரிவு செயலாளர் றொபின்சன் கூறுகையில்;

பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும், கொடுப்பனவு சரியாக வழங்கப்படாத நிலையிலும் கூட சுகாதாரத் தொழிலாளர்கள் இரவு பகலாக நகரின் சுகாதாரத்தைப் பேணும் வகையில் தமது கடமைகளை மேற்கொண்டிருந்தனர்.

சுகாதாரத் தொழிலாளார்கள் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்த நிலையில் தற்போது 18 தொழிலாளர்களுக்கு நியமனம் வழங்கப்படாத்மையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பிட்ட 42 தொழிலாளர்களுடன் ஏனைய 18 தொழிலாளார்களுக்கும் உடன் நியமனம் வழங்கப்பட வேண்டும். அதுவரை எமது பணிப் புறக்கணிப்பு தொடரும் என்று தெரிவித்தார்.

இதேவேளை நேற்று வெள்ளிக்கிழமை விடுமுறை தினமாக இருந்த போதும் சுகாதாரத் தொழிலாளர்கள் தமது பணிப்புறக்கணிப்பைத் தொடர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-7)

# ஆங்கிலத்தை தவறவிட்ட சிவானந்தன் இன்று உரையாடுவது அதிலேயே

## விடாமுயற்சியே காரணம் என்கிறார் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஏப்.19

உலகத்திலே இருக்கக் கூடிய தமிழர்களுடைய பெருமையை பறைசாற்றுபவராக இந்து கல்லூரியின் பழைய மாணவனாக இருக்கின்ற அமெரிக்க விஞ்ஞானி சிவானந்தன் கா.பொ.த. சாதாரண தரத்திலே ஆங்கில பாடத்தில் சித்தி யடைவில்லை என்று தெரிவித்தார் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

யாழ். இந்து கல்லூரியில் நேற்று நடைபெற்ற க்ளிக்கர் டொட் கொம்மின் அங்குரார்ப்பண நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

என்னை விட விஞ்ஞானி சிவானந்தன் இரண்டு ஆண்டுகள் முன்னர் கல்வி பயின்றவர். இவ்வாறான நிலையில் அவர் சாதாரண தரத்தில் சித்தி அடைந்தது ஆறு பாடங்கள் மாத்திரமே. அதிலும் அவர் சமயத்துக்கு அதிக கூடிய பெறுபேற்றில் சித்தியடைந்திந்தார். ஆனால் ஆங்கிலத்தில் சித்தியடைவில்லை.

ஆனால் இப்போது இவருக்கு ஆங்கிலம் தான் அதிகமாக சரளமாக நாளாந்தம் உரையாடும் ஒரு மொழியாக இருக்கிறது.

ஆனால் அவர் தன்னுடைய விடாமுயற்சியின் காரணமாக அந்த இளம் வயதில் அவர் விதைத்த அந்த விதை தான் இன்று அவரை ஒரு தனிப்பெரும் சாதனையாளராக உலகத்துக்கு அடையாளம் காட்டியிருக்கிறது"- என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-21)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இராசலிங்கம் (துரை)

(இளைப்பாறிய தபால்அதிபர்)



விளானை,களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 89, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசலிங்கம் (துரை) நேற்று (18.04.2014) வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சுப்பிரமணியம் (விதானையார்)-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரகுமாரியின் அன்புக் கணவரும், வித்யா(முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், கண்டாவளை), சர்மிலா (ஆசிரியர், புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்), லக்சிகா,றஜீவன் (மாணவன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிகாந் தனின் (லண்டன்) அன்பு மாமனாரும், புஸ்பராணி, சீதாம்பாள் (லண்டன்), சண்முகலிங்கம் (லண்டன்), சிவலோகன் (முகாமை யாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, யாழ்ப்பாணம்), புஸ்பலீலா, புஸ்பவதி (லண்டன்), அப்புலிங்கம் (லண்டன்), திலகவதி, கலாவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மீசாலை சிவராஜா (ஓய்வுபெற்ற நில அளவையாளர்)-புஸ்பராணி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(20.04.2014) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 9.30மணிக்கு தகனக்கிரியை களுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
021 222 4706

(46967)(5.6)

# தமிழருக்காகப் போராடாதோரை தேர்தலில் புறக்கணியுங்கள்

## சீமான் தெரிவிப்பு


சென்னை, ஏப்.19

தமிழர்களின் பிரச்சினைக்காக போராடாத அரசியல் கட்சிகளை இந்தத் தேர்தலில் புறக்கணியுங்கள் என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் பவானியில் அந்தியூர் பிரிவில் உள்ள பாவடி திடலில் நாம் தமிழர் கட்சியின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு சீமான் கூறியதாவது,

தமிழர்களுக்குத் துரோகம் செய்தவர்கள் எல்லாம் இன்று தமிழர்களிடம் வாக்குக் கேட்டுவருகிறார்கள். காங்கிரஸ், பா.ஜனதா, தே.மு.தி.க. கட்சியினருக்கு நாம் எதற்காக வாக்களிக்க வேண்டும்? மக்கள் சிந்திக்க வேண்டும்.

இந்தக் கட்சியினர் 8 கோடி தமிழர்களின் பிரச்சினைக்காக எந்த காலத்திலாவது களத்தில் இறங்கி போராடியது உண்டா? காவிரி நீர் கர்நாடகாவினால் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. காவிரி ஆணையமும் உச்ச நீதிமன்றமும் ஆணையிட்ட பின்னரும் கர்நாடகா தண்ணீர் தரமறுக்கிறது. தீர்க்கப்படாத காவிரி நீர்ச் சிக்கல் உழவர்களின் தற்கொலையில் வந்து நிற்கிறது. அட்டப்பாடியில் கேரள அரசும் அணை



சீமான்

கட்டத் தொடங்கிவிட்டது. ஒரு சொட்டு நீருக்கு வழி ஏற்படுத்தித் தராத கட்சிகள் காங்கிரஸ், பா.ஜனதா கட்சிகள்.

கூப்பிடும் தூரத்தில் எமது தொப்புள் கொடி உறவுகள் இருந்தும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேர் இலங்கையில் கொல்லப்பட்ட போது காப்பாற்ற வேண்டிய காங்கிரஸ், இலங்கை அரசுக்குநிதி உதவி, போர் கருவிகள் கொடுத்து தமி ழர்களைக் காட்டியும் கொடுத்தது. அதற்கு துணை நின்றது தி.மு.க. வேடிக்கை பார்த்தது பா.ஜ.கட்சி. இப்படிப் பட்டவர் களை தேர்தலில் புறக்கணி யுங்கள். வாக்குகள் மூலம் அவர்களுக்கு சவுக்கடி கொடுங்கள்" இவ்வாறு சீமான் தெரிவித்தார்.

(வ)

## மரதன் ஓட்டத்தில் கலந்து கொண்டவர் மயங்கி வீழ்ந்தார்

வலி.வடக்கு, ஏப்.19

மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட வீரன் நடுவீதியில் மயங்கி வீழ்ந்ததை அடுத்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸாரும், உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய புத்தாண்டு நிகழ்வையொட்டிய விளையாட்டுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

அதன்போது நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டதையிட்டியைச் சோர்ந்தவரும் யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்து வசிப்பவருமான இராசாநிர்மலதாஸ் கிங்ஸ்ரன் (வயது 17) என்பவரே மயங்கி வீழ்ந்தவராவார். குறிப்பிட்ட மரதன் ஓட்டப் போட்டிக்கு முன்னர், காலையில் போட்டியில் கலந்து கொண்டவர்கள் மருத்துவ பாசோதனைக்கு உட்படுத்தப் பட்டிருந்தபோதும் இந்தச் சம்பவம் நடத்துள்ளது. (ற-86)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு சுப்பிரமணியம் (வர்த்தகர் - உடுப்பிட்டி)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு, விக்னேஸ்வரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வர்த்தகர் சின்னப்பு சுப்பிரமணியம் (வர்த்தகர் - உடுப்பிட்டி) 15.04.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னப்பு- அம்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-வெள்ளையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லக்கண்டுவின் சகோதரரும், தமிழ்ச்செல்வன், கலைச்செல்வன் (தேவன்), செந்தூர்ச்செல்வன், அருட்செல்வன் (அருள்), தயாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கவிதா, லதா, தனுஜா, தயாமதி, சுபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், லோர்ஜிதன், அங்கவின், வித்தகன், வர்ஷா, அக்ஷய், ஜனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2014) ஞாயிற்றுக் கிழமை அச்சுவேலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(46964) (10.6)

## கிருபாசாரதி பயிற்சிபாடசாலையும்

யாழ். தொழில்நுட்பக்கல்லூரியும் மற்றும் யாழ். பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்துப்பிரிவும் இணைந்து நடத்தும் வீதி விபத்து தடுத்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை

இடம் : யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மைதானம்
காலம் : இன்று 19.04.2014 சனிக்கிழமை
நாளை 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை

02 நாள்கள் பயிற்சிப்பட்டறை நடைபெறும்.

இப்பயிற்சிப்பட்டறைக்கு யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் செயல்முறை வகுப்பில் கலந்து கொள்பவர்களும், க.பொ.த. உயர் தரத்தில் தொழில்நுட்பப்பிரிவில் பொறியியல் தொழில்நுட்பத்தை பாடமாகக் கொண்ட அனைத்துப் பாடசாலை மாணவர்களும், இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் கலந்து பயன்பெறலாம்

* இரண்டு நாட் பயிற்சி முடிவில் பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

அனுமதி இலவசம்

இதற்கான பதிவுகளை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் உடன் மேற்கொள்ளுங்கள்

மேலும் இங்கே

* வைத்தியம் தொடர்பான விடயங்கள்
* வர்த்தகக் கண்காட்சிகள்
* மாலை - இந்தியாவிலிருந்து வருகை தரும் இசைக்கலைஞர்களின் இசை நிகழ்வுகள் என்பன இடம் பெறும்.

## குறிக்கப்பட்ட நேரத்துக்குள் கிளினிக்குக்கு வருகை தருக


### சாவகச்சேரி மருத்துவமனை அறிவிப்பு

தென்மராட்சி, ஏப்.19
சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் நடத்தப்படும் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்கள் கிளினிக் கொப்பியில் குறிப்பிட்டுள்ள நேரத்துக்கு வருகை தர வேண்டும் என்று மருத்துவமனை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருட காலமாக கிளினிக் கொப்பியில் நேரம் குறிப்பிடப்படுகின்ற போதிலும், பலர் அதை நடைமுறைப் படுத்தாமல் தாம் நினைத்த நேரத்துக்கு வருகின்றனர். இதனால் தமக்குரிய நேரத்தில் சிகிச்சை பெறக் காத்திருக்கும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கிளினிக் கொப்பியில் குறிப்பிட்ட நேரத்துக்கு வருகை தராவிடின் மருத்துவர்கள் பார்வையிடுவது தவிர்க்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வைத்தியசாலைப் பணியாளர்கள் தமது உறவினர்களை மு.ப.11 மணிக்குப் பின்னர் மருத்துவரிடம் அழைத்துச் சென்று சிகிச்சை பெற வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)



வலி.கிழக்கில் இம்முறை விவசாயிகள் புகையிலைச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டியிருந்தனர். தற்போது புகையிலை அறுவடை செய்யப்பட்டு வீதியோரங்களில் மதில்களில் வெயிலில் உலர விடப்படுகின்றன. (வ-17)

## மதகு புனரமைப்பு

வலி. வடக்கு, ஏப். 19
கொழும்புத்துறை மக்கள் விடுத்த பணிப்புரைக்கு அமைய வீதி அபிவிருத்தி அதிகார சபையூடாக 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், கொழும்புத்துறை மலைவேம்படி, 5 ஆம் குறுக்குத் தெரு மதகு செப்பனிடப்பட்டு மக்களின் பாவனைக்காக செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப் பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மலைவேம்படி பாதையைப் பயன்படுத்தும் மக்கள் வீதியின் அவல நிலைமையை எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு இந்தப் பாதையையும் மதகையும் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (வ-86)



நீர் மட்டம் குறைந்த நிலையில் குளம் ஒன்று.

## மானிப்பாய் மருத்துவமனையின் தேவைகள் பல ஓரளவுக்குத் தீர்வு

### நோயாளர் நலன்புரி சங்கத்தின் முயற்சியால்

வலி.தென்மேற்கு, ஏப்.19
மானிப்பாய் பிரதேச மருத்துவ நோயாளர் நலன்புரி சங்கம் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கையைத் தொடர்ந்து மருத்துவமனையில் நிலவி வந்த பல தேவைகள், குறைபாடுகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

இதனால் அங்கு வரும் நோயாளர்களும் நன்மையடைவதுடன் மருத்துவமனையும் அபிவிருத்தி அடைந்து வருகின்றது.

பொதுமக்கள் வழங்கிய பல லட்சம் ரூபா நிதி உதவியுடன் ஆனைக்கோட்டையில் வாங்கப்பட்ட காணியில் அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட மேற்படி மருத்துவமனைக்கு நிரந்தரமான மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து நோயாளர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

அதையடுத்து நோயாளர்களின் நலன்கருதி மேலதிகமாக ஒரு மருத்துவரையும் அம்புலன்ஸையும் தந்துதவுமாறு நோயாளர் நலன்புரி சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து மேலதிகமாக மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் அம்புலன்ஸ் வாகனமொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை அங்கு சிகிச்சைக்கு வரும் கர்ப்பிணிகள் வசதியாகத் தங்கி இருப்பதற்காக இளைப்பாறு மண்டபம், தேநீர்ச்சாலை என்பவற்றை அமைப்பதற்கும் நிதி உதவி வழங்குமாறும் மேற்படி சங்கம் பொது மக்களையும் பொது நிறுவனங்களையும் கோரியிருந்தது. சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய பொது மக்கள் வழங்கிய நிதி உதவியுடன் தற்பொழுது மருத்துவமனை வளாகத்தில் தேநீர்ச் சாலையும் இளைப்பாறும் மண்டபமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை குறித்த மருத்துவமனைக்குச் சென்ற நோயாளர்களின் மூன்று சைக்கிள்கள் திருடப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி சங்கத்தால் சைக்கிள் பாதுகாப்பு நிலையமொன்றும் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் குறித்த சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய இரு மருத்துவர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் இரவில் அவர்கள் தங்குவதற்கு விடுதி வசதியில்லாததால் மருத்துவர்கள் இரவில் மருத்துவமனையில் தங்குவதில்லை.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் விடுதி அமைப்பதற்கான ஒழுங்குகளையும் சங்கம் மேற்கொண்டுள்ளது.

மருத்துவமனையில் இதுவரை தாதியர் எவரும் நியமிக்கப்படாததால் அங்கு கடமையாற்றும் மருத்துவ மாதர்களே நோயாளர்களுக்கு ஊசி மருந்து ஏற்றுவதால் தகுதியான தாதி ஒருவரை நியமிக்குமாறு நோயாளர்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (வ-115)

## குறைவடையும் நீர்மட்டம்

### யாழ்.நகரை அண்டிய குளங்களில்

யாழ்ப்பாணம், ஏப்.19
யாழ்.நகரை அண்டிய குளங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைவடைந்து காணப்படுகின்றன. தற்போதைய கடும் வறட்சி வெப்பத்தால் குளங்களில் நீர் மட்டம் குறைந்து வற்றிக் காணப்படுகின்றது.

நகரை அண்டிக் காணப்படும் ஈச்சமோட்டை டொபி குளம், மறவன்குளம், மக்கி குளம், பால் குளம் , இலந்தைக் குளம் போன்ற குளங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து வற்றும் நிலையில் உள்ளது.

இந்தக் குளங்களில் நீரின் மட்டம் குறைவடைந்ததால் குளங்களை அண்டி வசிக்கும் மக்களின் குடியிருப்பு கிணறுகளிலும் தண்ணீரின் மட்டம் குறைவடைந்துள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குளங்களில் நீரின் மட்டம் குறைந்ததால் பிரதேசத்தில் மேய்ச்சலுக்காகச் செல்லும் கால்நடைகளும் குடிதண்ணீர் இன்றி பாதிக்கப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (வ-17)

## தடம் புரண்டது ஓட்டோ ஒருவர் காயம்

சாவு வீட்டின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக மயானத்துக்கு சென்றவர்களை ஏற்றி வந்த ஓட்டோ தடம் புரண்டதில் அதில் பயணித்த ஒருவரின் கால்கள் ஓட்டோ சில்லுக்குள் சிக்கியதால் அவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மீசாலை வடக்கு வேம்பிராய் சந்தியில் இடம்பெற்றது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம்கருணாகரன் (வயது -31) என்பவர் காயங் களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

## பிரதேச சபை கவனிக்குமா? சாவற்கட்டில் கழிவகற்றலை

யாழ்ப்பாணம், ஏப்.19
வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சாவற்கட்டு பகுதியை அங்குள்ள மக்களே துப்புரவு செய்வதாகவும் குப்பைகளை அகற்றுவதற்கு டிராக்டர் வாகனம் மட்டுமே அனுப்பப்படுவதாகவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் கூறுகையில்:-

இந்தப் பகுதியில் கழிவகற்றுவதற்கு ஒவ்வொரு வியாழக்கிழமையும் பிரதேச செயலகத்தால் டிராக்டர் வாகனம் அனுப்பப்படுகின்றது.

ஆனாலும் கழிவகற்றுவதற்கு பணியாளர்கள் வருவதில்லை. இந்நிலையில் நாம்தான் வியாழக்கிழமைகளில் எங்கள் பகுதியை சுத்தமாக்குகின் றோம். குறிப்பாக இதில் பெண்களும் சிறுவர்களும் ஈடுபடுகின் றனர்.

இவற்றை உரிய தரப்பினர் கவனத்தில் கொண்டு சுத்தம் செய்வதற்கு பணியாளர்களை அனுப்ப வேண்டும். இந்நிலை தொடருமாயின் எங்கள் பகுதிச் சிறுவர்களும் பெண்களும் தொடர்ச்சியாக இவ்வேலையில் ஈடுபட வேண்டி ஏற்படும் எனக் குற்றம் சாட்டியுள்ளனர். (வ-10)



பெண்கள், சிறுவர்கள் இணைந்து கழிவுகளை அகற்றுகின்றனர்.

## கட்டாக்காலி கால்நடைகளால் அழிக்கப்படும் பயிர்கள்

காலபோக நெற்செய்கையின் பின்னர் பயிரிடப்பட்ட பயிர்கள் கட்டாக்காலி கால்நடைகளால் இரவு வேளையில் அழிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பெருங்குளம், கிராம்புவில் பகுதிகளின் நெல்வயல்களில் காலபோக நெற்செய்கை அறு வடையின் பின்னர் சிறு தானியப் பயிர்களான உழுந்து, பயறு, கௌபி, சணல், வெண்டி, பூசணி, பாகல், மிளகாய் போன்றவை பயிரிடப்படுவது வழமையான ஒன்றாகும்.

கடந்த வருடம் போதிய மழை வீழ்ச்சியின்மையால் நெற்பயிர்கள் உரிய பயன் தராத நிலையில் அந்தப் பகுதிகளில் உப உணவுப் பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்தநிலையில் இரவு வேளைகளில் அவர்களது பயிர்ச் செய்கை நிலங்களுக்குள் பிரவேசிக்கும் கட்டாக்காலி கால்நடைகள் பயிர்களை துவம்சம் செய்து வருவதாகவும் தெரிவித்தனர். (வ-9)

## சபை அனுமதி பெற்று திருவிழாக்காலத்தில் வியாபாரம் செய்க

### வலி.தென்மேற்கு பிரதேச சபை பதில் தவிசாளர் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு, ஏப்.19
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் இடம்பெறும் வருடாந்த திருவிழாக் காலங்களில் வியாபாரத்தில் ஈடுபடுவோர் பிரதேச சபையின் சட்டவிதிமுறைகளுக்கு அமைய முற்கூட்டியே பிரதேச சபையிடம் அனுமதி பெற வேண்டும் என்று அறிவித்துள்ள பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் சபையிடம் அனுமதி பெறாமல் வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் வருடாந்த பெருந் திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

பிரதேச சபையின் அனுமதியின்றி ஆலயங்களில் பலர் வியாபாரத்தில் ஈடுபடுவதால் பிரதேச சபையின் வருமானத்தில் பாதிப்பு ஏற்படுவதுடன் அது சட்ட விதிகளுக்கு முரணாகவும் அமைகின்றது.

இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முன்வந்துள்ள பதில் தவிசாளர் ஆலயங்களில் வியாபாரத்தில் ஈடுபட விரும்புவோர் முற்கூட்டியே பிரதேச சபையின் அனுமதியைப் பெறுமாறு அறிவித்துள்ளார். (வ-115)




மேற்கு மண்டல மாவட்ட நீதிபதிகள் மாநாடு கோவையில் நேற்று நடைபெற்றது. உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சதாசிவம் மங்கல விளக்கேற்றி மாநாட்டை தொடக்கி வைத்தார்.

# இந்தியாவை இரண்டாக்க பா.ஜ. கட்சி முயல்கின்றது

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப்.19

இந்தியா ஒரே இந்துஸ்தானாக இருக்கவேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் விருப்பம். பா.ஜ.கவோ அதை இரண்டு பகுதிகளாக துண்டாக்க முற்படுகிறது எனக் குற்றஞ் சாட்டியுள்ளார் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி.

மத்தியப் பிரதேசம் கந்துவாஸ்டேடியத்திலும் சத்தீஸ்கர் மாநிலம் கோர்பா மக்களவைத் தொகுதியிலும் வியாழக்கிழமை நடந்த பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"இந்தியாவை இருபகுதிகளாக துண்டாக்க பா.ஜ.க. முயற்சிக்கிறது. மாறாக, இந்தியா ஒரே ஹிந்துஸ்தானாக இருக்கவேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் விருப்பம்.



ராகுல் காந்தி

ஊழலை பற்றி பேசும் பா.ஜ.கவில்தான் ஊழல் புரையோடி உள்ளது. அந்தக் கட்சியில் உள்ள ஊழல் தலைவர்கள்தான் முதல்வரிசையில் வந்து அமர்கிறார்கள். கர்நாடகம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான் நிலைமை அனைவருக்கும் தெரிந்ததுதான்.

குஜராத் வளர்ச்சித் திட்டத்தை ஏதோ புதிய கண்டுபிடிப்பு போல பா.ஜ.கவினர் பேசுகிறார்கள். குஜராத் முன்னேற்றத் திட்டம் எப்படியோ அது போன்றதுதான் சத்தீஸ்கரின் வளர்ச்சித் திட்டமும். நம்ப முடியாத கட்டுக்கதை இந்த திட்டங்கள்.

சத்தீஸ்கரில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க. அரசு விவசாயிகளின் விளை நிலங்களை தொழிலதிபர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்கிறது. மாநில முதல்வர் ரமண் சிங்கின் ஆட்சியில் ஊழல் புரையோடியுள்ளது.

நரேந்திர மோடியை பிரதமர் பதவியில் அமர்த்துவதுதான் பா.ஜ.கவின் லட்சியம். ஆனால் 2004லும் 2009லும் ஏற்பட்ட கதிதான் ஏற்படப்போகிறது. உணவுக்கு உத்தரவாதம், வேலைக்கு உத்தரவாதம் போன்று இனிமேல் சுகாதாரத்தை பேணும் உரிமை, வீடு, ஓய்வூதியம் போன்றவற்றையும் மக்களின் உரிமையாக்கிட காங்கிரஸ் சட்டம் கொண்டுவரும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்க தனியாக தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும்"- என்று தெரிவித்தார். (ற)

# மன்மோகன் குறித்து அலுவலகம் விளக்கம்

புதுடில்லி, ஏப்.19


மன்மோகன் சிங்கின் செயற்பாடு குறித்து எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக பிரதமர் அலுவலகம் விளக்கம் அளித்துள்ளது. பத்து ஆண்டுகளில் மூன்று நாள்களுக்கு ஒரு முறை பிரதமர் மன்மோகன் சிங் உரை நிகழ்த்தியதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதனை பிரதமரின் ஊடக ஆலோசகர் பங்கஜ் பச்சோரி தெரிவித்துள்ளார் பொருளாதாரத்தை பொறுத்த வரை, வேறு எந்த நாட்டைக் காட்டிலும் இந்தியா நன்கு முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும் பச்சோரி கூறியிருக்கிறார். பிரதமர் அலுவலக நடவடிக்கைகளில் சோனியா காந்தி தலையிட்டதாக மன்மோகன் சிங்கின் முன்னாள் ஊடக ஆலோசகர் சஞ்சய் பாரு எழுதிய புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தமை சர்ச்சை ஏற்படுத்தியது. (ற)

# மோடி பிரதமராவதை தடுக்குமாறு பா.ஜ.க. தலைவர்கள் கோரினராம்

## முலாயம் சிங் யாதவ் தெரிவிப்பு

புதுடில்லி, ஏப்.19

நரேந்திரமோடி பிரதமர் ஆவதை தடுக்குமாறு பாரதிய ஜனதா தலைவர்கள் சிலர் தம்மிடம் கூறியதாக சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் வெளியிட்டுள்ள தகவலால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.



உத்தரப்பிரதேச மாநிலம் மெயின்புரியில் பேசிய அவர், மத்தியில் மூன்றாவது அணிதான் ஆட்சியமைக்கும் என்றும், அதில் சமாஜ்வாதி கட்சிதான் பெரிய கட்சியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அதனால், பிரதமர் பதவிக்கு தான் உரிமை கோருவேன் என்றும் முலாயம் சிங் கூறினார். முன்னதாக இட்டாவா நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பேசிய முலாயம் சிங், நரேந்திர மோடியால் மூன்றாவது அணிக்கு அச்சுறுத்தல் இல்லை என்று கூறினார். மோடி பிரதமர் ஆவதை தடுக்குமாறு பாரதிய ஜனதா தலைவர்கள் சிலர் தம்மிடம்கூறியதாகவும், அதை செயற்படுத்த அவர்களிடம் உறுதியளித்தாகவும் முலாயம் சிங் தெரிவித்தார். பாரதிய ஜனதா தலைவர்களிடையே ஒற்றுமை இல்லை என்றும் முலாயம் சிங் கூறினார். (ற)

# வாக்காளருக்குபணம்; வைகோகுற்றச்சாட்டு

சென்னை, ஏப்.19

விருதுநகர் தொகுதி வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக கேரளாவிலிருந்து கோடிக் கணக்கான பணம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார். மதுரை அருகே சிந்தாமணியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட வைகோ இவ்வாறு தெரிவித்தார். தன்னை தோற்கடிப்பதற்காக வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கும் முயற்சிகளும் நடந்து வருவதாக வைகோ கூறியுள்ளார். மக்களவைத் தேர்தலில் புதிய வாக்காளர்களால் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும் என்றும் வைகோ நம்பிக்கை தெரிவித்தார். முல்லைப் பெரியாறு, காவிரி மற்றும் மீனவர் பிரச்சினை என தமிழகத்தை சுற்றியுள்ள ஆபத்துகளுக்கு தீர்வு காண தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர்கள் 39 பேரையும் வெற்றிப்பெறச் செய்ய வேண்டும் எனவும் வைகோ கோரிக்கை விடுத்தார். (ற)

# தனி நபரின் கைகளில் இருக்கும் ஜனநாயகத்துக்கு பாதுகாப்பில்லை

## சோனியா காந்தி கூறுகின்றார்

புதுடில்லி, ஏப்.19

ஒரு தனி நபரின் கைகளில் நாட்டின் ஜனநாயகம் பாதுகாப்பாக இருக்காது என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி.

சத்தீஸ்கர் மாநிலம் சுர்குஜா மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட பாத்காவுன் நகரில் தேர்தல் பரப்புரை மேற்கொண்ட அவர், நரேந்திர மோடி என்று குறிப்பிடவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பாரதிய ஜனதா அனைத்து எல்லைகளையும் மீறி வருவதாகக் குறிப்பிட்ட சோனியா காந்தி வெற்றிக்காக எதையும் செய்யத் துணிந்தவர்களிடம் ஜனநாயகம் எவ்வாறு பாதுகாப்பாக இருக்கும் என கேள்வி எழுப்பினார்.

மன்மோகன் சிங் தலைமையிலான அரசு நிறைவேற்றியதைப் போன்று வளர்ச்சித் திட்டங்களை எந்த ஒரு அரசும் நிறைவேற்றிய தில்லை எனக் கூறிய சோனியா காந்தி, ஏழைகளின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

பல்வேறு திட்டங்களுக்காக சத்தீஸ்கர் மாநிலத்திற்கு மத்திய அரசு ஏராளமான நிதியை அளித்ததாகக் குறிப்பிட்ட அவர், ஆனால், பாரதிய ஜனதா தலைமையிலான மாநில அரசு அதனை சரியாக பயன்படுத்தவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார். (ற)



# மோடியின் திருமண விவகாரத்தில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு

புதுடில்லி, ஏப்.19


வேட்புமனு தாக்கலின்போது இணைக்கப்பட்ட பிரமாணப் பத்திரங்களில் தான் திருமணமானவர் என்ற தகவலை மறைத்தார் என பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்கு எதிராக கொடுத்துள்ள முறைப்பாட்டு மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிக்கையாக தாக்கல் செய்யும் படி பொலிஸாருக்கு அகமதாபாதில் உள்ள நீதிமன்றம் உத்தரவு விட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டு மனுவை ஆம் ஆத்மி கட்சியின் நிர்வாகி வர்மா என்பவர் தாக்கல் செய்துள்ளார். 2012 ஆம் ஆண்டு நடந்த குஜராத் சட்டசபைத் தேர்தலின் போது தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் திருமணமானவரா? என்பதை தெரிவிக்காமல் மோடி மறைத் தார் என்று இந்த மனுவில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வதோதரா மக்களவைத் தொகுதிக்கு போட்டியிட தாக்கல் செய்த வேட்பு மனு பிரமாணப் பத்திரத்தில் தான், திருமணமானவர் என்றும் தனது மனைவி பெயர் யசோதா பென் என்பதையும் முதல் முறையாக மோடி அறிவித்தார்.

முந்தைய தேர்தல்களின் போது, மோடி திருமணமானவர் என்பதை மறைத்தது பற்றி தான் கொடுத்த முறைப்பாடு மீது பொலிஸ் நடவடிக்கை எடுக்காததால் நீதிமன்றத்தை நாடினார் வர்மா. மோடி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி குஜராத் தலைமை தேர்தல் அதிகாரி அனிதா கார்வாலுக்கும் வர்மா கடிதம் எழுதியுள்ளார். (ற)

"வதோதரா மக்களவைத் தொகுதிக்கு போட்டியிட தாக்கல் செய்த வேட்பு மனு பிரமாணப் பத்திரத்தில், தான் திருமணமானவர் என்றும் தனது மனைவி பெயர் யசோதா பென் என்பதையும் முதல் முறையாக மோடி அறிவித்தார்.



பெருநாட்டில் மிகவும் சக்தி வாய்ந்த எரிமலையொன்று கரும்புகையுடன் நெருப்பைக் கக்கி வருகிறது. பெரு நாட்டின் உபினாஸ் என்ற இடத்தில் உள்ள எரிமலை மிகவும் சக்தி வாய்ந்தது. இது பெரு நாட்டின் 2வது பெரிய நகரமான அரீ குய்பாவில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. 18.609 அடி (5.672 மீற்றர்) உயரம் கொண்ட இந்த எரிமலை, கடந்த சில நாள்களாகவே குமுறிக் கொண்டிருந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் அது வெடித்துச் சிதறியதால், அதிலிருந்து கரும்புகையுடன் நெருப்புக் குழம்பு ஆறாகப் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. எரிமலை வெடிப்பதற்கு 3 நாள்களுக்கு முன்பே உபினாஸ் பகுதியில் உள்ள சுமார் 4 ஆயிரம் குடியிருப்புகளில் வசித்தவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அத்துடன் 30 ஆயிரம் கால் நடைகளும் அப்புறப்படுத்தப்பட்டு சுமார் 20 கி.மீற்றர் தூரத்தில் பாதுகாப்பாக பேணப்பட்டுவருகின்றன. அதனால் பெருமளவில் சேதம் தவிர்க்கப்பட்டது.

# உக்ரைன் விவகாரத்தில் சமரசம்

## இணங்கியது ரஷ்ய அரசு

மொஸ்கோ, ஏப்.19


உக்ரைனில் நிலவி வரும் பதற்றத்தை தணிக்க ஒத்துழைப்பு வழங்குவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. ஜெனிவாவில் நேற்று இது குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சர்,

ஜெனிவாவின் அறிக்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டு விட்டோம். அதன்படி உக்ரைனில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையைத் தணிப்பதற்குத் தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக ஆயுதம் ஏந்திய குழுக்கள் அனைத்தும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்ட கட்டடங்கள் அதற்குரிய உரிமையாளர்களிடம் திரும்பிக் கொடுக்கப்பட வேண்டும். உக்ரைனுக்கு படைவீரர்களை அனுப்புவதில் ரஷ்யாவுக்கு விருப்பமில்லை. உக்ரைனுக்கு படை வீரர்களை அனுப்பும் உரிமையை ரஷ்யா பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இல்லை. உக்ரைனின் அனைத்துப் பிரச்சினைகளையும் அரசியல் மற்றும் ராஜதந்திர ரீதியில் தீர்க்க முடியும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# நெஞ்சை உருக வைக்கும் இறுதிநேர குறுஞ்செய்திகள்




சியோல், ஏப்.19

தென்கொரியாவில் கடந்த புதன்கிழமை விபத்துக்குள்ளான படகில் இருந்த மாணவர்கள் தங்களின் பெற்றோர்களுக்கு அனுப்பிய உருக்கமான கடைசி நேர குறுஞ்செய்திகள் வெளியாகியுள்ளன. தங்களை மிகவும் நேசிப்பதாகக் கூறி, ஒரு தாய்க்கு அவரது மகன் குறுஞ்செய்தி அனுப்பியிருப்பது தெரியவந்துள்ளது.

அந்த விபத்தில் சிக்கி உயிரிழந்த 9 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. அதிகமான நீரோட்டம் மற்றும் மோசமான வானிலை காரணமாக காணாமற்போன 287 பேரைத் தேடும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. (ற)

# அல்ஜீரியாவில் ஜனாதிபதித் தேர்தல்

லண்டன், ஏப்.19

வடக்கு ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளியாக உள்ளது. வெளியாகும் முடிவில் பெரும்பான்மையுடன் எவரும் வெற்றி பெறவில்லை என்றால் 15 நாள்களுக்குப் பிறகு இரண்டாவது கட்டத் தேர்தல் நடைபெறும். 15 ஆண்டுகளாக அந்நாட்டில் அதிபர் பதவியில் உள்ள பௌடெஃப்லிகா மீண்டும் வெற்றி பெறுவார் என தகவல்கள் வெளியாகியுள் ளன. (ற)

# ரஷ்ய ஆண்களுடன் இனி உறவில்லை

## உக்ரைன் பெண்கள் அதிரடி முடிவு

கீவ், ஏப்.19

ரஷ்ய ஆண்களுடன் உறவு வைத்துக்கொள்வதில்லை என்று அறிவித்துள்ளனர் உக்ரைன் நாட்டுப் பெண்கள்.

உக்ரைன் நாட்டின் ஒரு பகுதியாக இருந்த கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது. அதிலிருந்து, ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே கடுமையான பகை மூண்டுள்ளது. இந்நிலையில், உக்ரைன் நாட்டு பெண்களில் ஒரு பகுதியினர், தங்கள் தேசபக்தியை வேறுவகையில் காண்பித்துள்ளனர்.

தங்கள் பகுதியை ஆக்கிரமித்த ரஷ்யாவைச் சேர்ந்த ஆண்களுடன் உறவு வைத்துக் கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டை அவர்கள் எடுத்துள்ளனர். இந்த உறவு மறுப்பு போராட்டத்தை அவர்கள் வெற்றிகரமாகத் தொடங்கி உள்ளனர். 'ரஷ்யாவுக்கு கொடுக்காதே' என்று எழுதப்பட்ட ரிசேர்ட் அணிந்து கொண்டு இந்த போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். அந்த ரிசேர்ட் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை உக்ரைன் இராணுவத்துக்கு வழங்க முடிவு செய்துள்ளனர். (ற)

# கழிவு நீரில் குடிதண்ணீர்

லண்டன், ஏப்.19

விண்வெளி வீரர்களின் சிறுநீரை குடிதண்ணீராக்கும் பொறிமுறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விண்வெளியை ஆராய்ச்சி செய்யும் விண்வெளி வீரர்கள் நீண்டகால பயணமாக செல்வது வாடிக்கை. விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் குடிதண்ணீர் குறையும் போது அதனை பூமியில் இருந்து கொண்டு செல்வதற்கும் கூடுதலான செலவு ஆகிறது. இதனைத் தவிர்க்க, விண்வெளி வீரர்களின் சிறுநீர் மற்றும் அவர்கள் குளிக்கும் போது கிடைக்கும் கழிவுநீர் ஆகியவற்றை சுத்திகரித்து குடிதண்ணீராகவும், சிறுநீரில் இருந்து கிடைக் கும் அமோனியாவை எரிபொரு ளாகவும் மாற்றும் கருவியை வெற்றிகரமாகக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த கருவி விண்வெளிப் பயணத்தை கருத்தில் கொண்டுதான் தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

# பி.பி.ஸி. செய்தி வாசிப்பாளர் அழகையாவுக்கு புற்றுநோய்

லண்டன், ஏப்.19

பி.பி.ஸி. ஊடகத்தின் செய்தி வாசிப்பாளரான ஜோர்ஜ் அழகையா புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

58 வயதான ஜோர்ஜ் அழகையா அவர் இலங்கையில் பிறந்த தமிழராவார். இவர் 2007ஆம் ஆண்டு முதல் பி.பி.ஸியில் செய்தி வாசிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார். ஜோர்ஜ் அழகையா, நெல்சன் மண்டேலா, டெஸ்மண்ட்டுட்டு மற்றும் ரொபர்ட் முகாபே உள்ளிட்டவர்களை நேர்கண்டதன் மூலம் பிரபல்யமானவர்.

இந்தநிலையில் அவருக்கு புற்றுநோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

அதையடுத்து அவர் தமது பதவியில் இருந்து ஓய்வு பெற விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# கடத்தப்பட்ட 129 மாணவிகளின் கதி என்ன?

## நைஜீரிய பாடசாலை நிர்வாகம் கவலை

நைபீ, ஏப்.19

நைஜீரியாவில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 129 பாடசாலை மாணவிகள் குறித்த தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று நைஜீரியப் பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவின் சிபோக் பகுதியில் உள்ள போர்னா என்ற பெண்கள் மேல்நிலைப் பாடசாலைக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த தீவிரவாதிகள் அதன் விடுதிக்குள் இருந்த சுமார் 129 மாணவிகளை பலவந்தமாக வாகனங்களில் ஆயுத முனையில் கடத்திச் சென்றனர்.

போர்னா பகுதியின் ஆளுநர், பெண்கள் மேல் நிலைப் பள்ளியைச் சேர்ந்த 16 முதல் 18 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் குறித்து உரிய தகவல் அளிப்பவர்களுக்கு சன்மானம் அளிப்பதாக தெரிவித்துள்ளார். இந்த நிலையில், பாடசாலை மாணவிகளில் 107 பேர் பத்திரமாக விடுவிக்கப்பட்டதாக தீவிரவாதிகள் தகவல் அனுப்பி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் தீவிரவாதிகள் கடத்தி செல்லும் வழியிலேயே சில மாணவிகள் ஜீப்பில் இருந்து கீழே குதித்துத் தப்பிச் சென்று விட்டதாக நைஜீரிய இராணுவத் தரப்பில் அறிக்கை வெளியிடப் பட்டது.

ஆனால், இன்று இது குறித்து போர்னா நைஜீரிய பள்ளியின் முதல்வர் கூறுகையில்; கடத்தப்பட்ட மாணவிகள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் அறியப்படவில்லை. மாணவிகள் விடுவிக்கப்பட்டதாக இராணுவம்சார்பில் ஊடகங்களில் வெளியான தகவல்களில் உண்மை இல்லை. நாங்கள் அனைவரும் மாணவிகள் பத்திரமாக மீட்கப்பட வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வருகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

மேற்கத்திய நாடுகளின் கல்வி முறைபெரும்பாவம் என்றுகூறி அதனை தீவிரமாக எதிர்த்து வரும் போக்கோ ஹரம் அமைப்பினர், சமீப காலமாக பாடசாலை மற்றும் மாணவர்களை குறிவைத்து தாக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## எட்டாம் வார வெற்றியாளர்கள் (13.04.2014)

# வாரம் 50 பரிசுகள்

பரிசு மழையில் நனையுங்கள்

உதயன் சூரியகாந்தி

ESOFT
The Leader in Professional ICT Education
Jaffna.

10,000/=
15 பெறுமதியான பரிசு கூப்பன்கள்

**01. பகீரதன் வனிதா,**
உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு.

**02. கதிரேசன் சுலஸ்ஜனா,**
கிராஞ்சி, சிவபுரம், பூநகரி.

**03. செல்லத்துரை விஜித்தா,**
கிராஞ்சி, சிவபுரம், பூநகரி.

**04. விஜிதன் அபிசன்,**
6 ஆம் வட்டாரம், குமுழமுனை', முள்ளியவளை.

**05. சண்முகப்பிரியா இரத்தி னசபாபதிக் குருக்கள்**
ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு.

**06. நடராஜகுமார் கீர்த்தனன்,**
நவபுர வீதி, கைதடி வடக்கு.

**07. கந்தையா சிவபாலன்,**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**08. சுதாகரன் ரமணன்,**
347/5, கோவில் வீதி, நல்லூர்.

**09. திருமதி வளர்மதி மகவதாஸ்,**
3 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

**10. பாலசுந்தரம் சுபாஸ்கரன்,**
பெரிய நாவலடி, கொடிகாமம்.

**11. செல்வி சி.சங்கீதா,**
அரசடி வீதி, வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.

**12. நா.சுகிதா,**
ஆற்றுப்புலவு, ரைபோல, புதுக்குடியிருப்பு.

**13. சிங்கராசா பிரதீப்,**
750/A கரைச்சிப் பிரதேச சபை, பொதுநூலக வளவு, வட்டக்கச்சி.

**14. திருமதி முருகையா சிவநிதி,**
பாடசாலை வீதி, கட்டுடை, மானிப்பாய்.

**15. திருமதி தயானந்தி சுகந்தன்,**
18, கந்தையா வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

NALIN Information Technologies Pvt Ltd.
பரமேஸ்வராச் சந்தி
யாழ்ப்பாணம்.

5,000/=
2 பெறுமதியான பரிசு கூப்பன்

வெற்றி நிச்சயம்

**01. அழகன் மோகனகுமாரி,**
முதலாம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.

**02. லோகேஸ்வரன் ஆருஷன்,**
இலகடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

MCS IT CAMPUS
34, Sir Pon Ramanathan Road,
Jaffna. 021 222 4070

10,000/=
10 பெறுமதியான பரிசு கூப்பன்கள்

**01. சி.அசோக்கமாலா,**
சந்தை வீதி, உடுப்பிட்டி.

**02. தர்ஷானியா பரமேஸ்வரன்,**
கைதடி, வடக்கு, கைதடி.

**03. கந்தசாமி கஜேந்திரன்,**
சுழிபுரம் பிரதான வீதி, சுழிபுரம், யாழ்ப்பாணம்.

**04. கந்தையா சுரேஸ்குமார்,**
புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

**05. மரியதாஸ் டெனிஸ்ரா,**
மூன்றாம் மைல்கல், சிலாவத்தை, முல்லைத்தீவு.

**06. தேவிகா பத்மராஜா,**
'பெத்தனி' மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.

**07. வீரகத்தி சுலோசனா,**
ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால்.

**08. தம்பிப்பிள்ளை சொக்கலிங்கம்,**
17 ஆம் கட்டை, கொக்குத்தொடுவாய் தெற்கு, முல்லைத்தீவு.

**09. புண்ணியமூர்த்தி பார்த்தீபன்,**
கஸ்தூரி டெக்ஸ்டயில், முள்ளியவளை சந்தை, முள்ளியவளை.

**10. இளையதம்பி வீரசிங்கம்,**
இல.9/2, இராசதுரை வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா.

# வெல்லுங்கள் கொண்டாடுங்கள்

கிருஷ்ணா
ஆவரங்கால்

சதா பொன்ஸ்
பருத்தித்துறை.

அருள்நாயகி
கொடிகாமம்

200/=
16 பெறுமதியான பரிசு கூப்பன்கள்

**01. சுஜீந்திரன் கிரிஜா,**
அம்பன், குடத்தனை.

**02. இரவீந்திரன் சுயதாயினி,**
2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

**03. கிருஷ்ணசாமி இரவீந்திரன்,**
2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

**04. நாகமுத்து சுந்தரலிங்கம்,**
தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.

**05. இராஜரத்தினம் இராஜேந்திரா,**
21 B, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

**06. திலீபன் யாழினி,**
'சிவகிரி' கிளுவானை ஒழுங்கை, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

**07. செல்லையா நந்தகுமாரன்,**
53, நாவலடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**08. ஆனந்தராசா யானுஷன்,**
78, பத்திரகாளி கோவிலடி, வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம்.

**09. கோபாலகிருஷ்ணன் புகழரசன்,**
'அ' பகுதி, பாரதி வீதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**10. பாலசுப்பிரமணியம் நாகராஜ்,**
ஆவடிவேலன், ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

**11. சிவகுமாரன் சங்கீதா,**
இலங்கை மின்சார சபை, பூங்கா வீதி, வவுனியா.

**12. இராசரத்தினம் கோபாலகிருஷ்ணன்,**
'அ' பகுதி, பாரதி வீதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**13. கணேசலிங்கம் ஜெனித்தா,**
இரண்டாம் குறுக்கு வீதி, பருத்தித்துறை.

**14. ஸ்ரீகாந்தன் கீதப்பிரியன்**
இல.30, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**15. இரத்தினம் கிருஷ்ணரூபன்,**
வளலாய் தெற்கு, அச்சுவேலி.

**16. மகேஸ்வரன் யதுர்சன்,**
கேணியடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

500/=
7 பெறுமதியான பரிசு கூப்பன்கள்

THABESHAN AGRO STORE
Palaly Rd, Kondavil
Junction. 0776244858

அபி பேபி மாட்ஸ்
55, கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம்.

**01. திருமதி மணிவண்ணன் எழிலரசி,**
தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.

**02. அஜந்தனா திரவியநாதன்,**
கிளி/ மத்திய கல்லூரி, கிளிநொச்சி.

**03. ரேணுகா ரவிச்சந்திரன்,**
ஹோலி குரஸ் ஆரோக்கிய மத்திய நிலையம், யாழ்ப்பாணம்.

**04. மி.ஆன்சஞ்சிகா,**
6/5, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.


**05. சுந்தரலிங்கம் சுவாநந்தினி,**
'அ' பகுதி, பாரதி வீதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**06. பேரம்பலநாதர் யோகேஸ்வரி,**
எல்லை ஒழுங்கை, கற்கோவளம், பருத்தித்துறை.

**07. தேனுகா வன்னியசிங்கம்,**
இல.5/1, A.V 3 ஆம் ஒழுங்கை, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை.

உதயனுடன் இணைந்திருக்க மறவாதீர்கள்

# வவுனியா கோவில் குளம் இளைஞர் கழகத்தின் பாடல் மற்றும் குறும்படங்கள் வெளியீடு



வவுனியா, ஏப்.19

வவுனியாவில் தனது சமூக சேவைத் திட்டங்களை துரித கதியிலும், செயல்திறன் மிக்க வகையிலும் மேற்கொண்டுவரும் கோவில் குளம் இளைஞர் கழகம், கழகத்தின் பாடலை கடந்த ஞாயிறன்று கோவில்குளம் இந்துக்கல்லூரி மைதானத்தில் வெளியிட்டது.

கோவில்குளம் இளைஞர் கழக நிறுவுநரும், முன் னாள் வவுனியா நகர சபை உப தலைவருமாகிய க.சந்திரகுல சிங்கம் (மோகன்) கழகத்தின் பாடல் இறுவட்டை வெளியிட முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ரும், தற்போதைய யாழ். மாவட்ட வட மாகாண சபை உறுப்பின ருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், கந்தையாசிவநேசன்(பவன்), முன்னாள் வவுனியா நகர சபைத் தலைவரும், தற்போதைய வட மாகாண சபை உறுப்பினருமாகிய வீ. லிங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் பெற்று கொண்டார்.

தொடர்ந்து முல்லை நிமாலின் "வலியின் வரிகள்' பாடல் தொகுப்பின் இறுவட்டை நிமால் வெளியிட வவுனியா நகர சபை முன்னாள் தலைவரும், தற்போதைய வட மாகாண சபை உறுப்பினருமாகிய வீ. லிங்கநாதன், பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து, மதுரா நகர், எல்லப்பர் மருதங்குளம்இளைஞர்கள்இணைந்து வியஜகுமாரின் தயாரிப்பில் புஸ்பராஜாவின் இயக்கத்தில் உருவான "ஒவ்வொரு ப்ரண்டும் தேவை மச்சான்" குறும்படத்தை புஸ்பராஜா வெளியிட, கோவில்குளம் இளைஞர் கழக நிறுவுநரும் முன்னாள் வவுனியா நகர சபையின் உப தலைவருமாகிய க.சந்திர குல சிங்கம்(மோகன்) பெற்றுக்கொண்டார்.

வவுனியாவில் கோவில்குளம் இளைஞர் கழகத்தின் சார்பில் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். இசைத்துறையில் தனது திறமையை வெளிப்படுத்தும் இசை இளவரசன் கந்தப்பு ஜெயந்தன், மற்றும் எமது இளைஞர் கழக தயாரிப்பில் வெளியிடப்பட்ட "தேன் சிந்தும் பூக்கள்" பாடல் நோர்வே நாட் டின் சிறந்த புகைப்பட காணொலி அமைப்புக்கான விருதை தட்டிசென்றமைக்காகவும், பல குறும்படங்கள் மற்றும் பாடல்களுக்கான ஒளிப்பதிவை துல்லியமாக மேற்கொள்ளும் ஸ்டார் மீடியா பிரியந்தன் ஆகியோருக்கு பொன்னாடைகள் போர்த்தி கோவில்குளம் இளைஞர் கழக நிறுவுநரும், வவுனியா நகர சபையின் முன்னாள் உப தலைவருமாகிய க.சந்திரகுலசிங்கத்தால் கௌரவிக்கபட்டார்கள்.

தொடர்ந்து பாடலாசிரியர் பிரகு... னுக்கு ரொக்கற் விளையாட்டு... செயலாளர் திரு யோஜெல் நிரோ... பொன்னாடை போர்த்திக் கௌ... வித்தார். (வ-4...)

## கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் வாழ்வாதார கடன்

வவுனியா.ஏப்.19

கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், (REDO) மக்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வாதார கடன் திட்டத்தை கற்பகபுரம் கிராமத்தில் அண்மையில் அறிமுகப்படுத்தியது.

பெண்கள் அபிவிருத்தி நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த அரச சார்பற்ற குறித்த நிறுவனம், பெண்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் பல புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

தற்போது இந்த நிறுவனம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு "கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்" என்ற பெயரில் இயங்கி வருகின்றது. கிராமங்களில் சுய தொழில்கள் மட்டுமன்றி, குடிசைக் கைத்தொழில், உள்ளூர் உற்பத்திகளை பெருக்குவதற்கும் இந்தக் கடன் உதவி வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

அத்துடன் ஏனைய கிராமங்களுக்கும் இந்தக் கடன் திட்டத்தை அறிமுகம் செய்வதோடு, புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் மேலும் விரிவுபடுத்தவும் நிதியுதவி வழங்கப்படுகின்றது.

கடன் திட்டம் அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் பொருளாளர் சக்திதாஸ் தனுஷ்காந்த, நிதியுதவிகளை வழங்கிய டெல்டா ட்ரைன்கியூஸ் றெட்வோர்க் நிறுவனத்தின் பணிப்பாளர் சூரியகுமாரன் செந்தூரன் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். (வ-402)

## மீசாலை உப தபால் அலுவக... இடம் மாறியது

மீசாலை.ஏப்.19

மீசாலை உப தபால் அலு...கம் தற்போது ஏ-9 வீதியில் உள்ள புதி... கட்டடத்துக்கு மாற்றப்பட்... சாவகச்சேரி அஞ்சலகத்தின் ...ட்டுப்பாட்டின் கீழ் இயங்கு... குறித்த அலுவலகம் முன்பு மீசா...லை ப... முதிர்சோ... நிறு... வனம் அ... பகுதியில் உ... கட்டடம் ஒன்றி... இயங்கி... வந்தது. (வ-122)

CMYK







## இடம் மாறிய... சிவில் நிர்வா... அலுவலகம்

கொடிகாமட... ஏ-9 வீதியில் அ...மைந்தி...ந்த பாதுகாப்புத் ...ரப்பின ரின் சிவில் நிர்வாக அலுவலகம் தற்போது கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் உள்ள பாது...ப்புதரப்பினரின்விடு... அமைந்திருக்கும் ...கத் துக்கு மாற்றப்ப...ள்ளது.

கொடிகாம... மாவீரர் துயிலும் இ...ல்ல வளாகம், தற்போது படைத்தரப்பினரின் விடுதி வசதிகள் கொண்ட கட்டடங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

கொடிகாமம் ...யில் நிலைய கட்டமைப்... வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த நிலை... வடக்குப் ப... ஏ-9 வீதி அருகில் தனியார் கட்... ஒன்றில் குறித்த சிவி... அலுவலகம ... வந்தது. ... தக் கட்... யாளரி... கப்பட்டு... பாதுகாப்புத் த...னர் அந்தக்கட்டட... இருந்தும் வெளியே... ஏமை குறிப்பிடத்... (வ-122)

## 76ஆம் நாள் நினைவலை...

தோற்றம் 1947.02.01
மறைவு 2014.02.07

யாழ்.மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் திருமதி நி.செந்தூரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தனலக்சுமி தேவராஜா**

அவர்களின் மறைவையொட்டி அவரின் ஆத்மசாந்திக்காக கல்லூரி ஆசிரியர் சமூகத்தினர் பிரார்த்திக்கின்றனர்.

ஆசிரியர்கள்
யாழ்/மகாஜனக் கல்லூரி

(46865)(12.3.6)





## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் பொன்னையா
**கனேசன்**
([illegible])

மலர்வு 07.01.1947
உதிர்வு 10.03.2012

திதி : அபரபக்க பஞ்சமி

[illegible]

வாகையடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.


## பெண்ணிடம் சங்கிலி அறுக்க முயன்றபோது விபத்து

வலி.வடக்கு, ஏப்.19

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டு இருந்த இளம் பெண்ணொருவரைப் பின் தொடர்ந்து மற்றொரு மோட்டார் சைக்கிளில் சென்ற திருடன் பெண்ணின் சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளையில் அவ்விருவரது மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதில் இருவரும் படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இணுவில் மேற்கு, வட்டுவினிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இணுவில் பகுதியைச் சேர்ந்த குறிப்பிட்ட இளம் பெண் தலையில் காயமுற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த விபத்து இடம்பெற்றதும் அந்த இடத்தில் கூடிய பொதுமக்கள் சந்தேகத்தின் பேரில் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த நபரை விசாரித்த வேளையில், தான் வேறு ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் ஏறி வந்ததாகவும் தன்னை ஏற்றி வந்தவரைத் தனக்குத் தெரியாது என்றும் பொய் கூறிச் சமாளித்துள்ளார்.

இந்நிலையில் சந்தேகநபரின் மோட்டார் சைக்கிளைப் பற்றிய சந்தேகம் எழுந்த நிலையில் பொதுமக்கள் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளின் பின்புற இலக்கத்தகடு கழற்றப்பட்டிருந்ததும் முன்புறம் பொருத்தப்பட்ட இலக்கம் குறித்து சந்தேகம் எழுந்ததையடுத்து தீவிர விசாரணையின் பின்னர் அது திருடப்பட்ட மோட்டார் சைக்கிளென இனங்காணப்பட்டது.

சந்தேகநபர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் அவர் பயன்படுத்திய கைத்தொலைபேசியும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-86)


## மரண அறிவித்தல்



### முத்துக்குமாரு திருநீலகண்டன்
(முன்னாள் பதுளை வர்த்தகர்)

காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகவும், எண்ணாங்குப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு திருநீலகண்டன் நேற்றுமுன்தினம் (17.04.2014) வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், தவராசா (அமெரிக்கா), சிவரூபன் (குட்டி - T.S.K. Traders - வவுனியா), தர்சினி (வவுனியா), குமுதினி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி (அமெரிக்கா), சிவரூபி (வவுனியா), காந்திநாதன் (விற்பனைப்பிரதிநிதி - களனிகேபில்), சிறிதரன் (நெதர்லாந்து) ஆகியோரின் மாமனும், அபிராமி, குமரன், விபுசனா, லக்சனா, டிலக்ஷனா, திவ்யன், டினோயா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்ற சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதி, மாணிக்கம், சபாரட்ணம், சுந்தரலிங்கம், சிவஞானம், கணேசன், விஜயலக்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலாயுத பிள்ளை, வரதராசா (ஒப்பிலா), இரத்தினசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.113/26, சிவன்கோயில் வீதி, உக்குளாங்குளம் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (19.04.2014) சனிக்கிழமை காரைநகரிலுள்ள அவரது இல்லத் துக்கு எடுத்துச்செல்லப்பட்டு நாளை (20.04.2014) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 758 5918/077 875 2491

(43256) (45.6.3)



## 8ஆம் ஆண்டு நினைவுகளில்



அமரர் நவரத்தினம்
**பிரகாஸ்**
(மல்லாவி மத்திய கல்லூரி கணிதப்பிரிவு மாணவன்)

மண்ணில் 24.02.1988
விண்ணில் 19.04.2006

திதி: 20.04.2014

உனைப் பிரிந்து
எட்டாண்டுகள் கடந்தாலும்
உன் நினைவுகளைச் சுமந்தபடி வாழும்
உன் உறவுகள்

வாகை...டிச்சந்தி, மட்டுவில் தெற்கு.

குடும்பத்தினர்.
(46870)(4.3.6)


## கடலட்டை, கடற்பாசி உற்பத்தி குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.19

வர்த்தக நோக்கை அடிப்படையாகக் கொண்ட கடற்பாசி மற்றும் கடலட்டை உற்பத்தி மற்றும் அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களைத் தெளிவுபடுத்தும் செயலமர்வு ஒன்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தினால் எதிர்வரும் 25 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் கட லட்டை மற்றும் கடற்பாசி வளர்த்தல் மற்றும் அவற்றைச் செயன்முறைப்படுத்தி உள்ளூர் மற்றும் ஏற்றுமதி தொடர்பான வழிகாட்டல்களு டன் கூடிய பூரண விளக்கமளிக்கும் செயலமர்வாக மேற்படி நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி செயலமர்வுகளில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளோர் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம், இல 124, இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள வர்த்தக தொழில் துறை மன்றத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)


## நீங்கா நினைவலைகள்

40ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு





அமரர் அருணாசலம்
சச்சிதானந்தமுதலி
(ஆசிரியர்)

திருமதி ச. சந்திராதேவி
(ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்)

| | பிறப்பு | |
|---|---|---|
| 13.05.1918 | பிறப்பு | 24.03.1954 |
| 25.01.1974 | இறப்பு | 29.04.2013 |

...ன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
...ன்புடனே எமை வளர்த்து பாசமழை பொழிந்து
...ன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
...டி சேர்ந்தீர்களே என்றும் நாம் மறவோம்.

எமக்காய் உழைத்த அன்புத் தெய்வங்களே
இங்கு நாங்கள் உங்களை இழந்து தவிக்கிறோம்.
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

...ட்டநாதர் வீதி,
திரு...ல்வேலி கிழக்கு,
...ழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(46876)(7.6.3)



## மரண அறிவித்தல்

### மாணிக்கம் மணிவாசகம் (செட்டி)



புங்குடுதீவு, 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் யோகர்சுவாமி வீதியை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் மணிவாசகம் 17.04.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-பரமேஸ்வரி தம்பதியினரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரியின் அன்புக்கணவரும் பத்மாவதி(கனடா), பவளாம்பாள், மகேஸ்வரி (கனடா), தியாகராசா(சட்டத்தரணி), காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் மாயாவதி, பேரின்பமூர்த்தி(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான வரலட்சுமி, சடாச்சரதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் தனபாலசிங்கம், சிவராசமதி, செல்வராணி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பிரகாஷன்(பிரகாஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்- ஆறுகால்மடம்), பிரியந்தினி(கனடா), கீர்த்தீபா(ஆசிரியை-யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), சதீஸன்(பிரகாஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்-ஆறுகால்மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தன் (கனடா), ராஜபாலசிங்கம்(ஆசிரியர்-கிளி.செல்லியாதீவு அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாணுஜனின் (கனடா) பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

131/2, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
077 071 1238

(46898)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

## தொழில்நுட்பப் பிரிவு நடத்த அனுமதி

துணுக்காய்.ஏப்.19

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி மத்திய கல்லூரியில் தொழில்நுட்பப் பிரிவொன்றை நடத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக கல்லூரி அதிபர் து.யேசுனானந்தர் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி, மற்றும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் என்பவற்றில் தொழில் நுட்பப் பிரிவை நடத்த அனுமதி கிடைத்திருந்தது. இவ் வாண்டு மல்லாவி மத்திய கல்லூரிக்கு அத்தகைய அனுமதி கிடைத்துள்ளது. (ஒ-18)

# பாதுகாப்பற்ற பாலத்தால் பயணிக்கும் பொதுமக்கள்

*நேரில் சென்று பார்வையிட்டார் ரவிகரன்*

யாழ்ப்பாணம்.ஏப்.19

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பிரதேசங்களை இணைக்கும் பாதை சீர்செய்யப்படாமல் இருப்பதனால் நாளாந்தம் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பாதையில் தடிகளால் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பற்ற பாலத்தால் மக்கள் உயிராபத்தையும் எதிர்கொண்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில், கூளாமுறிப்பு கிராம அலுவலர் பிரிவையும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில், மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவையும் இணைக்கும் பாதை இன்னமும் சீர்செய்யப்படாததால் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாளாந்தம் 500 இற்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் பாதையால் பயணம் செய்கின்றனர். இரண்டு பிரிவுகளையும் இணைக்கும் இந்தப் பாலத்தை முறைப்படி நிர்மாணிக்காததால் நாளாந்தம் பிரயாணம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வசந்தபுரம், கெருடமடு (மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவு) கிராம மக்கள் மழை காலங்களில் வைத்தியசாலைக்கு மட்டுமல்லாமல் அத்தியாவசிய தேவைகளின் பொருட்டும் மேற்படி பாதையை பயன்படுத்த இயலாமல் சிரமமடைகின்றனர்.


பாலத்தை பார்வையிட்டார் வடமாகாண சபை உறுப்பினர்.

தடிகளால் அமைக்கப்பட்ட தற்காலிக பாதையைப் (பாலத்தையும்) பயன்படுத்தியே மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர். ஒருவகையில் உயிராபத்தான பயணத்தை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுதொடர்பில்வடக்குமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் குறிப்பிட்ட இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

பாதையைச் சீர் செய்து தருவது தொடர்பில் வடக்கு மாகாணசபையின் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# அரசியல்வாதிகளின் ஆசியுடன் சட்டவிரோத மண் அகழ்வு

*மாந்தை மேற்கு கூராய் கிராம மக்களை அச்சுறுத்திக் காரியம் சாதிப்பு; இம்மானுவேல் செபமாலை அடிகளாரிடம் முறையீடு*

மன்னார்,ஏப்.19

மன்னார் மாவட்டம், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீள் குடியேற்றம் செய்யப்பட்ட கூராய் கிராமத்தில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு இடம் பெற்று வருகிறது. தென்பகுதியை சேர்ந்த நபரொருவர் அரசியல்வாதிகளின் செல்வாக்குடன் குறித்த கிராம மக்களை அச்சுறுத்தி மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றார் என்று அந்தக் கிராம மக்கள் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளாரிடம் முறையிட்டுள்ளனர்.

கூராய் கிராம மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் சென்று பார்வையிடுவதற்காக புதன் கிழமை மன்னார் பிரஜைகள் குழுவினர் குறித்த கிராமத்துக்கு சென்றிருந்தனர்.

குருணாகலையைச் சேர்ந்த குறிப்பிட்ட அந்தநபர் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்டுவருவதாக பிரஜைகள் குழுவினருக்கு அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

கூராய் கிராமத்தைச் சேர்ந்த இரு வருக்கு வயல்காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.


கூராய் கிராமம்

எனினும் தென்பகுதியை சேர்ந்த குறிப்பிட்ட நபர் தன்னிச்சையாக அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி குறித்த கூராய் கிராம மக்களுக்கு சொந்தமான காணியில், வேறு இடங்களில் அகழ்ந்தெடுக்கப்படும் மண்ணைச் சேகரித்து வருவதாக அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் குறித்த கிராமத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட இருவருக்கு வயல் காணிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கிராம அலுவலர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை குறித்த கிராமத்தில் தற்போது இடம் பெற்று வரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் அந்தக் கிராம மக்கள் மன்னார் பிரஜைகள் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

குறித்த கிராமத்தில் கோடைற் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் இது வரை முற்றுப் பெறாமல் உள்ளமை, கூராய் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு மண் அகழ்வுக்கான அனுமதிபத்திரம் உள்ள போதும் அதனை பயன்படுத்த முடியாமை உட்பட பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம் என்று மக்கள் கூறினர்.

இதுவரையில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கோ அல்லது அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறித்த கிராமத்தில் அபிவிருத்திகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் 26 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டத்தை கடந்த 2011 ஆம் ஆண்டு கோடைற் என்ற அரச சார்பற்ற நிறுவனம் வழங்கியுள்ள போதிலும், வீடுகள் சரியான முறையில் நிர்மாணித்துக் கொடுக்கப்படவில்லை. வீடுகளின் கட்டுமானபணிகள் பூர்த்தியடையாமல் காணப்படுகிறது.

இவ்வாறாக பல சிரமங்களுக்கு மத்தியில் நாங்கள் வாழ்ந்து வருகின்றோம் என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த வடமாகாண தேர்தலின் போது குறித்த கிராமத்துக்கு சென்ற பல கட்சிளையும் சேர்ந்த வேட்பாளர்கள் பல வாக்குறுதிகளை அவர்களுக்கு கொடுத்திருந்தனர். எனினும் அவர்கள் தேர்தலுக்கு பின் அப்பகுதிக்கு இன்று வரை சென்று பார்க்கவில்லைஎன்றுமக்கள்கூறினர்.

எனவே கூராய் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மன்னார் பிரஜைகள் குழு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-56)

## தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுங்கள்

*ஆனந்தபுரம் மக்கள் வேண்டுகோள்*

முல்லைத்தீவு, ஏப்.19

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதிகளில் நிலவிவரும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பிரிவின்கீழ்உள்ளஆனந்தபுரம் பகுதியில் குறிப்பிட்ட சில பகுதிகளில் கிணறுகள் உவர் நீர்க் கிணறுகளாக காணப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த பகுதிகளிலுள்ள குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் போதியளவு குடிதண்ணீர் கிடைப்பதில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

ஆனந்தபுரம் பகுதியில் நிலவிவரும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் குடிதண்ணீர்விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் தற்போது 223 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-55)

## பொது நோக்கு மண்டபம் அமைத்துத்தர வேண்டும்

*மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை*

கிளிநொச்சி, ஏப்.19

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் பொது நோக்கு மண்டபம் ஒன்றை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தர்மபுரம் கிழக்குப் பகுதியில் சுமார் 450 குடும்பங்களைச் சேர்ந்த 1200 வரையான பொதுமக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அந்தப் பகுதியின் தேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கோ அல்லது கூட்டங்கள் நடத்துவதற்கோ பொது இட வசதி எதுவும் இல்லை. நியாப் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே அமைக்கப்பட்ட பொது மண்டபத்தில் 20 பேர் மட்டும் இருக்கக் கூடியதான இட வசதி மாத்திரமே உள்ளது.

எனவே இந்தப் பகுதியில் ஒரு பொது மண்டபத்தை அமைத்துத் தருமாறு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச-55)

# மன்னாரில் மீண்டும் மீனவர்களுக்கு பாஸ் நடைமுறை

மன்னார்,ஏப்.19

மன்னார் மாவட்டத்தில் மீண்டும் மீனவர்களுக்கு கடற்தொழிலில் ஈடுபடுவதற்கான "பாஸ்" நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும், இதனால் மீனவர்கள் மீண்டும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மீனவர்கள் கடந்த காலங்களில் மீன்பிடிப்பதற்கு தொழிலுக்குச் செல்வதற்காக "பாஸ்" நடைமுறை அறிமுகபடுத்தப்பட்டது. கடற்படையினர் கடற்கரையில் சோதனைகளை மேற் கொள்ளும் போது "பாஸ்" உள்ள மீனவர்கள் மாத்திரமே கடலுக்குச் செல்லக்கூடிய நிலை காணப்பட்டது.

இந்த பாஸ் நடைமுறையினால் மீனவர்கள் உரிய நேரத்துக்கு தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை காணப்பட்டதோடு கடற்படையினரின் சோதனை நடவடிக்கையின் பின்பே கடலுக்குச் செல்ல முடியும் என்ற நிலை நிலவியது. இதனால் உரிய நேரத்தில் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் மீனவர்கள் காணப்பட்டனர்.


கோப்புப்படம்

பின்னர் "பாஸ்" நடைமுறை விலக்கிக்கொள்ளப்பட்டதையடுத்து, மீனவர்கள் சுதந்திரமாக கடற்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது மீண்டும் 'பாஸ்' நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட கடற்றொழில்திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் எவ்வாறு பாஸ் நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதோ அதேபோன்று மீண்டும் பாஸ் நடைமுறை கடைப்பிடிக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதனால் மன்னார் மாவட்ட மீனவர்கள் கடந்த போர் காலத்தில் அனுபவித்த பிரச்சினைகளை மீண்டும் அனுபவிக்கும் நிலை ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-56)

## நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி,ஏப்.19

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான நேர்முகத் தேர்வுகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையான மூன்று நாள்களிலும் இந்த நேர்முகத் தேர்வு பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை பிரதேச சபையின் அலுவலக பெயர் பலகையில் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-18)

# சீனக்குடா கடற்கரை காணிகளை கைபகப்படுத்தியது விமானப்படை

## திரிசங்கு நிலையில் மக்கள்

திருகோணமலை,ஏப்.19
திருகோணமலை மாவட்டம், சீனன்குடாவை அண்மித்த வெள்ளைமணல் கடலோர பகுதியில் பொதுமக்கள் தேவைகளுக்காகப் பயன் படுத்தப் பட்டுவந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி விமானப் படையினரால் திடீரெனக் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்று மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மபுள் கடற்கரை தொடக்கம் கருமலையூற்று வரையிலான நிலப்பகுதியை விமானப்படை சுவீகரிப்பதற்கான எல்லைகள் அடையாளமிடப் பட்டு, முட்கம்பி வேலிகளும் போடப்பட்டு, இந்த நிலம் விமானப் படைக்குரியது என்கிற அறிவிப்பு பலகைகளும் அந்தப் பகுதியில் நடப்பட்டுள்ளன.

இந்தக் காணிகள் யாவும் அரசுக்குச் சொந்தமான காணிகளாக இருந்தாலும், அந்த காணி அமைந்துள்ள

> விமானப்படை சுவீகரிப்பதற்கான எல்லைகள் அடையாள மிடப் பட்டு, முட்கம்பி வேலிகளும் போடப்பட்டு, இந்த நிலம் விமானப் படைக்குரியது என்கிற அறிவிப்பு பலகைகளும் அந்த பகுதியில் நடப்பட்டுள்ளன.

பிரதேசம் மக்களால்கால் நடை வளர்ப்பு, கருங்கல் உடைப்பு, பயிர்ச் செய்கை என பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப் பட்டுவந்ததாகக் கூறப்படுகின்றது. விமானப்படையின் இந்தக் காணி சுவீகரிப்பு காரணமாக அந்த பகுதி மக்களின் வாழ்விடமும், வாழ்வாதாரமும் இழக்கப்படுவதோடு அவர்களின் அன்றாட செயற்பாடுகளுக்கான சுதந்திரமும் இழக்கப்படுகிறது என்று. மக்கள் கூறுகின்றனர். (ச)

# குடும்பங்களுக்கு அரிசிப் பொதிகள்



அரிசிப் பொதியை வழங்கினார் சுபைர்

மட்டக்களப்பு,ஏப்.19
மட்டக்களப்பு மாவட்டத்தின் காசாங்குடா, கித்துள், உறுகாமம் ஆகிய கிராமங்களிலுள்ள 100 குடும்பங்களுக்கு அரிசிப் பொதிகள் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப் பட்டன.
லிபிய நாட்டின் இலங்கைக்கான இஸ்லாமிய அமைப்பு பணியகத்தின் ஏற்பாட்டில் இந்தக் கிராமங்களிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 கிலோ அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ். சுபைர் தலைமையில் நடைபெற்றது. (ச)

# வீட்டுக்குள் புகுந்து பெண்களை அச்சுறுத்திய கடற்படை சிப்பாய்

## ஒலுவிலில் மக்கள் போராட்டம்



கடற்படைச் சிப்பாயின் நடவடிக்கையைக் கண்டித்து மக்கள் போராட்டம்

அம்பாறை,ஏப்.19
ஒலுவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 10.30 மணிக்கு வீடொன்றினுள் கடற்படைச் சிப்பாய் ஒருவர் அத்துமீறி நுழைந்து பெண்களை அச்சுறுத்த முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது
குறிப்பிட்ட கடற்படைச் சிப்பாயை பொதுமக்கள் பிடித்து அருகில் இருந்த கடற்படை முகாமில் ஒப்படைத்த போது, அங்கிருந்த சிப்பாய்களால் அந்த கடற்படைச் சிப்பாய் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளார்.
அதனையடுத்து இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
அந்தப் பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் ஒன்று கூடி கடற்படை முகாம் அதிகாரிகளுக்கு எதிராகக் கோஷமிட் டனர்.
பெண்களை அச்சுறுத்திய குறித்த கடற்படைச் சிப் பாயை உடனடியாகப் பொலிஸார் கைது செய்ய வேண்டும். அந்தக் கடற்படை முகாமையும் அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோஷமிட்டனர்.
வீதியில் ரயர்களைப் போட்டு எரித்து பொதுமக்கள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர்.
சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டோரைக் கைது செய்வோம் என்று பொலிஸார் தெரிவித் தனர்.
அதனையடுத்து பொது மக்கள் தங்களது ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர். (ச)

# ஒலுவில் வளாக நூலகத்தை நாளை திறந்து வைப்பார் மஹிந்த



மஹிந்த ராஜபக்ஷ

அம்பாறை, ஏப்.19
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை ஞாயிற்றுக்கிழமை வருகை தரவுள்ளார்என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் எஸ்.முஹம்மட் இஸ்மாயில் தெரிவித்தார்.
மஹிந்த சிந்தனை தூர நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் 200 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய நூலகத்தை யும், 160 மில்லியன் ரூபா செலவில் நிர் மாணிக் கப்பட் டுள்ள வர்த்தக, முகாமைத்துவ பீடக் கட்டடத் தொகுதியையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.
ஒலுவில் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் சந்திப் பொன்றிலும் ஜனாதிபதி கலந்து கொள்வார்.
இந்த நிகழ்வுகளில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸ நாயக்க, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல். எம்.அதாவுல்லா ஆகியோர் உட்பட மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-30)

## மண்முனைப் பாலம் இன்று திறப்பு

மட்டக்களப்பு,ஏப்.19
மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,870 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மண்முனைப் பாலத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று சனிக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக் கவுள்ளார்.
இந்தப் பாலம் 210 மீற்றர்கள் நீளத்தையும் 9.8 மீற்றர்கள் அகலத்தையும் கொண்டுள்ளது.
பாதசாரிகள் பயணிக்கக் கூடிய வகையில் 488 மீற்றர் நீளமும், 10 மீற்றர் அகலமும் கொண்டதான சப்பாத்துப் பாலமும் இந்தப் பாலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (ச)


## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி வேலாயுதபிள்ளை(B.A)

(இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியை,சித்தங்கேணி இந்துக் கல்லூரி)



கொழும்பு, தெஹிவளையில் வசித்து வந்த திருமதி திலகவதி வேலாயுதபிள்ளை 16.04.2014 புதன்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (இளைப்பாறிய அதிபர்,Teachers Training College, அட்டாளைச்சேனை)அவர்களின் அன்பு மனைவியும், நிரஞ்சன் (ஜேர்மனி), காலஞ்சென்ற Dr.சுதர்சன்(கொழும்பு பெரியாஸ்பத்திரி), குமுதினி,(ஆசிரியை, ஹமீட் அல் ஹுசைன் கல்லூரி, கொழும்பு),அசோகன் (பாகிஸ்தான்), மாலினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும்,காலஞ்சென்ற சீவரட்ணம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், நாகேஸ்வரி (சாந்தி), வாசுகி(அன்பரசி), மனோகரி, ராகுலன் ஆகியோரின் அன்பு மாமியும், அனுஜன், வினுஷன், சுகன்யா, தர்ஷன், விதூஷன், நிரூஷன், சாரூஷன் ஆகியோரின் பாட்டியும், வியாசன், தனுஷன் ஆகியோரின் அம்மம் மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நாளை(20.04.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, மாலை 4.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குமுதினி
011 273 7585

(சி/13379)(5.6.3)



## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா மார்க்கண்டு



கோண்டாவில் மிசன் பாடசாலை வீதியைச் சேர்ந்த திருமதி நல்லம்மா மார்க்கண்டு 14.04.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் இலட்சுமி தம்பதியரின் பாசமுள்ள மருமகளும், சபாபதி, செல்லையா (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புஸ்பராணி, இந்திராணி (பிரான்ஸ்), இராசேந்திரம், மகேந்திரம், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் புஸ்பராசா ஆகியோரின் அன்புத் தாயும், இராசரத்தினம், மயில்வாகனம் (பிரான்ஸ்), சோதிராணி, சகுந்தலா, சத்தியபாமா ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீகணேஸ் (கனடா), பாமினி (கனடா), பிரகாஸ் (லண்டன்), அஜந்தா (லண்டன்), தர்ஷினி (பிரான்ஸ்), சசிராசா (பிரான்ஸ்), காயத்திரி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அருள்செல்வன் மற்றும் வேணிகா, தர்சினி, கோபிஜன், வருண் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும், அபிராம் (கனடா), ஓவியா (கனடா), மகீஸ் (லண்டன்), சஸ்ரிகா (பிரான்ஸ்), சசித்தா (பிரான்ஸ்), சசிராம் (பிரான்ஸ்), ஸ்ரீராம் (பிரான்ஸ்), அபினாஸ் (பிரான்ஸ்), அபிரா (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசைப்பூட்டியும், சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான கனகராசா, கனகம்மா (மலேசியா), நடராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிசன்பாடசாலை வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(46953)(12)(3.6)

# மது போதையில் வாகனங்களை செலுத்தியோரின் 'லைசன்ஸ்' ரத்து


சித்திரை புத்தாண்டு காலத்தில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை கண்டுபிடிக்கப்பட்ட 12 சாரதிகளின் சாரதிய அனுமதிப் பத்திரங்களை முழுமையாக ரத்துச் செய்வதற்கு நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையான காலப் பகுதியில் குடிபோதையில் வாகனங்களைச் செலுத்திய 1,315 வாகனச் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 12 பேருடைய சாரதிய அனுமதிப் பத்திரங்களை முற்றுமுழுதாக ரத்துச் செய்வதற்கு நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஏனைய சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரங்களை குறைந்தது ஒரு வருடத்துக்காவது இடைநிறுத்தி வைப்பதற்கு நீதிமன்றத்தின் உதவி நாடப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் இடம்பெற்ற 56 வீதி விபத் துக்களில் 62 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தக் காலப் பகுதியில் மொத்தமாக இடம்பெற்ற 592 வீதி விபத்துக்களில் 126 பேர் படுகாயமடைந்திருப்பதுடன், 243 பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சொத்துக்களுக்கு சேதங்களை ஏற்படுத்திய வகையிலான 243 வீதி விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன என்று அவர் கூறினார். 2013 ஆம் ஆண்டு மது போதையில் வாகனங்களைச் செலுத்திய 51,764 சாரதிகள் கைது செய்யப்பட்டதுடன், 2014ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் புத்தாண்டு முடிவு வரை 14,153 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ச)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அஸ்கிரிய மகா விகாரைக்கு சென்று அஸ்கிரிய பீட மஹாநாயக்க தேரர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரரை சந்தித்து ஆசி பெற்றுள்ளார். இதன்போது ஹபுத்தலை - பெரகல பகுதிகளிலுள்ள நபரொருவரால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்களிடம் கையெழுத்துப் பெறப்பட்ட மனு ஒன்று மஹாநாயக்க தேரரால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ச-10)

# பயங்கரவாதப் பட்டியலில் இணைத்தது சரியானதே

## பொது பல சேனா குறித்த பல்வேறு ஆதாரங்கள் உள்ளன என்கிறது பயங்கரவாத ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நிறுவகம்

கொழும்பு.ஏப்.19

பொது பல சேனா அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் இணைத்தமை சரியானதே என்று பயங்கரவாத ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

> பொதுபல சேனா அமைப்பு, கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள், சிறுபான்மையினத்தவரின் கடைகள், அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

கடும்போக்குடைய மதவாதக் கொள்கைகளை இந்த அமைப்பு முன்னெடுத்து வருகிறது என்றும் இந்த நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பிலான வீடியோ மற்றும் ஏனைய ஆதாரங்கள் உள்ளதாகவும் இந்த நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

பொதுபல சேனா அமைப்பு, கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள், சிறுபான்மையினத்தவரின் கடைகள், அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது என்று இந்த நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்ட அமைப்புக்களை அடையாளம்கண்டு அவற்றை பயங்கரவாதப் பட்டியலில் இணைத்துள்ளதாகவும், இதில் எவ்வித தவறும் இல்லை என்றும் பயங்கரவாத ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நிறுவகம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# பட்டதாரிகளை இணைக்க ஒத்துழைப்புகள் தேவை

## அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.19

அரசதுறை தொழில்வாய்ப்புகளுக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் அரசின் நடவடிக்கைகளுக்கு மாகாண சபைகள் தமது முழுமையான பங்களிப்பை வழங்குவது அவசியம் என்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன கேட்டுக் கொண்டுள்ளார்.



ஜோன் செனவிரத்ன

பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும்போது, மாகாண சபைக்குட்பட்ட நிறுவனங்களிலும் அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம் என்று அவர் கூறினார். வேலை வாய்ப்பின்மை பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மாகாண சபைகள் அரசுக்கு உறுதுணையாகச் செயற்படுவது முக்கியம் என்றும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் சகல மாவட்ட அரச அதிபர்களுக்கும் அமைச்சர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (ச)

# மஹிந்தவை விரைவில் சந்திரிகா சந்திப்பார்

## 25 இற்குப் பின்னர் நாள் ஒதுக்கீடு




கொழும்பு.ஏப்.19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவுக்கும் இடையில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பின்னர் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இந்த மாதம் 16 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சந்திப்பை நடத்த முடியாது என்று சந்திரிகா அறிவித்திருந்தார். அவர் 25 ஆம் திகதிக்கு பின்னர் சந்திப்பை நடத்த நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளார்.

அதற்கமைய 25 ஆம் திகதிக்கு பின்னர் இந்த மாதத்துக்குள்ளேயே சந்திப்பு நடத்த ஒரு திகதியை ஜனாதிபதி ஒதுக்கி வழங்குவார் என்று கூறப்படுகிறது. (ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
அப்புக்குட்டி முத்துக்குமாரு

கண்குளிர
10.02.1922

கண்ணீர்சொரிய
20.03.2014

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகதார்
உள்ளத்துள் எல்லாம் உளன்" - குறள்

நித்திலத்தில் நிறைவாழ்வு கண்ட எங்கள் ஐயாவே!
வாழ்ந்த காலம் போதுமென நினைத்தீர்களா?
வஞ்சகக் காலனவன் உங்களைக் கவர்ந்திட்டுப் போகும் போதும்
ஒரு வார்த்தை கூடக் கூறாது போனதேன் ஐயா?
உறவுகளுக்கு பெரும்பாலம் அமைத்த எங்கள் உத்தமரே!
ஆண்டவன் அளித்த அன்புப்பரிசு தான் நீங்கள் அப்பப்பா
மறு பிறவியிலும் உங்கள் உறவு எங்களுக்கு வேண்டும் அப்பப்பா!
பார் போற்ற வாழ்ந்திட்ட பாசமிகு ஐயாவே - இனி
உங்கள் நினைவை சுமந்து காலம் முழுவதும்
நீங்கள் காட்டிய நல்வழி தொடர்வோம் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்திபெற நுணாவில்குளம் கண்ணகை அம்மனை இருகரம் கூப்பி பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயருடன்
மகன் -சுந்தரலிங்கம் குடும்பம்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23 - 11 - 1949



இறைவன் அடியில்
30 - 04 - 2013

திதி: 19.04.2014

திருமதி பாக்கியலட்சுமி செல்வராசா

ஓராண்டு உருண்டே போனதுவோ- நாம்
உனையிழந்து துவளும் நிலையதற்கு
ஆண்டாண்டு தோறும் நீ எமக்கு- இங்கு அருகிலிருந்து
அரவணைப்பாய் என்றிருந்தோம்
பூண்ட நற்பண்புகளால் எம்மிடையே- நற்புகழ் புரிந்த
இல்லத்தரசியாயிருந்தாய்
மீண்டும் நீங்கு வந்திடாயோ- விழிநீர் துடைத்து
மகிழ்வதைத் தந்திடாயோ
தாண்டிடும் துயரங்கள் ஏராளம்- நீ தந்திட்ட துயரமே நிரந்தரம்
மாண்டு மறையும் மனித வாழ்வில்-தினம் தோன்றிடும்
மாயக்காட்சிகள் மீண்டிடாது உளம் மூழ்கியே துடிக்குது
மாற்றம் தந்திட ஓடி நீ வாராயோ வேண்டுகிறோம்
இறையருள் கிடைக்கும்-நீ ஏகிடுமிடத்தில் சாந்திபெற
ஓம் சாந்தி சாந்தி சாந்தி !

குடும்பத்தினர்.

(C.13380)(5.6.3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தென்னாபிரிக்க அனுசரணை முயற்சி வெற்றி அளிக்குமா?

நல்லிணக்கம், சமாதானம், தீர்வு முயற்சிகளுக்கு உலக அரங்கில் தென்னாபிரிக்கா சிறந்த எடுத்துக்காட்டு என்று கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் தென்னாபிரிக்கா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான கூட்டமைப்புக்கும் அரச தரப்புக்கும் இடையிலான பேச்சுகள் இரண்டு வருடங்களுக்கு மேலாக முட்டுக்கட்டை நிலையில் உள்ளன. இப்பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குமே தென்னாபிரிக்கா முயற்சி செய்து வருகிறது.

அரச தரப்பும் கூட்டமைப்பும் தென்னாபிரிக்காவின் அனுசரணைக்கு சாதகமாக சமிக்ஞை காட்டிவிட்டன. இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் தென்னாபிரிக்கா நேர்மையுடன்தான் செயற்படுகிறது என்று கூட்டமைப்புத் தலைவர் புகழாரம் சூட்டியிருப்பதால் அரசதரப்பும் கூட்டமைப்பும் இதனை ஓர் அரிய சந்தர்ப்பமாகக் கருதி முழு ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அரசினால் ஏற்படுத்தப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை ஏற்க மறுத்து - நிராகரித்து தனது நிலைப்பாட்டில் கூட்டமைப்பு உறுதியாக நின்றது. இதன் பயன்தான் தென்னாபிரிக்காவின் அனுசரணை வாய்ப்பு.

அரசும் கூட்டமைப்பும் பேச்சு நடத்தாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. இது தொடர்பான ஏற்பாடுகளில் முரண்பாடு ஏற்பட்டு முட்டுக்கட்டை நிலைமை நீடிக்கும்போது அடுத்து எஞ்சியுள்ள ஒரே தெரிவு சர்வதேச அனுசரணையுடன் பேச்சை முன்னெடுப்பதுதான். இதற்குத்தான் தென்னாபிரிக்கா கைகொடுத்துள்ளது. கூட்டமைப்பு எந்தக் காரணங்களுக்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நிராகரித்ததோ அதே காரணங்கள் தென்னாபிரிக்க மத்தியஸ்த முயற்சியின் போதும் இருக்கப்போகின்றன. ஆகவே பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் அரசியல் தீர்வு காண்பதற்குமான தென்னாபிரிக்காவின் அனுசரணையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. தென்னாபிரிக்கா கடுமையாக முயற்சிசெய்யவேண்டியிருக்கும். இந்த முயற்சியும் தோல்வியடைந்தால் பேச்சை முன்னெடுத்துச் செல்வதற்கு இனி வேறு தெரிவு இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு இரு தரப்புகளும் செயற்படுவது அவசியம்.

நாடாளுமன்றச் செயற்குழுவில் கூட்டமைப்பை பங்குபற்ற வைப்பதற்குத்தான் தென்னாபிரிக்காவின் அனுசரணை என்று அரசு கருதுமானால் நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுகளுக்கு ஏற்பட்ட கதிதான் இதற்கும் ஏற்படலாம். அரச தரப்பு எம்.பிக்களையும் இனவாதிகளையும் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு காணும் என்று எதிர்பார்க்க முடியாது. 13ஆவது அரசமைப்புத் திருத்தம் நீக்கப்பட வேண்டும்; மாகாண நிர்வாக முறைமை ஒழிக்கப் படவேண்டும்; புலம்பெயர் தமிழர் அமைப்புகளைத் தடைசெய்தது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தடைசெய்ய வேண்டும் என்று கூச்சலிடுவோரே அரசிலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும் உள்ளனர். அதனால்தான் தென்னாபிரிக்கா ஆழம் தெரியாது காலை விடுகிறது என்ற கருத்தும் நிலவுகிறது.

இலங்கையில் இன நெருக்கடி என்பது ஏனைய நாடுகளில் உள்ளது போன்றதல்ல. பல தசாப்த காலமாக இது வேரூன்றி வளர்ந்து இன்று சமரசத்துக்கான வாய்ப்புகளை முற்றாக இழந்து நிற்கிறது.

1957இல் தந்தை செல்வாவுடன் பண்டாரநாயக்க ஒப்பந்தம் செய்தபோது அந்த ஒப்பந்தம் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிடும் என்று நம்பினார். 1987இல் ராஜீவ் காந்தியுடன் ஒப்பந்தம் செய்தபோது ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் தீர்வில் நம்பிக்கை இருந்தது. 2002இல் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானபோது ஆறு மாதத்தில் தீர்வை எட்டிவிட முடியும் என்று நோர்வேயின் அனுசரணையாளர் சொல்ஹெய்ம் எதிர்வு கூறினார். ஆறு வருடங்கள் கடந்தும் தீர்வு காண முடியவில்லை. ஆகவே தென்னாபிரிக்கா தனது அனுசரணைப் பணியை மிகவும் நிதானமாக மேற்கொள்வது அவசியம். எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற நிலைப்பாட்டில் இருந்தால் அது இனப்பிரச்சினைத் தீர்வை மேலும் கடினமாக்கிவிடும். தீர்வுக்கான வாய்ப்பு முற்றாக இழக்கப்பட்டு விடலாம்.

# ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணை

## நீதியைத் தேடும் நீண்ட பயணம்

இலங்கை மீதான ஐ.நா. விசாரணையானது வலுமிக்கதாக இருக்காது. ஐ.நா. தனது விசாரணையின் இறுதியில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றிடம் தீர்வெட்டுமாறு கோரும் போது, இந்த விசாரணையை ரஷ்யா மற்றும் சீனா மறுக்கும் என்பது நிச்சயமானதாகும்.

2009 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு போர் மீறல்கள் தொடர்பாக சுயாதீன அனைத்துலக விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என இலங்கையைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த நிலையில் கடந்த மாதம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரின்போது அதன் உறுப்பு நாடுகள் இலங்கைக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தனர்.

இந்த விசாரணையானது ஐ.நாவால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், தாங்கள் இந்தப் பிரச்சினையிலிருந்து விலகிக் கொள்ள முடியும் என பல நாடுகளின் அரசாங்கங்கள் கருதுகின்றன.

ஐ.நா. விசாரணை இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது இன்னமும் முடியவில்லை. ஐ.நா. விசாரணை என்பது நீதியை எட்டுவதற்கான நீண்டதொரு நகர்வாக இருக்கும். தற்போது இலங்கை மீதான விசாரணை தொடர்பில் இந்த உலகம் தன்து கவனத்தைச் செலுத்துவதை நிறுத்தினால் அது மிகவும் ஆபத்தான, அழிவுமிக்கதாக இருக்கும்.

செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள சபையின் அடுத்த கூட்டத் தொடரின் போது, இலங்கையும் அதன் கூட்டணி நாடுகளும் இலங்கை மீதான அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் தீர்மானத்தை எதிர்த்து வேறொரு நடவடிக்கை எடுக்கலாம். இலங்கையை ஆதரித்து 12 நாடுகளும் இத்தீர்மானத்திற்கான வாக்களிப்பைப் புறக்கணித்து 12 நாடுகளும் உள்ளன. இவை இரண்டையும் இணைத்துப் பார்த்தால் இலங்கையை எதிர்த்து வாக்களித்த 23 நாடுகளை விட இத்தொகை அதிகமானதாகும்.

இலங்கையில் போர் முடிவடைந்த ஆரம்ப மாதங்களில் ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை தனது நாட்டில் நிலைத்திருந்த பயங்கரவாதத்தை அழித்து வெற்றியை நிலைநாட்டியதாக புகழாரம் சூட்டியது.

போரில் ஈடுபட்ட இலங்கைப் படைகள் போர்ச் சட்டங்களை மீறியுள்ளன என்பதையும் பல பத்தாயிரக் கணக்கான தமிழ் மக்களைப் படுகொலை செய்தன என்பதையும் தற்போது அனைத்துலக நாடுகளும் பரவலாக ஏற்றுக்கொண்டுள்ளன.

போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளில் ஊடகவியலாளர்கள், சட்டவியலாளர்கள், ஐ.நா. அதிகாரிகள், அமைச்சர்கள் மற் றும் சில பிரதமர்கள் போன்றோர் இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட குறுகிய கடற்கரையோரத்தில் உண்மையில் என்ன நடந்தது என்கின்ற பயங்கரமான சம்பவங்களை நன்றாகப் புரிந்துள்ளனர். ஆனால் இலங்கையில் போர் இன்னமும் முடியவில்லை என்பதை இவர்கள் இன்னமும் முற்றாகப் புரிந்து கொள்ளவில்லை.

இலங்கையில் மிகப் பரந்தளவில் வெளிப்படையாக இடம்பெறும் அடக்குமுறைகள், இனப்படுகொலைகள் மற்றும் சித்திரவதைகளின் ஒரு பகுதியாக அண்மைய மாதங்களில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளால் மிகக் கொடூரமாகத் தமிழர்கள் நடத்தப்பட்டுள்ளனர். போரின் இறுதியில் பல பத்தாயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது இந்த உலகம் இதற்கெதிராக எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. இதனால் மீறல்களைப் புரிந்த குற்றவாளிகள் மேலும் மேலும் குற்றங்களைப் புரிய முடியும் என்கின்ற நிலை தோன்றியுள்ளது.

இலங்கையில் தொடரும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்யப்பட மாட்டாது. போரின் இறுதி ஆண்டுகளை முதன்மைப்படுத்தியே இந்த விசாரணை மேற்கொள்ளப்படும்.

இந்தச் சிக்கலான மிகப் பெரிய விவகாரத்தை ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று 1.4 மில்லியன் டொலர்கள் செலவில் வெறும் பத்து மாதங்கள் மட்டுமே விசாரணை செய்யும்.

பக்கச்சார்பு மற்றும் திரும்பத் திரும்ப ஒன்றையே செய்தல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இலங்கை மீதான விசாரணையில் புதிய குழுவொன்றை அமைக்க ஐ.நா. விரும்புவதாக கூறப்படுகிறது. ஏற்கெனவே மிக முக்கிய சாட்சியங்கள் அடையாளங் காணப்பட்ட நிலையில் இப்புதிய குழு எவ்வாறு இதனை மேலும் ஆராய்ந்து கொள்ள முடியும்?

2011 மார்ச் மாதத்தில், இலங்கை மீதான மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வரையறையான சட்ட ஆராய்ச்சிகள் தேவை என ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் வல்லுநர் குழு ஆலோசனை வழங்கியிருந்தது. ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டதற்கு அப்பால் இப்புதிய விசாரணையானது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது தெளிவற்றதாகும்.

போர்க் குற்றவாளிகள் தற்போதும் இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டம், இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கை இராஜதந்திர உயர் பிரதிநிதிகளாக பணியாற்றுகின்றனர். இவர்கள் கட்டளைகளை வழங்கியவர்கள் என்ற வகையிலும் நாட்டின் உயர் மட்டத்திலுள்ளவர்கள் என்ற வகையில் இவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் தேவைப்பாடானது என பலரும் வாதிடுகின்றனர். இதற்கு அரசியல் பலம் மட்டுமன்றி, 2009ல் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் மற்றும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் நல்லதொரு தொடர்பாடல் போன்றனவும் முக்கியமானதாகும்.

சாட்சியங்களைப் பாதுகாப்பதென்பது மிக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். சாட்சியங்களைப் பதிவு செய்பவர்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் கூட இவர்களது அடையாளங்கள் இரகசியமாகப் பாது காக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் சாட்சியங்களை விசாரணைக் குழு பாதுகாக்கும் என்பது சாத்தியமற்றதாகும். ஏற்கெனவே இவ்வாறு சாட்சியம் வழங்கிய குடும்ப உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

முடிவுறாத போர்: 2009-2014 வரை இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்புணர்வுகள்' என்கின்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 40 சம்பவங்களில் ஒன்பது வரையானவர்களின் உறவுகள் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இவர்கள் புலம்பெயர்ந்து சென்றபின்னர் இலங்கையில் கடத்தப்பட்டவர்களாக, காணாமற் போனவர்களாக அல்லது படுகொலை செய்யப்பட்டவர்களாக உள்ளனர். புலம்பெயர் தமிழ் சமூகத்தைக் கூட இலங்கையின் புலனாய்வாளர்கள் மிகவும் நெருக்கமாகக் கண்காணித்து வருகின்றனர்.

> **2011 மார்ச் மாதத்தில், இலங்கை மீதான மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வரையறையான சட்ட ஆராய்ச்சிகள் தேவை என ஐ.நா. செயலாளர் நாய கத்திடம் வல்லுநர் குழு ஆலோசனை வழங்கியிருந்தது.**

இலங்கையில் போருக்குப் பின்னான சமாதானம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. கோபி என்பவரைத் தேடும் நடவடிக்கையில் இலங்கை அதிகாரிகள் பத்துப் பெண்கள் உட்பட 60 பேர் வரை கைதுசெய்தனர். பின்னர் கோபி என்பவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தோன்றுவதைத் தடுப்பதற்காக புலம்பெயர் தமிழ்க் குழுக்கள் மற்றும் தனிப்பட்ட தமிழர்களைத் தான் தடைசெய்துள்ளதாக இலங்கை அரசு திடீரென அறிவித்தது. புலம்பெயர் தமிழ் சமூகம் முற்றாக பயங்கரவாத நடவடிக்கையில் செயற்படுகின்றது என்பதையே இலங்கை அரசு இத்தகைய நடவடிக்கை சுட்டிநிற்கிறது. இலங்கை அரசால் தடைசெய்யப்பட்ட தமிழர்களில் இறந்தவர்களின் பெயர்கள் கூட உள்ளடங்கியுள்ளன. தமிழ் மக்கள் சார்பாக பேச்சுக்களில் கலந்து கொள்ளும் உலகத் தமிழர் சபையையும் இலங்கை தடைசெய்துள்ளது.

புல்ம்பெயர் சமூகத்தின் போர்ச் சாட்சியங்கள் மற்றும் தகவல்களைப் பெறுவதைத் தடுப்பதற்கான இலங்கை அரசின் தெளிவான முயற்சி இதுவாகும். ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிக்கின்ற எவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை அரசு ஏற்கெனவே எச்சரித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில், ஐ.நா. தனது விசாரணையை மேற்கொள்வதென்பது கடினமான செயலாகும். இலங்கையில் வாழும் சிங்கள மக்களிடம் இந்த விசாரணையின் தீர்வு நம்பகமானதும் பாரபட்சமற்றதும் என நம்பவைப்பது கடினமானதாகும். கடந்த காலச் சம்பவங்கள் மட்டும் விசாரணை செய்யப்படக் கூடாது. இதன் மூலம் தற்போது தொடரப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட மாட்டாது.

இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்பது வெறுமனே ஐ.நா. விசாரணையின் மூலம் மட்டும் கிடைக்க மாட்டாது. பல்வேறு நாடுகளிலும் மீறல்களைப் புரிந்தவர்களுக்கு எவ்வாறான தண்டனை வழங்கப்பட்டனவோ அதே போன்று இலங்கையிலும் மீறல்கள் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதற்கு அரசியல் உறுதியும் பல ஆண்டு கால தெளிவான ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் போன்றவை தேவைப்படுகின்றன.

*நன்றி: புதினப்பலகை*



# சூழலைப் பேணி நலம்பெறுவோம்

செல்வி ஹேமா
தங்கவேலு


பூமி வழங்கும் இயற்கைச் சூழலின் வளங்களைக் கூடுதலாகப் பயன்படுத்தும் நாம் அத்துடன் நின்றுவிடாது கழிவுகளின் இருப்பிடமாகவும் பூமியை மாற்றி வருகிறோம். சுத்தமான குடிதண்ணீர், வளமான மண், உயிர்ச் சூழல், தூய்மையான காற்று என்பவற்றை எமது அடுத்த சந்ததி பயன்படுத்த முடியாத அளவுக்கு எமது செயற்பாடுகள் அமைந்துள்ளன. மனிதனது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் அதிகரிப்பு ஆகியனவே சூழல் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன. இதன் தாக்கங்களை இன்று நாம் உணரக் கூடியதாக, காணக் கூடியதாக உள்ளது.

பல நன்னீர்ப் பிரதேசங்கள் உவர் நீர்த் தன்மை கொண்டவையாக மாறியமையால் அந்தப் பிரதேசங்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையை அடைந்துள்ளன. இது விவசாயிகளை மட்டுமன்றி முழுச் சமூகத்துக்கே பாதிப்பை ஏற்படுத்துவதாக உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்துவதாக, அமையப் போகின்றது. மேலும் நீரூற்றுக்கள், கிணறுகள், குளங்கள் வற்றிப் போக ஆரம்பித்துள்ளன. பல ஆறுகளில் அழுக்குகளும் கழிவுகளும் கலக்கவிடப்படுவதால் அவையும் மனித பாவனைக்கு உதவாதனவாக மாறி வருகின்றன. எதிர்காலத்தில் தூய நீரை மனித சமூகம் மட்டுமல்ல ஏனைய உயிர் வாழ்வனவும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படலாம்.

அதிகரித்து வரும் மக்கள் தொகையின் உணவுத் தேவைக்கான உற்பத்திகளை மேற்கொள்வதற்கான நிலத் தேவைக்காக ஏராளமான பசுமைக் காடுகள் அழிக்கப்



படுகின்றன. அது மட்டுமன்றி அதிகரித்த விளைச்சலைப் பெற வேண்டி அசேதனப் பசளைகளை அபரிமிதமாகப் பயன்படுத்துகிறோம்.



மேலும் பயிர் முகாமைத்துவத்தில் கூடுதலான கிருமி நாசினிகளை உபயோகப்படுத்துகிறோம். போதாதற்கு மலக் கழிவுகள் சேர்ந்த நீர், தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவு நீர், சுகாதாரத் தேவைகளுக்கு பயன்படுத்தும் நீர் ஆகியனவும் உறிஞ்சப்பட்டு நிலத்துடன் சேர்வதால் மண் வளமும் பாதிப்படைகிறது.

நகராக்கல், தொழிற்சாலைகள் அதிகரிப்பு ஆகியனவும் சூழல் நெருக்கடிகளுக்குக் காரணமாகின்றன. வடிகாலமைப்புப் பிரச்சினை, சுகாதார விதிமுறைகள் பேணப்படாத மனிதக் குடியிருப்புகள், கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், தொற்று மற்றும் தொற்றாத நோய்கள் பலவும் ஏற்படுவதற்குக் காரணமாகின்றன. நோய்க் காவிகள் உருவாக்கப்படுவதால் சுகாதாரம் பேண் நடவடிக்கைகள் உரிய முறைப் படி மேற்கொள்ளப் படாவிடின் மனிதஆரோக்கியம் பாதிக்கப் படுவதுடன் மனிதனின் சராசரி ஆயுள் காலத்தின் அளவையும் குறைத்துவிடலாம். அதிகரித்த நுளம்புப் பெருக்கம், மலேரியா, டெங்கு, யானைக் கால் நோய் ஆகியவற்றினதும் வயிற்றோட் டம், சிரங்கு,


> நகராக்கல், தொழிற்சாலைகள் அதிகரிப்பு ஆகியனவும் சூழல் நெருக்கிடிகளுக்குக் காரணமாகின்றன. வடிகாலமைப்புப் பிரச் சினை, சுகாதார விதிமுறைகள் பேணப்படாத மனிதக் குடியிருப்புகள், கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், தொற்று மற்றும் தொற்றாத நோய்கள் பலவும் ஏற்படுவதற்குக் காரணமாகின்றன.

வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், கசம் மற்றும் சுவாச நோய்களுக்கும் வழிவகுத்துவிடலாம் என்பதால் வதிவிட சுற்றுப்புறச் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு எமது உயிர்ச் சூழலுக்கு அவசியமாகின்றது.

அண்மைக் காலங்களாக சமூகத்தை அச்சுறுத்தி வரும் பொலித்தீன் பாவனை, பிளாஸ்ரிக் பொருள்களின் உபயோகம் ஆகியனவும் சூழல் மாசடைவதற்கு காரணிகளாக உள்ளன. மண்ணில் புதைக்கப் படினும், சேதமடையாத இவற்றினால் மண்ணின் தன்மை இழக்கப்படுவதுடன் இவற்றை எரியூட்டினாலும் வளி மாசடைகிறது. இவற்றிலிருந்து மீளுருவாக்கல் மூலம் சூழல் மாசடையாமல் வேறு உற்பத்திகளை மேற்கொள்வது சூழல் பாதுகாப்புக்கு உகந்தனவாகும். மேலும் தொழிற்சாலைகள், வாகனங்கள் மூலம் வெளியேறும் புகையும் வளியை மாசடையச் செய்கிறது. மனிதனுக்குத் தேவையான தூய காற்றும் இப்படியாக மாசடைகிறது.

இலங்கை மத்திய சூழல் பாதுகாப்பு அதிகார சபை இலங்கையின் இயற்கைச் சூழல் பாதிப்புறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. காட்டு வளம் அழிதல், மண்ணரிப்பும் மண் சரிவும், முருகைக்கல் அகழ்தல், மணல் அகழ்தல், நீர் நிலைகள் மாசடைதல், தரைக் கீழ் வளம் பாதித்தல் போன்றவற்றில் கட்டுப்பாடு களை மேற்கொண்டுள்ளது. சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சூழல் பாதுகாப்புக்கென ஓர் அமைச்சும் உருவாக்கப்பட் டுள்ளது. இவ்வாறு இலங்கைச் சூழல் பாதுகாப்புக்கென அமைப்புகளும் சட்டங்களும் இருப்பினும் நமது சூழலை மாசடையவிடாது பேணுவது எம் ஒவ்வொருவரிலுமே தங்கியிருக்கிறது.

*"சூழலைப் பேணி சுகமாக வாழ்வோம்"*



## தவக்காலச் சிந்தனை



### உயிர்ப்பின் சமாதானத்தை பகிர்ந்திடுவோம்

சதித் திட்டங்களும் பொய்க் குற்றங்களும் கூக்குரல் கோஷங்களும் ஜெயிக்க எமக்கு இடறலாக இருந்த இயேசுவின் கதையை முடித்து கல்லறைக்குள் அடக்கிவிட்டோமென கொலைகார யூதக் கும்பல் கொக்கரித்துக் கொண்டிருந்தது. இறை வல்லமையைப் புரிந்துகொள்ள மறுத்தோருக்கு எப்படித் தெரியும் சாவுக்கும் அதிபதி இறைவனென்று? மண்ணுக்குள் புதைத்ததெல்லாம் மண்ணாவதில்லை. மண்ணையே படைத்தவரை மண்ணுக்குள் அடக்கலாமோ? உயிர்களையே உருவாக்கும் உயிர் மூச்சு அழிந்திடுமோ? கல்லறை காணச் சென்றோர் கண்டனர் வெற்றிடம். உரைத்தனர் இறை தூதுவர், "உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவதேன்? சாவை வென்ற சத்தியனாய் எழுப்பப்பட்டார்.

"இந்த ஆலயத்தை இடியுங்கள் மூன்று காலையில் கட்டுவேன்" "கோதுமைமணி மண்ணில் படிந்தாலொழிய பயன் தர முடியாது" என்று இயேசு கூறிய கட்டியம் இன்று அவராலேயே மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அவரது பாஸ்கா பலியின் விலையில்லாக் குருதியினால் அனைவருக்கும் பாவ விடுதலை தந்துள்ளார். தோல்வியின்றி வெற்றியில்லை, இழப்புக்களின்றி உயிர்ப்பில்லை என உணர்த்தி எமக்கு நம்பிக்கை, விசுவாசம், உடனிருப்பு என்பவற்றால் வலுவூட்டியுள்ளார். உயிர்ப்பின் மூலம் கிறிஸ்தவம் உயிருள்ளது. அவரை நம்பியோர் என்றும் உயிர் பெறுவர் என உணர்த்தியுள்ளார்.

ஒன்றை இழந்துதான் வேறொன்றைப் பெற முடியும். கிறிஸ்து உயிர் பெற்ற கல்லறைக்குள் எமது பாவங்களைப் புதைத்துவிட்டு எமது இதயங்களை வெறுமையாக்கி உயிர்த்த இயேசுவுக்கு கொலு அமைப்போம். எமது சொல், செயல், சிந்தனைகள் உயிரூட்டம் மிக்கதாக உயிர்ப்புள்ள மனித சமூகத்தை உருவாக்கும் பணியில் பயணிப்போம். உயிர்ப்பின் சமாதானத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வோம்.

***எஸ்.தாஸ், யாழ்ப்பாணம்***

## அதிகாரிகளின் கண்ணில் படாத எங்கள் தபால் பெட்டிகள்

வாசகர் திருமுகம்

தமக்கு ஏற்பட்ட தலைவிதியை எண்ணி நொந்து கொள்வதுபோல, வீதியோரங்களில் சோபை இழந்து, புழுதி படிந்து புல் பூண்டு வளர்ந்த காட்டுக்குள் நிற்பதுவாய் கண்ணீரும் கம்பலையுமாக, செத்தேன் சிவனேயென்று முதுமையடைந்துள்ளன எங்கள் தபால் பெட்டிகள். தண்ணி வென்னி 'சேவிஸ்' பண் ணினால்தானே உயிரோடு இருக்கும் என்று சம்பந்தப்பட்டவர்கள் யோசிப்பதாகத் தெரியவில்லை. கதிரையை விட்டு எழுந்து எல்லாத் தபால் பெட்டிகளையும் பார்த்தால்தானே உயிர் இருக்கா என்று புரியும். தபால் எடுக்கும் நேரம் சரியாகப் பேணப்படுகிறதா என்று பரீட்சிப்பதாக இதுவரை தெரியவில்லை. தபால் எடுக்கும் நேரம் 3 மணி என்றால் சரியாக 3 மணிக்கு தபால் எடுக்க வேண்டும். 3 மணிக்கே பொதிகளை பஸ்ஸில் கொடுப்பதானால் தபால் எடுக்கும் நேரத்தை 2.30 என்று போடலாம். நேரத்தை தண்டிக்கக்கூடாது.

மற்றும் சம்பந்தப்பட்ட தபாலக எல்லைக்குள் காலை 6 மணிக்குப் போடப் படும் தபால் அன்றே வழங்கப்பட வேண்டும். தபாலதிபர் தனது கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருக்கும் தபால் பெட்டிகளைச் சரி செய்வது அவரது தார்மீகப் பொறுப்பாகும். தபால் பெட்டிகளை சனப் பரம்பல் இருக்கின்ற இடத்தில் வைக்க வேண்டும். கடமைக்கும் சாட்டுக்கும் தபால் பெட்டிகளை வைக்கக்கூடாது. தயவு செய்து சம்பந்தப்பட்ட அனைவரும் இதில் கவனமெடுப்பார்களா?

***கோ. மாசிலாமணி***
***கோப்பாய்வடக்கு***



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: புதிய முயற்சிகள் தாமதமாகி முடியும். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களைப் புரிந்து கொள்ளமாட்டார்.



**இடபம்**: சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துகொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்பை ஏற்பீர்கள்.



**மிதுனம்**: சந்தர்ப்ப. சூழ்நிலையறிந்து செயற்படும் சாமர்த்தியத்தை கற்றுக்கொள்வீர்கள். உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும்.



**கடகம்**: குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்ினருடன் சென்று நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள்.



**சிங்கம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.



**கன்னி**: சொத்துப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.



**துலாம்**: கடந்த இரண்டு தினங்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி அமைதி கிட்டும். விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள்-. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.



**விருச்சிகம்**: சில வேலைகளை உங்கள் மேற் பார்வையில் முடிப்பது நல்லது. யாரையும் நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டாம்.



**தனுசு**: எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். பண விடயங்களில் சாக்குப் போக்கு சொல்லிச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரக்கூடும்.



**மகரம்**: திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.



**கும்பம்**: உணர்ச்சி பூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவுபூர்வமாகச் செயற்படுவீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விடயங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.



**மீனம்**: எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளைச் சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

## நாளை

**சித்திரை-07 ஞாயிற்றுக்கிழமை | 20.04.2014**

திதி:பஞ்சமி.கா.07.35 வரை
நட்சத்திரம்: மூலம்
மு.இ.08.08 வரை

சுபநேரம்: 09.02-10.32 வரை
இராகுகாலம்:.04.32-06.02 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




## பிராணாயாமம்

முதன் முதலில் பிராணாயாமத்தின் பொருள் பற்றிச் சிறிது அறிய முயல்வோம். பிரபஞ்சத்திலுள்ள எல்லாச் சக்திகளுடைய தொகுப்பே பிராணன் என்பதைத் தத்துவ நூல் குறிப்பிடுகிறது. தத்துவ ஞானிகளின் கொள்கைப்படி இந்தப் பிரபஞ்சம் அலைகள் வடிவில் வெளியாகிக் கொண்டிருக்கிறது. அது எழுகின்றது; வீழ்கின்றது; உருகிப் போகின்றது. மீண்டும் மீண்டும் இந்த விதமான வேறுபாடுகளுடன் எல்லாம் அது தோன்றி வெளிப்படுகிறது. வெளியானது போலவே திரும்பவும் அது மெதுவாகவும் படிப்படியாகவும் சுருங்கித் தனது முன்னைய நிலையை அடைகிறது. இவ்வாறு அது ஒரு நாடியின் துடிப்புப் போல இயங்கிக் கொண்டே இருக்கிறது. இந்த உலகம் முழுவதும் சடப் பொருளாலும் சக்தியாலும் ஆக்கப் பட்டிருக்கிறது. ஆகாசம் என்று சொல்லப்படும் ஒரு பொருளே படைப்பின் முதலில் தோன்றிய சடப்பொருளாகும். இந்த முதற் பொருளிலிருந்தே கடினப் பொருளாகவும் நீர்ப் பொருளாகவும் இருக்கிற சடப் பொருள்கள் எல்லாம் தோன்றின என்று வட மொழித் தத்துவ ஞானிகள் கூறுகின்றார்கள். மேலும், நாம் இயற்கையில் காணும் சக்திகள் எல்லாம் உற்பத்திக் காலத்தில் தோன்றிய ஆதி சக்தியின் தோற்றங்கள் ஆகும் என்றும், இந்த ஆதி சக்தியின் பெயர் பிராணன் என்றும் அதே வடமொழித் தத்துவஞானிகள் கூறுகின்றார்கள்.

இந்தப் பிராணன் மேலே குறிப்பிட்ட ஆகாசம் என்பதுடன் கலந்து இந்தப் பிரபஞ்சத்தை உண்டாக்குகிறது. 'யுகம்' என்று கூறப்படும் நெடுங் காலத்துக்குப் பிறகு ஓய்வுக் காலம் என்பது ஒன்று உண்டு. ஒரு சுறு சுறுப்புக் காலமும் அதன் பிறகு ஓர் ஓய்வுக் காலமும் அமையும். இதுவே எல்லாவற்றுக்கும் பொதுவான இயற்கையாகும். இந்த ஓய்வுக் காலம் தொடங்கும்போது, பிரபஞ்சத்தில் நாம் பார்க்கிற உருவங்கள் எல்லாம் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எல்லாம் உருகி உருகி மீண்டும் ஆகாசம் ஆகின்றன. இத்தகைய ஆகாசம் சிதறுண்டு சிதறுண்டு பரவி விடுகின்றது. உடலிலிருக்கிற சக்திகளாகவும், நெஞ்சிலுள்ள சக்திகளாகவும், பூமியின் ஈர்க்கும் சக்தியாகவும், இயக்கமாகவும், எண்ணமாகவும் உள்ள இந்தச் சக்திகள் எல்லாம் சிதறிப் போய், படைப்புக் காலத்தில் தோன்றிய முதல் பிராணனில் கலந்து விடுகின்றன.

# சனிக் கிரகத்தில் மற்றொரு புதிய துணைக் கிரகம் கண்டுபிடிப்பு



சனிக் கிரகத்தில் இருந்து புதிய துணைக்கிரகம் உருவானமை குறித்து நாசா ஆய்வு மேற்கொண்டுள்ளது. சூரிய குடும்பத்தில் சனி பெரிய கிரகமாகும். இதற்கு 61 துணைக் கிரகங்கள் உள்ளன. இந்த நிலையில் தற்போது புதிதாக ஒரு துணைக் கிரகம் உருவாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நாசா மையம் அனுப்பிய காசினி விண்கலம் எடுத்து அனுப்பிய ஒளிப் படத்தின் மூலம் இது தெரிய வந்துள்ளது. அதில் மிகச்சிறிய ஒரு துணைக் கிரகம் சனிக் கிரகத்தின் சிறப்பு அம்சமான பிரகாசமான வளையத்துடன் உள்ளது. அது 'ஐஸ்கட்டி' போன்று பளபளவென இருக்கிறது.

அந்தத் துணைக் கிரகம் 1200 கி.மீற்றர் நீளத்துடனும், 10 கி.மீற்றர் அகலத்துடனும் காணப்படுகிறது. அதுபோன்ற ஒரு துணைக் கிரகத்தை சனிக்கிரகத்தில் இதற்கு முன்பு பார்த்ததில்லை என்று லண்டனில் உள்ள குயின் மேரி பல்க லைக்கழக பேரா சிரியர் களிமுர்ரே தெரிவித் துள்ளார். இந்தத் துணைக் கிரகத்துக்கு 'பொக்கி' என பெயரிட்டுள்ளனர். புதிய துணைக் கிரகம் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் பூமி உள்ளிட்ட அனைத்துக் கிரகங்களும் உருவாகி சூரியனிடம் இருந்து இடம்பெயர்ந்தது எப்படி என்று அறிய முடியும் என்றும், அது குறித்தும் ஆராய விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | | 7 | 5 | | | | |
| | | 8 | 6 | 2 | | | 4 | |
| | 6 | | | | | | | 5 |
| | | 6 | | 7 | 1 | 5 | | 2 |
| 2 | 7 | | | 3 | | | 9 | 8 |
| 5 | | 3 | 2 | 8 | | 7 | | |
| 4 | | | | | | | 6 | |
| | 2 | | | 6 | 7 | 4 | | |
| | | | | 1 | 5 | | 2 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 6 | 2 | 8 | 3 | 9 | 4 | 7 |
| 8 | 7 | 9 | 1 | 4 | 5 | 2 | 6 | 3 |
| 3 | 4 | 2 | 7 | 9 | 6 | 5 | 8 | 1 |
| 7 | 6 | 1 | 5 | 3 | 4 | 8 | 9 | 2 |
| 4 | 9 | 3 | 6 | 2 | 8 | 7 | 1 | 5 |
| 5 | 2 | 8 | 9 | 7 | 1 | 4 | 3 | 6 |
| 2 | 1 | 4 | 3 | 5 | 9 | 6 | 7 | 8 |
| 6 | 8 | 7 | 4 | 1 | 2 | 3 | 5 | 9 |
| 9 | 3 | 5 | 8 | 6 | 7 | 1 | 2 | 4 |

## சீனச் சிறுவன்

# தனது உயிரை தியாகம் செய்து தாயின் உயிரைக் காப்பாற்றிய

சீனாவில் 7 வயதுச் சிறுவனொருவன் தனது உயிரைத் தியாகம் செய்து தனது தாயினதும், வேறு இருவரினதும் உயிர்களைக் காப்பாற்றிய நெஞ்சை நெகிழச் செய்யும் சம்பவம் நடந்துள்ளது.

சீனாவைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவனொருவன் மூளைப்புற்று நோய் காரணமாகக் கடந்த இரண்டு வருடங்களாக உயிருக்கு போராடி வருகிறான். அவனுடைய தாய் சிறுவனது உயிரைக் காப்பாற்ற இரண்டு வருடங்களாகப் பெரும் முயற்சி செய்து வந்தார். இந்த நிலையில் அந்தத் தாய்க்குத் திடீரென சிறுநீரக நோய் ஏற்பட்டது.

மருத்துவரிடம் சென்று சோதனையிட்ட போது, உடனடியாக மாற்று சிறுநீரகம் பொருத்த வேண்டும். இல்லையேல் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மருத்துவர்கள் எச்சரித்தனர்.

தனது நோய்க்காக வருத்தப்படுவதா அல்லது தனது மகனது மூளைப் புற்றுநோய்க்காக வருத்தப்படுவதா? என்று அவர் மனதுக்குள் துடிதுடித்துக் கொண்டிருந்த போது, சிறுவனின் மூளைப் புற்று நோய் மிகவும் தீவிரமடைந்து விட்டதாகவும், விரைவில் அவன் உயிரிழக்க வாய்ப்புள்ளதாகவும் மருத்துவர்கள் கூறினர்.

இந்த நிலையில் சிறுவன் மருத்துவர்களையும், தனது பாட்டியையும் வரவழைத்து தான் உயிரிழந்த பின்னர் தன்னுடைய சிறுநீரகத்தை எடுத்து தனது தாய்க்குப் பொருத்தி, அவருடைய உயிரைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொண்டான்.



அதுமட்டுமின்றி மேலும் தன்னுடைய உடலில் உள்ள ஏனைய பாகங்களையும் எடுத்துக்கொள்ளுமாறும் உடல் தானத்துக்கு தான் சம்மதிப்பதாகவும் தெரிவித்துள்ளான். இதைக் கேட்டுப் பாட்டி நெஞ்சம் நெகிழ்ந்தார்.

அந்தச் சிறுவன் கடந்த வாரம் உயிரிழந்து விட்டான். மருத்துவர்கள் உடனடியாக அவனுடைய சிறுநீரகங்கள், கல்லீரல் முதலியவற்றை எடுத்தனர். ஒரு சிறுநீரகத்தை சிறுவனின் தாயாருக்கும், மற்றொரு சிறுநீரகத்தை சிறுநீரக நோயில் பாதிப்புற்ற 29 வயதுப் பெண் ஒருவருக்கும், கல்லீரலை 27 வயது நபர் ஒருவருக்கும் பொருத்தினர். தற்போது சிறுவனின் தாயார் உட்பட மூவரும் நலமாக இருக்கின்றனர்.



தனது உயிரைக் கொடுத்து தனது தாயாரின் உயிரைக் காப்பாற்றிய சிறுவனின் தியாகம் குறித்து சீன ஊடகங்கள் பெரும் பரபரப்போடு செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

## சிறுவன் ரூபத்தில் ஆஞ்சநேயக் கடவுள்

இந்தியாவில் குட்டிப்பையன் அமர் சிங்கை, ஆஞ்சநேயக் கடவுளுக்கு இணையாக வைத்து மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிஜமாபூர் என்ற ஊரைச் சேர்ந்த சிறுவன் அமர்சிங் (வயது -6).

இவனது முதுகில் ஒரு சிறிய முடி இணைப்பு உள்ளது. அது 12 அங்குல நீளத்தில் வால் போல் காட்சியளிக்கிறது.

எனவே ஆஞ்சநேயக் கடவுளுக்கு இணையாக வைத்து அமர்சிங்கை, அந்தக் கிராம மக்கள் வழிபட்டு வருகின்றனர்.






## பிரிட்டன் தெருவில் நாய் போன்று சென்ற மனிதர்

பிரிட்டன் தெருவில் நபர் ஒ[illegible]று நடந்து சென்றமை பார்ப்பவர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது. பிரிட்டனில் உள்ள பாரிங்கடன் தெருவில் பெண்மணி ஒருவர் நன்றாக ஆடை [illegible] பார்[illegible]கு நாகரிகமாக உள்ள நபர் ஒருவ[illegible] போன்று கயிற்றில் கட்டி இழுத்துச் சென்றுள்ளார். அந்தப் பெண் நன்றாக ஆடை அணிந்திருந்தார். அதனைப் பார்த்தவர்களுக்கு இந்தச் சம்பவமானது விநோதமாக இருந்துள்ளது. அதை பார்த்த அனைவரும் அந்த மனிதன் ஏதாவது பந்தயத்தில் தோற்றுப்போனதால் இந்தச் சம்பவம் அரங்கேறியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் உள்ளனர்.



இப்படியும் ஒரு தண்டனையா?

## தோசை உண்ணும் போட்டி



இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த நபரொருவர் டுபாயில் நடைபெற்ற விரைவாகத் தோசை உண்ணும் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். இந்தப் போட்டியில் பெண்ணொருவர் உட்பட 25 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் 1.25 மீற்றர் நீளமான தோசையை ஏனையோரை விட விரைவாக உண்டு இந்தியாவைச் சேர்ந்த ஷாஜஹான் என்பவர் வெற்றி பெற்றார். இவர் இந்தியாவின் சமையல்காரர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவராவார். போட்டியில் பங்குபற்றியவர்களில் ஷாஜஹான் உட்பட 5 பேர் மாத்திரமே விரைவாக உண்ணுவதில் போட்டியாக இருந்துள்ளனர். ஏனையோர் தோசையை மெதுவாக உண்டு மகிழ்ந்தனர்.

"25 மீற்றர் நீளமான தோசையை ஏனையோரை விட விரைவாக உண்டு இந்தியாவைச் சேர்ந்த ஷாஜஹான் என்பவர் வெற்றி பெற்றார்.

## வெள்ளைக் கடற்கரை மண்கும்பான் பள்ளிவாசலின் கொடியேற்ற நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப்ரல், 19

யாழ்ப்பாணம். வெள்ளைக் கடற்கரை மண்கும்பான் பள்ளிவாசலின் கொடியேற்ற நிகழ்வு எதிர்வரும் ஹிஜ்ரி 1435 ஆண்டு ரஜப் பிறை 1 மே மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் அஸர் தொழுகையின் பின்னர் கொடியேற்றலுடன் ஆரம்பமாகி மஃரிப் தொழுகையை அடுத்து மௌலூத்உம் த்லை சிறந்த மார்க்க அறிஞர்களினால், பயானும் 11 நாள்களுக்கு நடைபெறவுள்ளதாகவும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வானது. மண்கும்பான் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள சங்கைக்குரிய அஸ்-ஸெய்யித் அஷ்-ஷெய்க் சுல்தான் அப்துல் காதர்(றஹ்) ஞாபகார்த்தமாக வருடந்தோறும் இடம்பெறுகின்றது.

தொடர்ந்து இறுதி நாளான ஹிஜ்ரி ஆண்டு 1435 ரஜப் பிறை 12 மே மாதம் 12 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு குர்ஆன் தமாமும் ஆபிராத் தனையும் நடைபெற்று பகல் நாரிசாவும் வழங்கப்படவுள்ளது.

அனைத்து இஸ்லாம் சமூகத்தவரையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அல்லாஹ்வின் கிருபையை சிறப்பித்து அல்லாஹ்வின் கிருபையையும் இறஹ்மத்தையும் பெற்றுக்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-10)

## மீசாலை பிள்ளையாருக்கு இன்று தேர்

மீசாலை வடக்கு கலட்டி பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா நாளை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறும். (ஓ-9)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் கமநல சேவைகள் நிலைய குழு உறுப்பினராக நீண்டகாலம் இருந்து விவசாய சம்மேளனத்திற்கு அரும்பெருந்தொண்டாற்றிய

**சின்னத்தம்பி ஆனந்தசுந்தரம்**

அவர்கள் 16.04.2014 புதன்கிழமை இறைபதம் எய்திய செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தாரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள் குழு உறுப்பினர்கள், விவசாய சம்மேளனங்கள்.** (46884) (3.6.4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கோவிந்தர் பொன்னுத்துரை**

திதி : பஞ்சமி

தோற்றம் 17.08.1917 — மறைவு 30.04.2013

நேற்றுப்போல் இருக்கிறது
நெஞ்சினிலே உம் நினைவு
நிஜத்தினிலே உமைப்பிரிந்து
ஓராண்டு போனாலும்
நித்தமும் நினைக்கின்றோம்
நேசமுடன் உமை நாமே.

**குடும்பத்தினர்.**

393/34. கோயில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். (46634)(7.6.3)

## மரண அறிவித்தல்



திருமதி **எலிசபெத்தம்மா எசேக்கியேல்**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி எலிசபெத்தம்மா எசேக்கியேல் நேற்று முன்தினம் (17.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - மாசில்லா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தேவசகாயம் மற்றும் மேரிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், எசேக்கியேலின் அன்பு மனைவியும், ஸ்ரீபன் (பிரான்ஸ்), தயானி (லண்டன்), ஸ்ரலின் (லண்டன்), கொலின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியபாமா, ரமேஷ், செபினாகிறேஸ், ஜெறின்மேரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சாள்ஸ், சாம், சலமோன், றொபின், ஜெறோன், ஜெருஷன் ஆகியோரின் பேர்த்தியும், இம்மேனுவல், அருட்சகோதரி பிறிஜ்சிட் (செபமாலை தாசர் சபை - அச்சுவேலி), பூமணி, ஜெசிந்தா (ஜேர்மனி), டெய்சி (பிரான்ஸ்), வைலற் (ஜேர்மனி), வசந்தா, லெற்றிசியா (பிரான்ஸ்), சேவியர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளைமறுதினம் (21.04.2014) திங்கட்கிழமை பி.ப.02.30 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் யாகப்பர் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு. (46959)(12)(3.8)

## ஸ்ரீ சத்தியசாயி ஆராதனை மகோற்சவம்

வடபிராந்திய சத்திய சாயி நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீ சத்தியசாயி ஆராதனை மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவின் அறிமுக நிகழ்வை வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுத் தலைவர் ஸ்ரீ.எஸ்.ஆர்.சரவணபவன் நிகழ்த்துவார்.

சர்வமத ஒற்றுமை என்ற பொருளில் பாலவிகாஷ் மாணவர்களின் இசைவும் அசைவும் ஆற்றுகை நிகழ்வு இடம்பெறும்.

சத்தியசாயி பாபாவின் அவதார மகத்துவம் என்னும் தலைப்பில் சிறப்புரையை திருகோணமலை மாவட்ட ஓய்வு பெற்ற மேலதிக அரச அதிபர் ஸ்ரீ. நா.புவனேந்திரன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அற்புதங்கள், சேவைகள் தொடர்பான வீடியோ தொகுப்பு மற்றும் ஸ்ரீ கோ. சத்தியனின் நெறியாள்கையில் சாயிபக்தி இசைக் குழுவினர் வழங்கும் இசை ஆராதனையும் இடம்பெறும். (ஒ)

## திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை தின நிகழ்வுகள்

இந்து சமய கலாசர்ர அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும்.

இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ச.வேலழகனும் சிறப்பு சொற்பொழிவாளராக யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி ஆசிரியர் செ.பாலச்சந்திரனும் கலந்து கொள்வர். கண்டேன் அவர் திருப்பாதம் என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (வ-7)

◆ ◆ ◆

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி து.ஞானேஸ்வரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேம லோஜினி குமரன் கலந்து கொள்வார். பார்வாழப்பணிசெய்தோன் என்ற பொருளில் சைவப்புலவர் நித்திய தசீதரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (வ-7)

## அழிவடைந்த நிலையில் மஞ்சள் கோட்டுக் கடவை

யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் செல்லும் பாதையில் சங்கானைச் சந்தைக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் போடப்பட்டிருந்த மஞ்சள் கோட்டுக் கடவை அழிந்து மறைந்து விட்டது. இதனால் பஸ் நிலையத்துக்கும் சந்தைக்கும் வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வாகனப் போக்குவரத்து நெரிசல் மிக்க இந்த வீதியில் பொது மக்கள் சில வேளைகளில் விபத்துகளையும், சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு புதிதாக மஞ்சள் கோட்டை இடுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-29)

## சந்தேகநபர் பொலிஸாரால் கைது

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த ஆசிரியையின் உடைமைகளை திருடிய நபரொருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இடம்பெற்ற வீதி விபத்தில் இங்கு குறிப்பிட்ட ஆசிரியை உயிரிழந்தார்.

இந்த ஆசிரியையிடம் அவ்வேளையில் இருந்து கைத்தொலைபேசி, வங்கிக்கடன் அட்டை என்பன திருடப்பட்டிருந்ததுடன், கடன் அட்டையைப் பயன்படுத்தி வங்கியிலிருந்து பணமும் பெறப்பட்டிருந்தது. திருடப்பட்ட பணம் பெறப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து ஆசிரியையின் கணவரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து சந்தேக நபரொருவரைப் புதன்கிழமை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச-402)

## பிரிவுபசார நிகழ்வு நாளை

வவுனியா, பண்டாரிக்குளம், 214 கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றி, வேறு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மாற்றம் பெற்றுச் சென்ற கிராம அலுவலர்களான எம்.எஸ். இராசரத்தினம், எம்.எஸ். செல்வராசா ஆகியோருக்கான பிரிவுபசார நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பண்டாரிக்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் தலைவர் ப.தியாகராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மு.விஜயரட்ணம், வவுனியா பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலகர் திருமதி தேன்மொழி மகேஸ்வரன், பண்டாரிக்குளம் கிராம அலுவலர் எஸ். கோணேஸ்வரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (ச-402)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண பல்கலைக்கழக செயற்பாட்டு தொழில்நுட்ப அலுவலகத்தில் (OTS) செயற்திட்ட கணினி பிரயோக உதவியாளராக (Project CAA) கடமையாற்றும் ஜெயகாந்தன் சாயீஜனின் அன்புச் சகோதரி

செல்வி **வாமனா ஜெயகாந்தன்**

17.04.2014 அன்று சிவபதமடைந்தார்.

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சக ஊழியர்கள் OTS, HETC Project யாழ். பல்கலைக்கழகம்.**

## மரண அறிவித்தல்கள்

**செல்வி வாமனா ஜெயகாந்தன்**

*(யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி O/L - 2013 )*




நல்லூர் மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்வி வாமனா ஜெயகாந் தன் நேற்று முன்தினம் (17.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயகாந்தன் - உதய குமாரி தம்பதியரின் அன்பு மகளும் சாயீஜன் (செயற்றிட்ட கணினி பிரயோக உதவியாளர் OTS, யாழ்.பல்கலைக் கழகம்), காலஞ்சென்ற ஜனனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற காளிதாஸ் மற்றும்யோகம்மா (ரம்பா) தம்பதியரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சந்திரகாந்தன் (சித்தப்பா) மற்றும் விஜயகாந்தன் ( சித்தப்பா - லண்டன்), சந்திரகுமாரி.(அன்ரா - பிரான்ஸ்) ஆகியோரின் பெறா மகளும், குகதாஸ் (பிரான்ஸ்) அவர்களின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2014) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக் காக காலை 8.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **வி.ஜெயகாந்தன்** (தந்தை) செட்டியார்.

இல.07, மூத்த விநாயகர் வீதி, முதலி ஒழுங்கை,நல்லூர், யாழ்ப்பாணம். (2.6.3)(46957)



**செல்லையா பாலச்சந்திரன்**

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாலச்சந்திரன் 16.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், சோதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், சிவராம், ஜெயராம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திலகவதி, விஜயச்சந்திரன், யோகேஸ்வரன், விமலச்சந்திரன், யோகவதி, சோமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜஸ்மிளா, சுசாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பபினாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப.02.00 மணியளவில் மகிந்த மலர்ச்சாலை - கல்கிசையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இல.26 1/3, மூர் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 (சி13378)(12)(3.6)

மகன்- 077 770 1782,

மருமகள் - 072 742 5251

## ‘என் தீவில் ஒரு காதல்’ பாடல் காட்சி வெளியீடு

வவுனியா,ஏப்.19
2013 ஆம் ஆண்டு இலங்கையின் கிராமிய பாடலுக்கான இசையமைப்புக்குரிய தேசிய விருதைப் பெற்றுக் கொண்ட நெடுந்தீவு அகிலனின் "என் தீவில் ஒரு காதல்" என்ற பாடல் காட்சி வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா வசந்தி திரையரங்கில் இடம்பெறவுள்ளது.
இந்தப் பாடல் காட்சியை இராஜ்குமார் ரஞ்சன் நெறிப்படுத்தியுள்ளார். இசையை கந்தப்பு ஜெயந்தன் அமைத்துள்ளார். பாடல் வரிகளை நெடுந்தீவு கவி அகிலன் எழுதியுள்ளார். திவ்யா, வினோத், அனுஜன், சாலினி, மாறன், மோகன் ராஜ், நிரோஜன் ஆகியோர் இதில் நடித்துள்ளனர். நெடுந்தீவுப் பகுதியில் படப்பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு சிறப்பாக காட்சியமைக்கப்பட்டுள்ளது.
நோர்வே தமிழ் விழாவில் விருது பெற்ற தேன் சிந்தும் பூக்கள், மற்றும் அலைபாயும் மனசு ஆகிய பாடல்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
(ச-402)

**விற்பனைக்கு**
யமுனா பாறி கடா,மறி, பால் ஆடுகள், மற்றும் மைனர்கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 918 1018
(46897)(5.6.3)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (Brown Rd.) நல்ல அமைதியான சூழலில் காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை) (46896)(5.6.3)
தொடர்பு: 072 959 6597/075 071 6607

**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)
Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222
(சி/12214)(3.6.4)

**ஜோதிட வகுப்புக்கள்**
யாழ்ப்பாணத்தில் மிக விரைவில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளது. பதிவுகளுக்கு முந்துங்கள். வகுப்புக்கள் நடத்துவதற்கு இடங்கள் தேவை.
தொடர்பு:077 735 6911 (46960)(3.6.4)

**காணி விற்பனைக்கு**
கொக்குவில் கிழக்கு மணியகாரன் (ஒழுங்கை) லேனில் கிணற்றுடன் சுற்றுமதில் கட்டப்பட்ட 3¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
(46794)(12.3.6) தொடர்பு: 077 554 6523

**மணமகள் தேவை**
* 82இல் பிறந்த 7இல் செவ்வாய்,28 பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்றுவந்துள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 81இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 23¼ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 78 இல் பிறந்த, 7இல் சூரியனும் செவ்வாய் 25 பாவமுடைய இஞ்சினியரிங் Phd முடித்து ஜேர்மன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.435/3,கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே.: 077 607 0862 (46899)(5.6)

**விற்பனைக்கு**
HEIDELBERG - KORA
அச்சு இயந்திரம்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 504 7900 (C/13677)(2.6.3)

**பெண் பராமரிப்பாளர் உடன் தேவை**
குறைந்த குடும்ப அங்கத்தவர்களை (03) உடைய கோப்பாய் பிரதேச வீடொன்றில் (அரசவிடுதி) பணிபுரிய 30-60 வயதுகளுக்கு இடைப்பட்ட பெண் பராமரிப்பாளர் தேவை. கொடுப்பனவை பேசித்தீர்மானிக்கலாம். (46959)(3.6.4)
தொடர்பு:071 496 6658, 021 492 3768

**மலிவு விற்பனை**
புறொயிலர் கோழி இறைச்சி மலிவு விற்பனைக்குண்டு.
ஒரு கிலோ ரூபா 500 மட்டும்.
விவரங்களுக்கு:
V.S.T.பாம்சோப்
பருத்தித்துறை வீதி, இலகடி
077 399 6958 (48605)(3.6.4)
மாலி சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரம்

**கடை விற்பனைக்கு/ வாடகைக்கு**
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, பெரியகடைப் பகுதியில் அமைந்துள்ள மொம்சாக் பில்டிங்கில் காணப்படும் 17 1/14, 51ஆம் இலக்கக் கடைகள் விற்பனைக்குண்டு.
பார்வையிடும் நாள்கள்:திங்கள், செவ்வாய்.
(46866)(12.3.6) தொடர்பு:077 711 0085

ஓம் ஸ்ரீமத் வெங்கடாஜலபதி துணை

**விவாஹ சோபன சுபமுகூர்த்த அழைப்பு**

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான ஜயவருஷம் சித்திரை மாதம் 7ஆம் நாள் (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை மூலநஷத்திரமும், அமிர்தசித்த சுபயோகமும் கூடிய முற்பகல் 9.45 மணி முதல் 11.00 மணி வரை வருகின்ற மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

சுன்னாகம்-மயிலணி
கௌண்டின்ய கோத்திரம்
சிவஸ்ரீ.சி.சர்வேஸ்வரக்குருக்கள்
தம்பதிகளின் பௌத்திரனும்
அராலி.சிவஸ்ரீ.நடராஜக்குருக்கள்
தம்பதிகளின் தௌஹித்ரனும்
எமது ஏக புத்திரனுமாகிய
"சிரஞ்சீவி"
பிரம்மஸ்ரீ ஜகஜீவ சர்மாவிற்கு

தென்இந்தியா திருச்சிராப்பள்ளி
கௌசிக கோத்திரம்
பிரம்மஸ்ரீ.சு.வெங்கடாசலை கனபாடிகள்
தம்பதிகளின் பௌத்திரியும்
கேரளா திருவனந்தபுரம்
பிரம்மஸ்ரீ ம.கிருஷ்ணசாமி ஐயர்
தம்பதிகளின் தௌஹித்ரியும்
எமது ஜேஷ்ட புத்திரியுமாகிய
"சௌபாக்கியவதி"
பவித்ராவை

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய விநாயகப் பெருமான், வள்ளிதேவசேனாசமேத முருகப்பெருமாள், ஸ்ரீமத் வெங்கடாஜலபதி திருவருளுடனும், பெரியோர்களின் ஆசியுடனும் நிச்சயிக்கப்பட்டு, மேற்படி முகூர்த்தம் **யாழ்/நல்லூர் நல்லை திருஞானசம்பந்த ஆதீன திருமண மண்டபத்தில்** நிகழ இருப்பதினால் அத்தருணம் தாங்கள் தங்கள் பந்துமித்திர குடும்பசகிதம் வருகைதந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் : 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணி (மணமகன் இல்லத்தில்)
வதுவரகிரகப் பிரவேசம் : 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணி (மணமகன் இல்லத்தில்)
வரவேற்பு உபசாரம் : 21.04.2014 திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணி (மணமகன் இல்லத்தில்)
இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ.ச.சண்முகானந்தக் குருக்கள்
(ஆனந்த ஐயா)
கோகிலவாணி தம்பதிகள்,
மயிலணி-சுன்னாகம்.
021 224 0589

(இருவீட்டார் அழைப்பு)

பிரம்மஸ்ரீ.வெ.சுப்பிரமணிய ஐயர்
கமலினி தம்பதிகள்,
இல.66B, அன்னா வீதி,
தோணிக்கல்-வவுனியா.
077 041 7212
(46886)(7.6.3)

## அநாதரவான முதியவர் ஒருவர் கைதடி இல்லத்தில் இணைப்பு

கொக்குவிலைச் சேர்ந்த ஆறுமுகம் இரத்தின சபாபதி (வயது-72) என்ற வயோதிபர் எவரது பராமரிப்புமின்றி கஷ்டப்பட்ட நிலையில், பருத்தித்துறை சமூக சேவை உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் வியாழக்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.
இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் இந்த முதியவர் குறித்து தகவல் தெரிவிக்கையில்:-
இந்த முதியவர் 30 வருடங்களாக ஒரு வீட்டில் வேலையாளாக இருந்து நோய் காரணமாக அவ்வீட்டாரால் கைவிடப்பட்டு வீதிகளில் அலைந்து திரிந்துள்ளார். பின்னர் வல்லிபுரக் கோயில் முச்சம்புலம் தேவாலயத்தில் தஞ்சமடைந்து நோய்வாய்ப்பட்ட நிலையில் நலன் விரும்பிகளால் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அதே நலன் விரும்பிகளால் பராமரிக்கப்பட்டு வந்த போதும், கஷ்டமான நிலையில் பருத்தித்துறை சமூக சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டதையடுத்து இல்ல அத்தியட்சகரின் அனுமதியுடன் கைதடி அரச முதியோர் இல்லத்தில் தற்போது இணைக்கப்பட்டுள்ளார் - என்றார்.
(ஒ-51)

## போர்த் தேங்காய் அடித்தல் போட்டி

சங்கானை, ஏப்.19
சங்கானை மாவடி இளைஞர் மன்றத்தினரால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் போர்த்தேங்காய் அடித்தல் போட்டி இன்று சனியும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் மாவடி ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.
இந்த இரு நாள்களில் கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை, மெதுவான சைக்கிள் ஓட்டம், விநோத உடைப் போட்டி, பார்வையாளர்களுக்கான கிறிஸ்மரம் ஏறுதல் போட்டி ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
(ஒ-29)

பிறந்தநாள் வாழ்த்து
19.04.2014



குமாரசாமி
கனகரத்தினம்
[சாரதி - இ.போ.சபை - 1999 - 2014]
மூவைந்து வருடங்களாய்
நீண்ட நிறை பணியோடு
நிறைகுடமாய் அகவை
ஐம்பத்தேழில் ஓய்வுபெறும்
சித்தப்பாவை முருகன் அருள்பெற்று
வாழ வாழ்த்துகின்றேன்.
இந்து (மகள்)
அல்லாரை தெற்கு, மீசாலை.

**காணி விற்பனைக்கு**
முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு அண்மையிலுள்ள 4 பரப்பு உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 230 7635, 077 647 3299 (43443)(26.3)

**சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)**

கீழ்க்குறிப்பிடப்படும் நிரந்தரப் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொது முகாமையாளர்: குறி இல.101-08

சம்பள அளவுத்திட்டம் 11200-14100 / 140X10, 150X10

**தகைமை:**

அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருடகால அனுபவம் / க.பொ.த உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்.

**வயது:** விண்ணப்பமுடிவு திகதியன்று 23 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது) சங்கப் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விவரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாள்களில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பமுடிவுதிகதி: 03.05.2014

சி.குமரவேல்
தலைவர்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்

16.04.2014 (சி/13676)(3.6.4)

# மரண அறிவித்தல்

## வள்ளிப்பிள்ளை கந்தையா

கைதடி வடக்கு ஆலடி வளவைப்பிறப்பிடமாகவும், வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிப்பிள்ளை கந்தையா நேற்று (18.04.2014) வெள்ளிக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் இளைப்பாறிய (G.S.) கந்தையா சந்திரசேகரனின் அன்புத் தாயும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புமாமியும் சின்னத்தங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான தெய்வானைப் பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை, முத்துப்பிள்ளை, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சர்வானந்தன் - சிவசக்தி (சிங்கப்பூர்), ரவிச்சந்திரன் - கலாசக்தி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ரகுமயூரன், ராஜ்ராகவன், சிவாந்தினி, கீர்த்தனி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2014) சனிக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் கொத்தித் துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அற்கின்சன் வீதி,
வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
கந்தையா சந்திரசேகரன்
(மகன் - இளைப்பாறிய G.S)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் சின்னையா



திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சின்னையா (18.04.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் சின்னையாவின் அன்புமனைவியும் கலைச்செல்வன் (லண்டன்), லதா (நோர்வே), திருவருட்செல்வன் (லண்டன்) ஆகி யோரின் அருமைத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

# ஆலயத் திருவிழாக் காலங்களில் தங்க நகை அணிவதை தவிர்க்குக

### *ஆலய பரிபாலன சபையின் அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்.குடாநாட்டில் உள்ள அதிகமான ஆலயங்களில் வருடாந்த பெருந்திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதால் பக்தர்கள் தங்க நகைகளை அணிந்து ஆலயங்களுக்குச் செல்வதைத் தவிர்த் துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத் தப்பட்டுள்ளது. புதுவருடப் பிறப்பன்று அதிகமான ஆலயங்களில் தேர்த்திருவிழா இடம் பெற்றது. மறுநாள் சித்திரை பூரணை அன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்றது.

இவற்றில் முக்கிய திருவிழாக்களில் பக்தர்கள் தமது தங்க நகைகளில் கவனம் செலுத்துமாறும் ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினரால் ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

முக்கிய திருவிழாக்களில் திரு டர்கள் தமது கைவரிசையைக் காட்டலாம் என்ற காரணத்தால் இந்த அறிவு றுத்தல்கள் ஒலிபெருக்கி மூலம் அடிக்கடி அறிவுறுத்தப்பட்டது. அதேவேளை அநேகமான மக்கள் திருவிழாக்களில் கலந்து கொள்வதையும் தவிர்த்துக் கொண்டனர்.

குடும்பத்தவர் அனைவரும் திருவிழாக்களில் கலந்து கொள்வதைத் தமக்கு சாதகமாகப் பயன் படுத்தி திருடர்கள் ஆள்கள் இல்லாத வீடுகளுக்குள் சென்று உடைமைகளை களவாடிச் செல்லலாம் என்ற அச்சம் காரணமாக மக்கள் பலர் திருவிழாவுக்குச் செல்லாது சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று தத்தம் வீடுகளுக்குள் முடங்கியதை அவதானிக்க முடிந்தது. (வ-17)

# பூனை, நாய்களால் மூவர் கடியுண்டனர்

பூனைகள் மற்றும் கட்டாக்காலி நாய் ஆகியவற்றால் கடியுண்ட மூன்று சிறார்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளை, அல்லிப்பளையைச் சேர்ந்த சத்தியசீலன் சத்திய நிருஜன் (வயது-7) மட்டுவில் வடக்கைச் சேர்ந்த அகிலநாதன் ஜெயகௌரி (வயது-8) ஆகியோர் பூனைகளாலும், மறவன்புலோவைச் சேர்ந்த வாமதேவன் கபிலன் (வயது-10) என்பவர் கட்டாக்காலி நாயாலும் கடியுண்ட நிலையில் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-9)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

# மாபெரும் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்டப் போட்டிகள்

ஐம்பதாவது அகவையினை இந்த ஆண்டு எட்டியுள்ள **சக்திவேல் விளையாட்டுக் கழகம் (கொடிகுளாய், ஆழியவளை)** இம்மாதம் 25ஆம் (25.04.2014) திகதியன்று வடமாகாணத்துக்கு உட்பட்ட விளையாட் டுக் கழகங்களிடையே மின்னொளியில் உதைபந்தாட் டம், கரப்பந்தாட்டம் என்பன நடைபெற உள்ளன. மேலும் மரதன் ஓட்டப் போட்டிகளும் நடைபெறும். இவ் விளை யாட்டுக்களில் பங்குபெற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தமது விவரங்களை இம்மாதம் 20.04.2014 மு.ப. 10.00 மணிக்கு முன்னர் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு:** மேற்படி விடயம் சம்பந்தமாக 20.04.2014 அன்று மு.ப. 10.00 மணிக்கு மகாத்மா முன்பள்ளி, கொடிகுளாய், ஆழியவளை என்ற விலாசத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குபெறும் கழகங்கள் மட்டுமே பதிவு செய்யலாம். (44506) (10.6)

தொடர்பு:
தலைவர் : 077 2832 868, செயலாளர் :077 071 1333

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை பத்மநாதன் (சர்வா)



கொய்யாத்தோட்டம் புதுவீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப் பிள்ளை பத்மநாதன் கடந்த (15.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னம் தம்பதியரின் ஆசை மகனும் சிவயோகத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற செல்வனின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற சந்தானலெக்சுமியின் (சரோஜினி) அன்புச் சகோதரரும் சத்தியசீலன் (கண்ணன் - ஜேர்மனி), சித்திரா (விஜி - ஜேர்மனி), வத்சலா (உமா - ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (14.04.2014) செவ்வாய்க் கிழமை ஊறணி மயானத்தில் நடைபெற்று முடிந்தது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39/7 புது வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

தகவல்:
மார்க்கண்டு ஆனந்தம்

# டொல்பின் வானை காணவில்லை

251-3229 இலக்க வெள்ளை நிறம் கொண்ட டொல்பின் வான் கடந்த 15.04.2014 அன்று யாழ்ப்பாணம் அத்தியடிப்பிள்ளையார் கோயிலடியில் நண்பகல் 12.00 மணியளவில் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் காணாமற் போயுள்ளது. இது தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 656 9592 (16576) (10)

# மணமகள் தேவை

1972 ஆம் ஆண்டு பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தீயபழக்கங்களற்ற, அரச உத்தியோகம் பார்க்கும் மண மகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு - 076 6688104

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
10 . 04 . 1922

இறப்பு
20 . 03 . 2014



## அமரர் அப்புக்குட்டி முத்துக்குமாரு

மாதம் ஒன்று சென்றதையா மாறவில்லை எம் துயரம்
ஆலமரமாய் இருந்தீர்களே ஐயா விழுதுகள் நாம் வீற்றிருக்க ஐயா!
அந்த காலனுக்கும் பிடிக்கவில்லை
தீராது எம்துயரம் அழுதாலும் தீராதையா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
கண்ணீருடன் உங்கள் நினைவுடன் வாழ்வோம்
எல்லோரும் கதறுகிறோம் ஐயா!
நீங்கள் இருந்த இடம் பார்த்தால்
எங்கு வளர்ந்தாலும் உங்கள் அழகு தெரியுதையா
முகம் தெரியுதையா நினைவோ கனவோ
உங்கள் குரல் கேட்குதையா
தெய்வமே எங்கு செல்வோம் யாரிடம் முறையிடுவோம்

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்மகிழ
1960 . 02 . 20

கண்நெகிழ
2013 . 04 . 30

## அமரர் இரத்தினம் தவபாலன் (தவம்)

ஆண்டு ஒன்று ஆகிவிட்டாலும்
அன்புருவம் நினைவில் பதிந்தேயுள்ளது
மீண்டும் ஒருமுறை திருமுகம் காண
உள்ளம் கிடந்து பரிதவிக்கின்றது
மாண்டு நீர் போனாலும் மனத்திலே
பசுமையாய்க் குடியிருக்கின்றீர் ஐயா!
எம்மை வழி நடத்திய கலங்கரை விளக்கே! என்றும் நாம் மறக்கவே மாட்டோம்
உம்மை நினைந்தே நாமிங்கு வாழ்கின்றோம் உத்தமரே பெற்றிடுக சாந்தி!

[illegible] வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு

குடும்பத்தினர்.

## நகைக்கடையில் கொள்ளை; பொலிஸார் விசாரணையில்

கொழும்பு.ஏப்.19
நீர்கொழும்பு நகரில் அமைந்துள்ள நகைக் கடையொன்றுக்குள் நுழைந்து பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டு தப்பிச்சென்ற சந்தேகநபர்களை கைது செய்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் சுமார் 30 லட்சம் ரூபா பணம் மற்றும் தங்க நகைகளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேரடங்கிய குழுவினர், தலைக்கவசத்துடன், நகைக் கடைக்குள் நுழைந்து, துப்பாக்கி முனையில் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# பிரதேச செயலகங்களை தரப்படுத்த புதிய திட்டம்

## நடைமுறைப்படுத்த ஆராய்கிறது அரசு

கொழும்பு.ஏப்.19
பொதுமக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நாட்டிலுள்ள பிரதேச செயலகங்களைத் தரப்படுத்தும் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

> பிரதேச செயலகங்கள் ஏ.பி.சி.டி என்று தரப்படுத்தப்படவுள்ளன

இந்தச் செயற்றிட்டத்தின்கீழ் பிரதேச செயலகங்கள் ஏ. பி. சி மற்றும் டி என தரப்படுத்தப்படவுள்ளன. தற்பொழுது அதற்கான ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தகுதிவாய்ந்த அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அலுவலக முகாமைத்துவம், அரச அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தும் முறைமை, காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், அரசகரும மொழித் திட்டத்தைச் செயற்படுத்தல், பொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் உட்பட பல விடயங்கள் இதன்போது ஆய்வுக்குட்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக்கிணங்க ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், இறுதியாகச் சமர்ப்பிக்கப்படும் ஆய்வு அறிக்கைகளின் பிரகாரம் பிரதேச செயலகங்கள் உரிய முறையில் தரப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அரச கொள்கை திட்டத்தில் புதிய ஆலோசனைகள்

### மக்கள் கருத்து கேட்டறிய நடவடிக்கை


கொழும்பு.ஏப்.19
கல்வி தொடர்பான அரச கொள்கைத் திட்டத்தில் புதிய ஆலோசனைகளை இணைக்கும் நோக்கில் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள கல்வி தொடர்பான அரச கொள்கைத் திட்டம் 2003 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது என்று தேசிய கல்வி ஆணைக் குழு தெரிவித்துள் ளது.

இந்த கொள்கைகள் தற்போதைய நடைமுறைக்கு பொருத்தமாக அமைந்துள்ளனவா என்பதைக் கண்டறியும் பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கல்வி, உயர் கல்வி, பட்டப் பின் படிப்பு ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று தேசிய கல்வி ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. அதன் பிரகாரம் எந்தவொரு நபருக்கும் தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு நேரில் வருகைதந்து அல்லது கடிதம் மூலம் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும் என்று ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, கல்வி தொடர்பான அரச கொள்கைத் திட்டம் தொடர்பில் எடுக்க வேண்டிய அடுத்த கட்ட தீர்மானங்கள் குறித்து எதிர்காலத்தில் ஜனாதிபதியிடம் கலந்தாலோசிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கல்வி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)



உலகம் முழுவதும் கத்தோலிக்க மக்கள் கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூரும் புனித வெள்ளி நேற்று மன்னார் மறைமாவட்ட பேசாலையில் பங்குத்தந்தை அருட்பணி எஸ்.வி.அவுதப்பர் அடிகளார் மற்றும் மறைபோதகர் அருட்பணி ரஞ்சித் அடிகளார் வழிகாட்டலில் இப்பகுதி கிறிஸ்தவ மக்கள் திருச்சிலுவையைச் சுமந்து சென்று இறைமகன் இயேசுவின் பாடுகளை தியானிக்கின்றனர்.

## சர்வதேசத்துக்கான தூதர் நியமனங்களில் மாற்றம்

கொழும்பு. ஏப்.19
...நாடுகளுக்கான இலங்கை தூ... ...டங்களில் மாற்றங்கள் செய்... ...பட்டுள்ளன என்று உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் பிரகாரம் இந்தியாவுக்கான இலங்கைத் தூதராக பேராசிரியர் சுதர்ஷன் செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் இலங்கை தூதராக இருந்த பிரசாத் காரியவசம் அமெரிக்காவுக்கான தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலர் கருணாதிலக அமுனுகம, ஜேர்மன் நாட்டுக்கான இலங்கைத் தூதராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனங்கள் நாடாளுமன்ற அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ளன என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## மின்னல் தாக்கி இருவர் சாவு

கொழும்பு.ஏப்.19
எஹலியகொட ,உடமாரிய பிரதேசத்தில் மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர். மாடு மேய்க்கச் சென்ற வேளை அவர்கள் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளனர். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற சம்பவத்தில் 57 மற்றும் 67 வயதுடைய இரு நபர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 2, 860 கோடி ரூபா நட்டம்




கொழும்பு.ஏப்.19
கடந்த வருடம் ஸ்ரீலங்கன் விமான சேவை 2860 கோடி ரூபா நட்டம் அடைந்துள்ளது.

இந்த விடயம் மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 2700 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், அது 2013 ஆம் ஆண்டு 2860 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது

2013 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 10950 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதுடன், அதன் செலவுகள் 13810 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலைமை, மற்றைய விமான சேவை நிறுவனங்களுடனான போட்டி ஆகிய காரணங்களே இந்த நட்டத்துக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மீன்பிடித் தொழில் தொடர்பான தகவல் திரட்டு வெளியீடு

கொழும்பு.ஏப்.19
இலங்கையின் மீன்பிடித் தொழில் தொடர்பான தகவல்கள், பயன்படுத்தப்படும் உபகரணங்கள், வலைகள், மற்றும் அழிந்து வரும் மீன் இனங்களைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் குறித்த ஆலோசனைகளை உள்ளடக்கியதான விரிவான தகவல் திரட்டொன்று வெளியிடப்படவுள்ளது.

இதுகுறித்து சோமசிறி தேவேந்திர, ஜயந்த ஜயவர்த்தன, ஸ்டீபன் டி சில்வா ஆகியோர் தகவல்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் உள்நாட்டு மீன்பிடி கைவினை, மீன்பிடி பொறிகள், கருவிகள், உபகரணங்கள் மற்றும் உள்ளூர் .இடங்களுக்குத் தனித்துவமான மீன்பிடி முறைகள் பற்றி தகவல் சேகரிக்கவுள்ளனர்.

இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவை நாட்டின் வருங்கால தலைமுறையின் நன்மைக்காக வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இணை சுகாதார பட்டப் படிப்புக்கான கால எல்லை குறைப்பு

### ஏற்கமாட்டோம் என்கின்றனர் மாணவர்கள்

கொழும்பு.ஏப்.19
இணை சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்புக்கான கால எல்லை மூன்று வருடங்களாக குறைக்கப்பட்டமைக்கு உயர் கல்வி அமைச்சும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் பொறுப்புக்கூற வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர்கள் குற்றம்சுமத்துகின்றனர்.

மாணவர்களின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் உயர் கல்வி அமைச்சின் செயலர் சுனில் ஜயந்த நவரத்னவிடம் தெரிவித்ததாவது:-

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமையவே பாடநெறிக்கான கால எல்லை குறைக்கப்பட்டது.

இணை சுகாதார விஞ்ஞானப் பட்டப்படிப்பை மூன்று வருடங்களில் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் மாணவர்களுக்கு கிட்டியுள்ளது. அதிக புள்ளிகளை பெறும் மாணவர்களுக்கு ஒருவருட பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பரிந்துரைகளையும் கவனத்தில் கொண்டே பட்டப்படிப்புக்கான கால எல்லை குறைக்கப்பட்டது- என்றார்.

இதேவேளை, இணை சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பு தொடர்பில் எத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எழுந்த பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவிடம் தமது சங்கம் பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நவீன் டி சொய்சா குறிப்பிட்டார்.

இணை சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்புக்கான கால எல்லையை குறைக்க வேண்டாம் என்று வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் மாணவர்கள் தற்போது உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தீவகத்தில் நீண்ட காலமாகச் செயற்படும் கட்சியால் அந்தப் பகுதி மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியில்

## வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் விந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.19
தீவகத்தில் நீண்ட காலமாகச் செயற்பட்டுவரும் கட்சியொன்றால் தீவக மக்களின் பாதுகாப்பு இன்றுகேள்விக்குறியாகியுள்ளது. குறித்த கட்சி, தனது கட்சியின் பெயரில் ஜனநாயகத்தை வைத்துக் கொண்டு அதனைக் குழி தோண்டிப் புதைக்கும் வகையிலேயே தீவகப் பகுதிகளில்செயற்பட்டு வருகின்றது. அவ்வாறான நடவடிக்கைகளை இனியும் அனுமதிக்க முடியாது என்று, வடக்கு மாகாண சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.
புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் 54 ஆவது ஆண்டு விழாவும் 32 ஆவது விளையாட்டு விழாவும் அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் 11 ஆவது விளையாட்டு விழாவும் அண்மையில் புங்குடுதீவில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மாகாணசபை உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த மாகாணசபைத் தேர்தல் காலத்திலே தீவுப்பகுதிகளில் குறிப்பாக நெடுந்தீவு தொடங்கி மண்டைதீவுவரை தீவுப் பகுதியில் செயற்படும் ஓர் ஆயுதக்குழு எம்மையும் மக்களையும் பல்வேறு விதங்களில் அச்சுறுத்தி வந்தது.
எம் ஆதரவாளர்களை அடித்து முறித்து பல்வேறு துன்பங்களை எமக்கும் இந்த மக்களுக்கும் கொடுத்தது. அந்த சவால்களைஎதிர்கொண்ட தீவக மக்கள் பேரெழுச்சி கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எமக்குக் கிட்டத்தட்ட 9 ஆயிரம் வாக்குகளை அளித்திருந்தார் கள்.
தீவகத்தைப் பொறுத்தவரையிலே கல்வி, விளையாட்டுத் துறை என்பன பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றன. எதிர்காலத்தில் இந்தப் பகுதியில் கல்வியும் விளையாட்டுத்துறையும் மேலோங்க வேண்டும். அத்தோடு காடு பற்றியது போல் காட்சியளிக்கும் எமது தீவகப் பிரதேசமும் அபிவிருத்தியடைய வேண்டும். அபிவிருத்திக்கு அப்பால் தீவக மக்களின் பாதுகாப்பு விடயத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது. ஏனென்றால் இந்தப் பகுதியில் பல வருடங்களாக நிலை கொண்டுள்ள கட்சி ஒன்று, கட்சியின் பெயரிலேயே ஜனநாயகத்தைத் தரித்துக் கொண்டும், சகோதரப் படுகொலைகளுக்கு எதிராக உரத்துக் குரல் கொடுப்பவர்கள் போல் பாசாங்கு செய்து கொண்டும், 2009ஆம்ஆண்டு போர் முடிவுக்கு வந்தபின்னர் வடக்கு மாகாணத்திலேயே அதுவும் முதல் முறையாக புங்குடுதீவு மண்ணிலே துப்பாக்கிகளைக் கொண்டு, கூட இருந்தவரையே படுகொலை செய்து இங்கு மீண்டும் ஆயுதக் கலாசாரம் ஒன்றை ஆரம்பித்து அரங்கேற்றியிருக்கின்றார்கள்.
அவர்களின் கைகளிலே சட்ட விரோதமான ஆயுதங்கள் இருப்பதனால் தீவகத்திலுள்ள மக்களின் பாதுகாப்பு என்பது பெரும் கேள்விக் குறியாகியுள்ளது. கடந்த காலங்களிலே தீவகப்பகுதிகளிலே பல்வேறு கடத்தல்கள், கைதுகள், சித்திர வதைகள், காணாமற்போதல்கள், படுகொலைகள், கற்பழிப்புகள், அசம்பாவிதங்கள் நடந்தேறியிருந்த நிலையில் போருக்குப் பின்னரும் இத்தகைய அடாவடி நிகழ்வுகள் தொடருமெனில் கூட்டமைப்பு வெறுமனே அதனைக் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்காது.
தீவகப் பகுதிகளிலுள்ள முன்பள்ளிகள், விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் நடைபெறும் பொது நிகழ்வுகளுக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு பின்பு இங்குள்ளவர்கள் எம்மை விருந்தினர்களாக அழைக்கின்றனர். நிகழ்வுகளுக்கு பின்பு எம்மை அழைத்தவர்களை இங்குள்ள கட்சியினர் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் யாரைக் கேட்டு அழைத்தீர்கள் என அச்சுறுத்தியிருக்கிறார்கள்.
இத்தகைய செயல்கள் அரசியல் பண்பும் நாகரி கமும் மனிதகுல பண்பாடும் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். இங்குள்ள மக்கள் தாங்கள் விரும்பும் கட்சியை ஆதரிக்கவும் பொது நிகழ்வுகளுக்கு தாங்கள் விரும்பும் பிரமுகர்களை கட்சி வேறு பாடின்றி அழைப்பதற்கும் ஏதுவான சுதந்திரமான சூழ்நிலை நிலைநிறுத்தப்பட வேண்டும். அவ்வாறான சூழ்நிலையை உருவாக்குவதற்கு வடக்கு மாகாண சபையில் இருந்து கொண்டு நாம் குரல் கொடுக்கின்றோம். தொடர்ந்தும் கொடுப்போம் - என்றார். (வ-5)



கிராம மக்களின் பங்களிப்புடன் கிராமங்களின் அபிவிருத்தி என்ற திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேசசபை அல்லைப்பிட்டியில் தனது முதலாவது அபிவிருத்தி நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளது. அது தொடர்பான கலந்துரையாடல் வேலணைப் பிரதேச சபையின் அல்லைப்பிட்டி உப அலுவலகத்தில் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் தலைமையில் நடைபெற்றது. அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுடன் கலந்துரையாடல் இடம்பெறுவதைக் காணலாம். (வ-7)

## போரின் பின்னரும் ஊடகவியலாளர் மீது தாக்குதல் ஊடக சுதந்திரத்தைக் கேள்விக்கு உள்ளாக்கியது

### வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் கண்டனம்



சித்தார்த்தன்

போர் முடிவடைந்த பின்னரும் ஊடகவியலாளர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது ஊடக சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தியுள்ளது என்றும் இதனைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் வடமாகாண சபை உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் விடுத்த கண்டன அறிக்கையில் ;
யாழ். வடமராட்சி பகுதியில் வைத்து ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இலங்கையில் புதிதல்ல. இருப்பினும் போர் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்த நிலையில் கூட இவ்வாறான சம்பவங் கள் இடம்பெறுவது இதன்பின்னணியில் அரசு உள்ளதா? என்ற சந்தேகத்தை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.
ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற தாக்குதலுக்குரிய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படு வது குறைவு. இதனை ஜன நாயக செயற்பாடுகளுக்கு விடப்படுகின்ற அச்சுறுத்த லாகவே பார்க்க முடிகின்றது. இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தாது. நல்லிணக்கம் பற்றி பேசு வதில் பயனில்லை. எனவே குற்றவாளிகள் யாராக இருந்தாலும் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும்.
இத்தாக்கு தலை வன்மையாகக் கண்டிப் பதாகவும், இவை தொடரக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (வ)

## ஆக்கத்திறன் போட்டி

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சால் இந்த வருடத்துக்கான அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சிறுகதை, சிறுவர்கதை, பாடல், கவிதை, குறுநாடகம், ஓவி யம் ஆகிய ஆறுவகையான போட்டிகளை நடத்தவுள்ள னர். தற்போது சேவையில் உள்ள அரச ஊழியர்கள் மட்டும் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும். போட்டிக்கான ஆக்கங்களை எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, எட்டாம்மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பிற்பகலில் பஸ் சேவை இடம்பெறாததால் இன்னல்நிலை

கிளிநொச்சி, ஏப்.19
பிற்பகல் வேளைகளில் பஸ் சேவைகள் இடம்பெறாததால் பூநகரியிலிருந்து கிளிநொச்சி நகருக்கு வருவதில் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
கிளிநொச்சி நகரிலிருந்து பூநகரிக்குப் பல்வேறு தேவைகள் நிமித்தமாகப் பலர் தினமும் சென்று வருகின்றனர்.
ஆனால் தினசரி பிற்பகல் 2.15 மணிக்கு வாடியடிச் சந்தியிலிருந்து அரச பஸ் கடைசியாகத் தனது பயணத்தை கிளிநொச்சி நகரை நோக்கி ஆரம்பிக்கின்றது.
இதன் பின்னர் பூநகரியிலிருந்து கிளிநொச்சிக்கான பஸ் சேவைகள் இடம் பெறுவதில்லை. இதனால் பிற்பகல் வேளைக ளில் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இவர்கள் தேவை நிமித்தம் மாலையில் கிளிநொச்சிக்குச் செல்ல வேண்டுமானால் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்களில் சாவகச்சேரி சென்று பின்னர் கிளிநொச்சி செல்லும் அவல நிலை காணப்படுகின்றது. பூநகரியிலிருந்து மாலை 5 மணி வரையாவது கிளிநொச்சி நகருக் கான பஸ் சேவைகளை நடத்துமாறு மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (க-18)

## வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாந்தை கிழக்குப் பிரதேசம்

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் நிலவும் வறட்சி காரணமாக பெரும் பாதிப்பு ஏற்பட்டுள் ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன் தெரிவித்தார்.
அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;
விநாயகபுரம், பாண்டியன் குளத்தின் 50 வீட்டுத் திட்டம் , கரும்புள்ளியான் ஆகிய கிரா மங்களுக்கு மாந்தை கிழக் குப் பிரதேச சபையினர் குடிதண்ணீரை வழங்கி வருகின்றனர். தொடர்ந்தும் மழை பெய்யாது வறட்சி தொடருமானால் இங்கு பெரும் குடிதண்ணீருக்கான நெருக்கடி உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார். (க-18)

உங்கள் ஆலய திருவிழாக்களில்.....
கனடாவில் இருந்து வருகை தந்துள்ள,
அகில உலக புகழ் நல்லூர்
ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை
அழைக்க விரும்புகிறீர்களா?
தொடர்பு: வில்லிசை சக்கரவர்த்தி கலைமாமணி
டாக்டர் S.S. சர்மா (குருஜி)
077 706 4247 (49974) (10)
(சங்கானை - முருக மூர்த்தி கோயிலடி)

கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையம்
மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்
49ஆவது ஆண்டு விழாவும், ஈஸ்ரர் கலை நிகழ்வுகளும் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி (ஆண்கள்) 50 km காலம்: 21.04.2014
திங்கள், காலை : 6.00 மணி
பதிவுக்கட்டணம் : ரூபா 500.00 (48966) (10.6)
தொடர்புகளுக்கு: 077 978 8746 077 482 5355



நல்லூர் தெற்கு றக்கா லேன் அருள்மிகு ஸ்ரீ பத்தினாச்சி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட (9) பக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2014
இன்று (19.04.2014) சனிக்கிழமை
எண்ணெய்க் காப்பும்
நாளை (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.02 மணிக்கு
மஹா கும்பாபிஷேகமும் நடைபெறும்.
இந்நிகழ்வில் அனைவரும் வருகை தந்து
அம்பாளின் அருள்பெற வேண்டுகின்றோம்.
ஆலய ஸ்தானிக குரு
பிரம்மஸ்ரீ சோமகேதீஸ்வர சர்மா

வெள்ளவத்தை
அருள்மிகு நாகபூசணி அம்மன் ஷேஸ்த்திரம்
நாகபூசணி அம்மா அவர்கள்
யாழ் வருகிறார்
திருமணம், கல்வி, தொழில் போன்ற
தடைகள், நோய், நாகதோஷம், குழந்தைப் பேறின்மை,
ஏனைய துன்பம் உள்ளவர்கள் வந்து
அருள்வாக்கு கேட்கலாம்.
திகதி : 19.04.2014இலிருந்து 21.04.2014 வரை
நேரம் : காலை 10.30 - 12.00 மணி வரை
மாலை 4.30 - 6.00 மணி வரை
20.04.2014 அன்று அன்னதானம் நடைபெறும்.
(C/13386) (7.6.3)

VACANCY
யாழ்.நகரில் உள்ள எமது கிளை நிறுவனத்திற்கு Accounting தகைமைகள் உடைய HNDA, AAT முழுமையாக அல்லது பகுதியாக படித்த பெண் பிள்ளைகள் தேவை. Accounting Soft ware அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. உங்களது CVயினை கீழ்க்காணும் Email Addressஇற்கு அனுப்பிவைக்கவும்.
ngcj169@gmail.com
அல்லது 077 160 5946 (46860) (12.3.6)
எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## நெல்லி மரத்தில் இருந்து வீழ்ந்து மாணவன் காயம்

வலி.வடக்கு, ஏப். 19

நெல்லிக்காய் பிடுங்க மரத்தில் ஏறிய பாடசாலை சிறுவன் மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அளவெட்டி முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சுன்னாகம் தமிழ் கந்தையா வித்தியாலயத்தில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் இராசதுரை ஜெனோதரன் (வயது - 14) என்ற மாணவனே முகத்தில் காயம் ஏற்பட்ட நிலையில் மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-86)

# தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை

### ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

கொழும்பு,ஏப்.19

அம்பாந்தோட்டையில் வைத்து ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் சர்வதேச மற்றும் தேசிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமானநிலையத்தை பார்வையிட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுமுன்தினம் சென்றது. இந்தக் குழுவினர் மீது, அம்பாந்தோட்டை நகரசபைத் தலைவர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் என்று நம்பப்படுவோர் முட்டைகளை வீசித் தாக்கியதுடன் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினர் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் எதிர்கட்சித் தலைவர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடமும், சபாநாயகரிடமும் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்யவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். அத்துடன் பொலிஸார் தமது கடமைகளை உரிய வகையில் செய்யவில்லையா என்ற கோணத்திலும் விசாரணைகள் இடம்பெறுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடல்மார்க்கமாக தங்கம் கடத்தல்

சென்னை, ஏப்.19

விமானங்களின் ஊடாக இந்தியாவுக்குள் தங்கம் கடத்தப்பட்டமை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், தற்போது இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக தங்கம் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய புலனாய்வு அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து தங்கம் விமானம் மூலம் கடத்திவரப்பட்டது. எனினும் தமிழகம் மற்றும் கேரளா போன்ற பகுதிகளில் இந்தக் கடத்தல்கள் முறியடிக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் டுபாய் உள்ளிட்ட நாடுகளில் இருந்து இலங்கைக்கு தங்கம் கொண்டுவரப்பட்டு, இலங்கையில் இருந்து மீனவர்களின் துணையுடன் தமிழகத்துக்கு கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழக கரையோரப் பகுதிகளில் சுங்க புலனாய்வு பிரிவினரும், கடலோர காவற்படையினரும் அதி உச்ச விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# வீடு புகுந்து உடைமைகளை சேதமாக்கியவருக்கு மறியல்

வீடு புகுந்து வீட்டு உபகரணங்களை சேதப்படுத்தி அட்டகாசம் புரிந்தமை தொடர்பான முறைப்பாடு ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாவற்குழி மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 11 ஆம் திகதி வீட்டின் உரிமையாளர்கள் இருக்கும் போதே அடாவடியாக உள்ளே புகுந்த நபர்கள் வீட்டின் உபகரணங்களை அடித்து நொருக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதனால் 30 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று வீட்டின் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். சந்தேகநபர் எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத் தரவிடப்பட்டுள்ளது. (வ-14)

## சுவர் வீழ்ந்து ஒருவர் காயம்

புதிதாகக் கட்டிக் கொண்டு இருக்கும் வீட்டின் சுவர்களுக்கு தண்ணீர் ஊற்றியவர் மீது வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் அவர் படுகாயமடைந்தார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அளவெட்டி மத்தியைச் சேர்ந்த 46 வயதான அ.உதயகுமார் என்பவரே காயமடைந் தவராவர். இவர் காலில் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-86)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சுயாட்சியைக்

எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

அரசு அண்மையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருந்தது. ஆனால் மத்திய அரசின் தலையீடுகள் இல்லாமல் வடக்கு மாகாண சபையை இயங்குவதற்கு அனுமதிக்கப்படாத வரையில் அது பயனற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதைப் பற்றியும் அரசு அவசரமாகப் பேச்சு நடத்த வேண்டும்.

அதேசமயம், ஐ.நா. விசாரணை ஆணைக்குழுவுக்கு ஒத்துழைக்கும் வகையில் உள்ளூரில் விசாரணைப் பொறிமுறை ஒன்றை அரசு உருவாக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறோம் - என்றுள்ளது. (உ)

### சிவப்பு

பேச்சாளர் கூறியிருந்தார். எனினும் இன்ரபோல் பொலிஸாரின் உத்தியோகபூர் இணையத்தளத்தில் அவரது பெயர் தொடர்ந்தும் காணப்படுகிறது.

குமரன் பத்மநாதன் புலிகளின் உயர்மட்ட தலைவர்களில் ஒருவராக இருந்ததுடன், அந்த அமைப்பின் சர்வதேச வலைமைப்புக்கு பொறுப்பாகவும் ஆயுத விநியோகஸ்தராகவும் ஈடுபட்டு வந்தார்.

மலேசியாவைத் தளமாகக் கொண்டு கப்பல் நிறுவனம் ஒன்றை 1987 ஆம் ஆண்டு முதல் நடத்தி வந்ததார். விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக மலேசியா கண்டறிந்ததை அடுத்து அவர் அந்த நாட்டில் இருந்து வெளியேறும் கட்டாயம் ஏற்பட்டது. அதன்பின்னர் கே.பி தாய்லாந்துக்கு தனது நகர்வுகளை மாற்றிக் கொண்டார். அங்கிந்து செயற்பட்ட கே.பி. விடுதலைப் புலிகளின் வங்கி, கொள்வனவு மற்றும் கப்பல் பிரிவுக்கு தலைவராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டார்.

அவர் தாய்லாந்து குடியுரிமையை கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது.

கே.பி., ஜோகன்னஸ்பேர்க், ரங்கூன், சிங்கப்பூர் மற்றும் பாங்கொக் நகரங்களில் பொலிஸாரினால் தேடப்படும் நபராக இருந்து வந்தார். அமெரிக்காவின் சி.ஐ.ஏ. பிரிட்டனின் எம்.ஐ.-5 உட்பட உலகின் முன்னணி புலனாய்வு முகவர் அமைப்புகள் அவருக்கு எதிராக விசாரணைகளை நடத்தி வந்தன.

லண்டன், பிராங்பேர்ட், டென்மார்க், ஏதென்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவில் அவருக்கு வங்கி கணக்குகள் இருந்தன என்றும் 200 இற்கும் மேற்பட்ட கடவுச்சீட்டுக்களை பயன்படுத்தி வந்தார் என்றும் கூறப்படுகிறது. இலங்கையில் இருந்து பல விடுதலைப் புலிகள் தப்பிச் செல்ல உதவும் வகையில் ஐக்கிய நாடுகள் மற்றும் மேற்குலக நாடுகளுடன் இணைந்து கே.பி பணியாற்றினார் என்று 2011 ஆம் ஆண்டு அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த நிலையில் 96 இலங்கையர்களின் பெயர் இன்ரபோலின் சிவப்பு பட்டியலில் இருப்பதாக பொலிஸ் பேச்சாளர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்ததுடன், அந்தப் பெயர்ப் பட்டியலில் கே.பியின் பெயர் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (ற-5)

### மூவர்

இந்தியாவின் மேற்கு மண்டல நீதிபதிகள் மாநாட்டில் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு முன்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 7 பேரை விடுவிப்பது என்ற தமிழக அரசின் முடிவுக்கு எதிராக மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கில் மத்திய அரசு சார்பில் முன்னிலையாகி வாதிட்ட சட்டத்தரணி வாகன்வதி, குற்றம்சாட்டப்பட்டவர்களை விடுவிக்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையென்று கூறினார்.

ஆனால் இந்த விவகாரத்தில் 7 பேரை விடுவிக்க தமிழக அரசுக்கே அதிகாரம் உள்ளது என்ற வாதத்தை தமிழக அரசு வழக்கறிஞர் ராகேஷ் திரிவேதி வலியுறுத்தினார்.

மத்திய, மாநில அரசு வாதம் முடிவடைந்ததை அடுத்து உயர் நீதிமன்றம் இவ்வழக்கின் தீர்ப்பை ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் வழக்கின் தீர்ப்பு ஒருவாரத்துக்குள் வழங்கப்படும் என்று நீதிபதி சதாசிவம் கூறியுள்ளார். உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பதவியில் இருந்து ஏப்ரல் 25 ஆம் திகதியுடன் சதாசிவம் ஓய்வு பெறுவது குறிப்பிடத்தக்கது. (ற-5)

### டிராக்டரில்

மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வயலில் அறுவடை செய்த நெல்லை டிராக்டரில் ஏற்றி வரும் போது மழை பெய்ததை அடுத்து நெல் மூடைகளை தறப்பாளால் மூடிக் கட்டியதுடன் அதன் மேல் அமர்ந்து பயணித்துள்ளார் வரதகுமார். அதன்போது தவறி வழுக்கி விழுந்த அவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த அவர் மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து வவுனியாவுக்கு மாற்றப்பட்ட நிலையில் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்தார். இது தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-400,422,18)

### வெடிக்காத

பிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக மாங்குளம் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவிக்கப்பட்டதை அடுத்து அவ்விடத்துக்கு வருகை தந்த குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினரால் ஷெல் மீட்கப்பட்டு, சுருவில் பகுதியில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ற-400,402,18)

### 'தமிழீழம் மலரும்'

என்றும் குறித்த நபரது மோட்டார் சைக்கிள் இலக்கத்தை வைத்து அவரை நேற்று முன்தினம் இனங்கண்டு பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

கொக்குவிலைச் சேர்ந்த ஜெயதாஸன் கஜானன் (வயது - 24) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைச் சந்திக்க வந்த இணுவிலைச் சேர்ந்த அவரது மற்றொரு நண்பருக்கும் அதில் தொடர்புள்ளது என்று கூறிக் கைது செய்துள்ளனர் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார். கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று மாலை வரையில் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டே விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை குறித்த மோட்டார் சைக்கிளை கடந்த புதன்கிழமை சாவகச்சேரியை சேர்ந்த தனது நண்பரொருவர் வாங்கிச் சென்றார் என்று கொக்குவிலில் கைது செய்யப்பட்ட நபர் தெரிவித்துள்ளார். குறித்த நபரையும் கைது செய்யும் நோக்குடன் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

கடந்த மார்ச் மாதம் இவ்வாறானதொரு துண்டுப் பிரசுரம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பளையில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து புலிகளை மீளுருவாக்கம் செய்கின்றார்கள் என்று தெரிவித்து அதனுடன் தொடர்புடையவர்கள் என்று கூறி கோபி, அப்பன், தேவிகன் ஆகியோர் தேடப்படுவதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவு அறிவித்தது. அதனைத் தொடர்ந்து 65 பேர் வரையில் கடந்த ஒரு மாத காலத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி தேடப்பட்ட கோபி, அப்பன், தேவிகன் மூவரும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது. இதனையடுத்து கைது செய்யப்பட்ட 27 பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, துண்டுப் பிரசுரம் ஒட்டினார்கள் என்று தெரிவித்து மீளவும் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற-5)

### குற்றச் செயல்களில்

தின் பெயரில் 10 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 22 பேரும், வாகன விபத்துக்கள் காரணமாக 8 பேரும், மது போதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த 7 பேரும், களவு தொடர்பாக ஒருவரும், சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டதாக 4 பேரும், பாதுகாப்பு காரணமாக ஒருவரும், நுளம்புப் பெருக்கத்துக்கு ஏற்ப சூழலை வைத்திருந்த ஒருவரும் என்று 126 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்டபட்ட பகுதிகளில் கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 75 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றம் விளைவித்தமைக்காக 2 பேரும், வேறு குற்றங்களுக்காக ஒருவரும், பிடியாணை பிறப்பித்த 4 பேரும், சந்தேகத்தின் பெயரில் 4 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய 4 பேரும், வெவ்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 60 பேரும் என 75 பேர் கைது செய்யபடடுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகளை எதிர்கொள்கின்றனர்"- என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-14)

### இந்தியா

அரச தரப்பிலிருந்து கூறப்படுவது தொடர்பில் நேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து கூறும்போது;

"புலிப்பூச்சாண்டி காட்டிதான் இந்த அரசு இதுவரைகாலமும் ஆட்சிபீடத்தில் இருந்து வந்தது. தற்போது புலி அச்சம் குறைந்துள்ள நிலையில், மோசடி அரசின் செல்வாக்கும் மக்கள் மத்தியில் குறைந்து வருகின்றது. நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தல் இதற்குச் சிறந்த சான்றாகும்.

எனவே, மீண்டும் புலிப் பீதியை கிளப்பிவிட்டு, சிங்கள, பௌத்த வாக்குகளை சூறையாடுவது தான் அரசின் நோக்கமாகும். அதற்காகத்தான் இந்தப் புலி நாடகம். அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரை இந்த நாடகம் ஓடும்.

மீண்டும் புலிகள் உருவாவதற்கான சாத்தியம் இல்லை. இந்தியாவின் ஆதரவு இருந்தால் மாத்திரமே தமிழர் தரப்பால் மீண்டுமொரு முறை ஆயுதப் போராட்டத்துக்குச் செல்லமுடியும். இது தமிழர்களுக்கும் நன்குதெரியும். கொழும்பு துதிப்பாடும் டில்லி இனியும் ஆயுதப்போராட்டத்தை அங்கீகரிக்காது. உலகமும் அதை ஏற்காது. எனவே அரசு புலிக்கதை கூறுவது அரசியல் நோக்கங்களுக்காகும். இதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்கு மக்கள் தமக்குரிய ஜனநாயக உரிமைகளையே கோருகின்றனர். இதை மஹிந்த அரசு நிச்சயம் வழங்கவேண்டும். இதை வழங்க மறுப்பதால்தான் இந்த நாட்டுக்கு நல்லிணக்கம் இன்னும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது"- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-சி)

## மாவட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஏப்.19
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.
இதில் ஆண்களுக்கான சுற்றுப் போட்டி இமையாணன் அ.த.க.பாடசாலை மைதானத்திலும், கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளதுடன் பெண்களுக்கான போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ற-422)


## வென்றது பொம்மர்ஸ்

யாழ்ப்பாணம், ஏப்.19
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
அதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## கபடி, எல்லே போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.19
கிளிநொச்சி மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி, எல்லே போட்டிகள் இன்று சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித் தியாலய மைதானத் தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம் பெறவுள்ளன.
இதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகளும் ஆண்,பெண் இருபாலாருக் குமான கரப்பந்தாட்ட போட்டிகளும் பச்சிலைப் பள்ளி பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ற-23)

## விபுலானந்தா சம்பியன்



யாழ்ப்பாணம், ஏப்.19
கரைச்சி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் விபுலானந்தா இளைஞர் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
கடந்தசனிக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் உழவர் ஒன்றிய இளைஞர் கழக அணியை எதிர்த்து விபுலானந்தா இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.
3செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் விபுலானந்தா இளைஞர் கழகஅணி 2:0 என்றசெற் கணக்கில் வெற்றி பெற்றுசம்பியன்ஆனது. (சு-23)

# வீறு கொண்டது விக்ரோறியா; அடங்கியது ஆவரங்கால் மகாஜனா

நெல்லியடி, ஏப்.19
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி சம்பியனாகியது.
தொடரின் இறுதியாட்டம் நெல் லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் விக்ரோறியா கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனாக் கல்லூரி அணி மோதியது.
முதற்சுற்று இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது. இறுதியில் விக்ரோறியா கல்லூரி அணி 27:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
இரண்டாவது சுற்றில் வேகம் கொண்ட ஆவரங்கால் மகாஜனாக் கல்லூரி அணியின் புள்ளிகள் உயர தம்மை சுதாகரித்துக் கொண்ட விக்ரோறியாக் கல்லூரி அணி வீரர்கள் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி தமது புள்ளிகளை உயர்த்தினர்.
குறிப்பிட்ட சில நிமிடங்களில் விக்ரோறியாக் கல்லூரியின் புள்ளிகள் - ஆவரங்கால் மகாஜனாவைத் தாண்டின. இறுதியில் விக்ரோறியா கல்லூரி அணி 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. 2 ஆம் இடத்தை மகாஜனாக் கல்லூரி பெற்றது.
3 ஆம் இடத்துக்கான போட்டியில் புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டிஅமெரிக்கன்மிஷன் கல்லூரி அணி மோதியது. இதில் நேர் இரு சுற்றுக்களிலும் புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி அணி 25:15, 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப்பெற்றது. (ற-422)



# கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. அணியை வீழ்த்தியது யாழ்.சென்றல்

யாழ்ப்பாணம், ஏப்.19
யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும், கிரிக்கெட் அணியும் இணைந்து நடத்தும் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் கடந்த வாரம் யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.
அதில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்கை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.
கோகுலதாஸ் 100 ஓட்டங்களையும், மதுஷன் 33 ஓட்டங்களையும், பிரணவன் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக அதிக பட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்து வீச்சில் யாழ் .சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பில் சுபதிஸ் 4 இலக்குகளையும், யசிந்தன் 3 இலக்குகளையும், திருக்குமாரன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



**கோகுலதாஸ் 100 ஓட்டங்களையும், மது ஷன் 33 ஓட்டங்களையும், பிரணவன் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக அதிக பட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.**

227 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணி 43:3 பந்துப் பரிமாற்றங்கள் நிறை வில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
இதில் றஜீவ்குமார் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும், சுதர்சன் 46ஓட்டங்களையும், பாலேந்திரா 41 ஓட்டங்களையும், கலிஸ்ரன் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் ரவிசங்கர் 3 இலக்குகளையும், கோகுலதாஸ் 2 இலக்குகளையும், கபிலன், கஜதீபன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும், வீழ்த்தினர்.
ஆட்டநாயகனாக கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் கோகுலதாஸ் தெரிவானார். (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப் .19
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உதயன் பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

◆◆◆

யாழ்ப்பாணம், ஏப்.19
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம்நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
அதில் இன்று சனிக்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில்பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

### தாச்சி இறுதிப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் மின்னொளியில் நடத்தி வரும் "லீக்" முறையிலான தாச்சிச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டியில் மயிலிட்டி கண்ணகிவிளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுமடம் வைகறைவிளையாட்டுக்கழ்கம் மோதவுள்ளது. (ஓ-288)



இளவாலை பொலிஸ் நிலையத்தினர், பண்டத்தரிப்பு வர்த்தக சங்கம் மற்றும் இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகத்தினரும் இணைந்து சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்திய விளையாட்டு விழாவின் போது ஆண்களுக்கான தலையணைச் சண்டைப் போட்டியில் மோதிக்கொள்ளும் வீரர்கள். (ற-23)

# ஆட்டம் ஆரம்பம்




ஐ.பி.எல். சூதாட்ட விவகாரத்தால் நடன அழகிகளுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில், அவர்களின் ஆட்டத்துக்கு ஐ.பி.எல். நிர்வாகம் தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

ஐ.பி.எல். 6 ஆவது தொடரின் போது சூதாட்ட பிரச்சினை வெடித்ததை தொடர்ந்து இனி மேல் ஐ.பி.எல். போட்டிகளில் நடன அழகிகளின் (சீயர்ஸ் லீடர்) ஆட்டம் இடம்பெறாது என்றும், வீரர்கள் உட்பட அணி நிர்வாகிகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் எனவும் இந்திய கிரிக்கெட் சபை இடைக்கால தலைவராக இருந்த ஜக்மோகன் டால்மியா அறிவித்திருந்தார்.

இதன்படி 7 ஆவது ஐ.பி.எல். தொடர் போட்டியில் நடன அழகிகளின் ஆட்டம் இருக்காது என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடைசி நேரத்தில் அணி உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நடன அழகிகளின் ஆட்டத்துக்கு ஐ.பி.எல். நிர்வாகம் சத்தமின்றி அனுமதியளித்துள்ளது.

இதை தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்து வரும் ஐ.பி.எல். முதல்கட்ட ஆட்டங்களில் நடன அழகிகளின் ஆட்டம் ஆரவாரமின்றி அரங்கேறி வருகிறது. (5)

# அவசரக் கூட்டம்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் அவசரக் கூட்டம் நாளை இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டம் தொழிற்பாட்டு நிர்வாக சபைக் கூட்டமாக அமையவுள்ளது. மாநில கிரிக்கெட் சபைகளின் வேண்டுகோளைத் தொடர்ந்து இந்தக் கூட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையிலேயே மாநில கிரிக்கெட் சபைகள் இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளன.

இந்த நிலையில் வழக்குத் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் இந்தக் கூட்டத்தில் காரசாரமாக இடம் பெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஸ்ரீநிவாசன் மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை அடுத்த வழக்கு விசாரணைக்கு முன்னர் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

> ஸ்ரீநிவாசன் மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் முன் வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கூட்டம் அறிவிக்கப்பட்டதையடுத்து ஐ.பி.எல். ஆரம்ப நிகழ்வுகளுக்கு சென்ற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நிர்வாகிகள் உடனடியாக நாடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை சுனில் கவாஸ்கர் இந்த கூட்டத்தில் பங்கெடுப்பதா, இல்லையா என்ற குழப்பங்கள் நிலவுகின்றபோதும் அவர் பங்கேற்பார் என்றே தெரிய வருகின்றது. நீதிமன்றினால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபையின் இடைக்கால தலைவராக அவர் நியமிக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# நடால் - 300

மொண்டி கார்லோ மாஸ்டர்ஸ் ஏடிபி போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் களிமண் நாயகன் நடால் வெற்றி பெற்றார். இதன் மூலம் களிமண் தரையில் தனது 300 ஆவது வெற்றியைப் பதிவு செய்தார். மொனாகோவில் உள்ள மொண்டி கார்லோவில் களிமண் ஆடுகளத்தில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3 ஆவது சுற்று ஆட்டம் வியாழக்கிழமை நடந்தது. இதில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள நடாலும், இத்தாலியின் அண்டிரியஸ் செப்பியும் மோதினர்.

இதில் நடால் 6-1, 6-3 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்றார். இதன் மூலம் களிமண் ஆடுகளங்களில் 300 வெற்றிகளைப் பெற்ற 11 ஆவது வீரர் என்ற பெருமையை நடால் பெற்றார். இதற்கு முன் ஸ்பெயின் வீரர் கார்லஸ் மோயா கடைசியாக 300 ஆவது வெற்றியைக் கடந்திருந்தார். 337 வெற்றிகளைக் குவித்த இவர், 2007 இல் ஓய்வு பெற்றார். மொண்டி கார்லோ ஏடிபியில் எட்டு முறை பட்டம் வென்ற நடால் காலிறுதிச் சுற்றில் தரவரிசையில் ஆறாவது இடத்தில் உள்ள சக நாட்டு வீரர் டேவிட் பெரரை எதிர்கொள்கிறார். (5)



# அப்பாவானார்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வீரர் யூசுப் பதானின் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. அபுதாபியில் நடந்த முதல் ஐ.பி.எல். ஆட்டத்தில் கொல்கத்தா - மும்பை அணிகள் மோதின. இதில் கொல்கத்தா அணி வெற்றி பெற்றது.

இந்த தொடக்க ஆட்டம் நிறைவடைந்த சிறிது நேரத்தில் யூசுப்பதானுக்கு ஆண் குழந்தை பிறந்ததாக இனிப்பான தகவல் கிடைத்தது. கிடைத்த தகவலையடுத்து அவர் உடனடியாக இந்தியாவுக்கு புறப்பட்டார்.

இதனால் டுபாயில் டெல்லி அணிக்கெதிராக நடக்கும் கொல்கத்தா அணியின் 2 ஆவது ஆட்டத்தில் அவர் விளையாடமாட்டார் என்றும், 3 ஆவது ஆட்டத்துக்கு முன்பாக அணியுடன் இணைந்து கொள்வார் எனவும் தெரியவந்துள்ளது. (5)




# ஐ.பி.எல். இமாலய இலக்கை எட்டி பஞ்சாப் அணி வெற்றி




ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்று அபுதாபியில் நடைபெற்ற 3ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை 6 இலக்குகளால்

அபார வெற்றி கொண்டது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி. அபுதாபியில் நேற்று இடம்பெற்ற இவ்வாட்டத்தில் நாணயச்சுழற்சியில் வென்று முதன் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணியின் தொடக்க வீரர்கள் ஸ்மித், மெக்கல்லம் ஆகியோர் அதிரடியாக ஆடி அரை சதம் கடந்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்க 123ஐத் தொட்டபோது மெக்கலம் 67ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவர் 45 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக இந்த இலக்கை எட்டினார். இதேபோல், அபாரமாக ஆடிய மற்றொரு தொடக்க வீரர் ஸ்மித், 43 பந்துகளில் 6 நான்கு ஓட்டங்கள்3 ஆறுஓட்டங்களுடன் 66 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவர் களைத் தொடர்ந்து ரெய்னா 24 ஓட்டங்களிலும், அணித்தலைவர் டோனி 26 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க , சென்னை அணி 20 பந்துப்பரி மாற்றங்களில் முடிவில் 4 இலக்குகளை இழந்து 205 ஓட்டங்களைக் குவித்தது.

பஞ்சாப் அணி தரப்பில் பாலாஜி 2 இலக்குகளையும், பட்டேல், அவானா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.. இதையடுத்து 206 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை எதிர்த்து களமிறங்கிய பஞ்சாப் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர் ஷேவாக் அதிரடியில் ஈடுபட்டார். 10 பந்து களில் 4 நான்கு ஓட்டங்கள் விளாசிய அவர் 19ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் . அவரை தொடர்ந்து புஜாரா 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய மக்ஸ்வெல்லும் டேவிட் மில்லரும் அதிரடி ஆட்டத்தில் இறங்கினர். இதனால் பஞ்சாப் அணியின் ஓட்ட வேகம் எகிறியது.. அதிரடி காட்டிய மக்ஸ்வெல் 43 பந்துகளில் 15 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்சருடன் 95 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். பின்னர் டேவிட் மில் லர் அடுத்தடுத்து சிக்சர்கள் விளாசி 30 பந்துகளில் 50 ஓட்டங்கள் குவித் தார்.

இவருடன் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி பதற்றமின்றி விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார். இறுதியில் 18.5 பந்துப்பரிமாற்றங்களில் பஞ்சாப் அணி 206 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியைச் சேர்ந்த மக்ஸ்வெல் தெரிவுசெய்யப்பட்டார். (400)

# 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



செல்வி
## கஜந்தன் சந்தோஷி

தோற்றம் 06.07.2005 — மறைவு 21.03.2014

கடந்த 21.03.2014 சிவபதம் அடைந்த எங்கள் அன்புச் செல்வம் கஜந்தன் சந்தோஷி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் (நாரம்மல-குருநாகல்) நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புச் செல்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியோருக்கும் அனுதாபத்தைப் பத்திரிகைவாயிலாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும். தொலைபேசி மூலமும் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள். மேலும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

எமது அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.
(நடராசா கஜந்தன்-
நியூ மைதிலி
ஜுவல்லறி உரிமையாளர்)



இல.174,தெமட்டகவல,
நாரம்மல,குருநாகல்.
077 9204246 / 077 170 5322
0777 079 374 /021 221 7878

**குறிப்பு:**
அன்னாரின் குருநாகல் இல்லத்தில் நடைபெறும் கிருத்தியத்தை முன்னிட்டு இன்று (19.04.2014) இரவு 7.00மணிக்கு இல.38,40 கஸ்தூரியார் வீதியில் உள்ள நியூ மைதிலி ஜுவல்லறியில் இருந்து பஸ் புறப்படும். எனவே எங்களுடன் பயணிக்கலாம்.

(C/13675)(3.4.3)

# போராடி வென்றது ராஜஸ்தான்

கைதராபாத் சண்ரைஸ் அணியை பலத்த போராட்டத்தின் மத்தியில் நான்கு இலக்குகளால் வெற்றி கொண்டது ராஜஸ்தான் றோயல்ஸ்.

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் அபுதாபியில் நேற்று நடைபெற்ற நான்காவது லீக் ஆட்டத்தில் ஐதராபாத் சண்ரைஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணித் தலைவர் வோட்சன் களத் தடுப்பைத் தெரிவு செய்தார். இதனையடுத்து துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய ஐதராபாத் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. அவ் அணி சார்பாக ஷிகிர் தவான் 38 ஓட்டங்களையும் டேவிட் வோர்ணர் 35 ஓட்டங்களையும் ராகுல் 20 ஓட்டங்களையும் வேணு கோபால் ராவ் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் குர்கர்னி, ரிச்சட்சன், பாடியா ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 134 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 3 பந்துகள் மீதமிருக்க 6 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுநான்கு இலக்குகளால் வெற்றியீட்டியது.

அவ் அணி சார்பாக அஜித் ரகானே 59 ஓட்டங்களையும் பின்னி ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரேன், மிஸ்ரா தலா இரண்டு இலக்குகளையும் புவனேஸ்வர் குமார், இர்சாந்சர்மா, ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (400)

**தேவை**

யாழ் நகரிலுள்ள அலுவலகம் ஒன்றிற்கு Clerk (A/L சித்தியடைந்த பெண்கள் மட்டும்) பியோன் (தரம் 10 சித்தியடைந்த பெண்கள் மட்டும்) தேவை. தீவகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு: 021 499 3500 (46963)(7.6.3)

## உயர் கலைக் கல்லூரி

குளப்பிட்டிச் சந்தி — கொக்குவில்

**வர்த்தகப் பிரிவு**
**2016 A/L**

பொருளியல் - ஜெயக்குமார்
கணக்கீடு - சுரேன்
வணிகக்கல்வி - ரிஷிகேசன்

ஆரம்பம் : 19.04.2014
சனி பிற்பகல் ஒரு மணி

கலைப் பிரிவு
வகுப்புகளும் நடைபெறுகின்றன. (46858)(7.6.3)

**சவூதி அரேபியாவில் சாரதிகளுக்கான உடனடி பயணம்**

பிறந்திருக்கும் சித்திரை புது வருடத்திரல் இலவசமான பயண மொன்றினை மேற்கொள்ள தயாரகுங்கள். சவூதிஅரேபியாவில் Balathiya Driver 40 பேர் உடன் தேவை. (வயது 21 - 40 வரை) சம்பளம் 1000+ OT இலவசமாக பயணம் இரண்டே வாரத்துள் பயணமாகலாம் Srilanka Driving Light Vechile Liecnese போதுமானது தங்குமிடம், மருத்துவம் என்பன இலவசம் உங்கள் விண்ணங்கள் இன்று 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் Green Grass Hotel இல் காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். உடன் தொடர்புகளுக்கு: Lanka Voice 077 0584658 Lanka Voice Jaffna Branch No. 077 9527575

**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -**
Only Official FRENCH Centre

பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு

FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITWZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.

புதிய வகுப்புக்கள் 26.04.2014 8.30 a.m இன்றே பதிவு செய்யுங்கள்
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 021 2228093

# மரண அறிவித்தல்
## சிவராசா இராசம்மா



யாழ். வரணி, இயற்றாலையை பிறப்பிடமாகவும், வவுனியா பண்டாரி குளத்தை வதிவிடமாகவும் கொண்ட சிவராசா இராசம்மா 15.04.2014 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-பாறிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகர்-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகர் சிவராசாவின் அன்பு மனைவியும், சேதுப்பிள்ளை, குஞ்சுப்பிள்ளை, செல்லத்துரை, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாட்சாயினி (சுவிஸ்), கார்த்திகாயினி (பிரான்ஸ்), தர்மினி (கனடா), துவாரகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருச்செல்வம் (சுவிஸ்), திருச்செல்வம் (பிரான்ஸ்), சந்திரதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், திவ்யன், திபுசன், அபிலாஷ், ஆருஷன், பிருத்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கனகசிங்கம், இராசநாயகம், பாலசுப்பிரமணியம், செல்வராசா, ரூபவதி, பிறேமாவதி, கமலாவதி, நவரத்தினராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் உக்குளாங்குளத்திலுள்ள மருமகள்(தவக்குமார் ரமணி) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/2, பிரதான வீதி,
உக்குளாங்குளம்,வவுனியா.
தொ.பே. இல : 024 222 5655

தகவல் :
குடும்பத்தினர்.

(43257)(7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.